உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசபாநாதர் பேரில்

# முத்துத்தாண்டவர்

பாடியருளியகீர்த்தனம்- பதம்-

விட்டுப்போயிருந்த

சிலகீர்த்தனங்கள்.

சேர்க்கப்பட்டிருக்கின்றன

இவை.

**சா. விஸ்வநாதசுவாமி**

அவர்களால் பார்வையிடப்பட்டு,

**தி. ஸ்வாமிநாதசாஸ்திரியார்**

அவர்களது

சாஸ்திர ஸஞ்ஜீவிநீ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது ௵

சென்னை.



# விளம்பரம்

இதனால் சகலாஸ்திக ஜனங்களுக்கும் ம[illegible] தென்னவென்றால்.—இம்முத்திராக்ஷரசாலையில் இப்புத்தகமும் இன்னும் கிரந்தம், தமிழ், தெலுங்குபுஸ்தகங்களும், வர்த்தகர்களுக்கும், சில்லறைக்கும் விற்பனைக்குச் சித்தமாயிருக்கிறபடியால் வேண்டியவர்கள் இதனடியிற் கண்டிருக்கும் விலாஸத்திற்கு யெழுதி வீ. பீ. மூலமாய் வரவழைத்துக்கொள்ளலாம்.

இதின் விலை அணா ௨.

இப்படிக்கு,

தி. சுப்பிரமணியசாஸ்திரி,
சாஸ்திரஸஞ்சீவினிபிரஸ்,
நெ. 313 தங்கசாலைத்தெரு,
மதராஸ். (Madras.)

உ

சிவமயம்.

# முத்துத்தாண்டவர் சரித்திரம்.

சீர்தருகாவிரி திகழ் சோழநாட்டில், அடியார்க் கருள்செய்யும் பொருட்டுப் பரமசிவம் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற ஸ்தலங்களுள் ஒன்றாகித் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்து ஞானப்பாலுண்டருளிய மகாக்ஷேத்திரமாகிய சீர்காழியில் வீற்றிருக்கின்ற தோணியப்பருக்கு வாச்சியத்தொண்டுசெய்யும் பேறுபெற்ற குலத்திற்றோன்றித் தாண்டவனென்கிற பேர் பெற்றுச் சிவநேசத்துடன் வளர்ந்துவருகையில், முன்வினையினால் கர்மவியாதியொன்றுசம்பவிக்க-அதனால் தங்கள் குலத்துக்குரியதாகிய தொழில் கற்றுக்கொள்வதற்கில்லாமல், காலந்தோறும் ஆலயத்துக்குப்போய்ப் பிரமபுரீசரையும் திருநிலைநாயகியையுந் தோணியப்பரையும் பயபத்தியுடன் தரிசனஞ்செய்தும், மற்றக்காலங்களில் அந்தசிவாலயத் தொண்டுசெய்கின்றவளாய்ச் சிவநேசத்துடன் சிவாமகீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கும் ஒருதாசிவீட்டுக்குப்போய் அந்த தோத்திரங்களைக்கேட்டுக்கொண்டிருப்பார், அவள் சுற்றத்தாருக்கும் இவர்சுற்றத்தாருக்கும் அந்நியோந்நிய மின்மையால் அவள் வீட்டுக்குப்போகிறது சம்மதியில்லாமல் அவரிடத்தில் வெறுப்புற்று ஆதரணைசெய்யாமலிருந்தார்கள் அப்படியிருக்கையில், ஒருநாள் மிகவும், மனவருத்தமடைந்து சிவாலயத்திற்போய்ச் சுவாமியையும் அம்மையையும்தரிசித்துத் தோத்திரம்பண்ணிக்கொண்டிருந்து பசியினால் சரீரத்துக் கிளைப்புண்டாகச் சோகத்துடன் வாகனமிடங்குக்குள்போய்ப் படுத்துக்கொண்டு சிவத்தியானத்துடனே நித்திரை செய்துவிட்டார், அது அந்தக்கோயில் ஸ்தானிகருக்குத் தெரியாமையால் அர்த்தஜாமமானவுடன் கோயிற்றிருக்காப்பிட்டுக்கொண்டுபோய்விட்டார்கள்.

அவர்கள்போய்விட்டபின்பு சற்றுநேரத்திற்கெல்லாம் நித்திரைநீங்கி எழுந்து, மெய்ப்பிணியினாலும் பசிப்பிணியினாலும் வருந்தித் தோணியப்பரை தோத்திரஞ்செய்தார், உயிருக்குயிராயெங்கும்நிறைந்திருக்கும் பரமசிவம் அன்பனது வருத்தத்தைத் திருவுள்ளங்கொண்டு தம் மிடப்பாகத் துமையவளைப்பார்த்தருள, அந்தக்குறிப்பையுணர்ந்துகொண்டு சகல வுயிர்களையும் பெற்றவளாகிய உமை

யவள் கிருபைகூர்ந்து அந்தக்கோயில் பெரியகுருக்களுடைய பத்து வயதுள்ள குமாரத்தியைப்போல்வந்து விசனப்படுகிறவரைப்பார்த்து நீயேன் இப்படிவிசனப்படுகிறாயென்ன

தாயேநான்பூர்வம் என்னபாவஞ்செய்தேனோ தொலையாத கர்மவிபாதிசம்பவிக்க—அதனால் வருத்தப்படுகிறதுமன்றி வறுமைநோயென்பதொன்று நேரிட்டதனாலும் வருந்துகின்றேனென்று சொன்னார், அதைக்கேட்டு நீவிசனப்படவேண்டாம்-உனக்குச்சம்பவித்திருக்கிற வியாதியும் வறுமையும் நீங்கி நீசௌக்கியமடைவதற்கு நான் ஒருஉபாயஞ்சொல்லுகிறேன், ஆனாலிப்போதுனக்கு மிகுந்தபசியுண்டாயிருப்பதுபோற்காணுகின்றது, அந்தப்பசிதீர அன்னங்கொடுக்கிறேன் சாப்பிடென்று கோயில் அன்னம் வட்டகையுடன் கொடுக்க வாங்கிப்புசித்துப் பசிதீர்ந்தவுடன் என்தாயே இந்தவியாதிநீங்கத்தக்க வகையெதுவோ அதனைச்சொல்லவேண்டுமெனக்கோயில்குருக்கள் குமாரத்திபோல் வந்திருக்கும் பார்வதியார் நீ சிதம்பரத்திற்குப்போய்ச் சபாநாதரைப்பாடினால் இந்தவியாதி நீங்கி சௌக்கியமடையலாம் இதுதான் உபாயமென்றுசொல்ல

எனக்குப்பாடத்தெரியாதே நானென்னென்றுபாடுவேனென்றுசொன்னார், நீ அதைக்குறித்துயோசிக்கவேண்டியதில்லை, சிற்சபைக்கெதிரில்நின்று தரிசிக்கும்போது அங்குதரிசனத்திற்குவந்திருக்குந் திருக்கூட்டத்தாராலே என்னசொல் உண்டாகின்றதோ அந்தச்சொல்லைமுதலாகவைத்துக்கொண்டு பாடத்தொடங்கினால் சபாநாதர் கிருபையினாலே பாடவாக்குண்டாமென்றுசொல்லி உமையவள் ஒருஜோதியாக மறைந்துவிட்டாள், அப்படிமறைந்துவிடவே அச்சமுமிகுந்த துயரமுங்கொண்டு என்ஞாபகத்திலே குருக்கள்குமாரத்தியென்றே நினைத்திருந்தேனே, உலோகமாதாவாகிய பார்வதியாரென்று தெரிந்துக்கொள்ளாதபாவியானேனே, இவ்வளவெல்லாங் கட்டளையிட்டருளிய என்தாய்தன்னுடைய உண்மையையுந்தெரிவித்து எனக்குநேரிட்டிருக்கிறவியாதியையுமிப்போதே தீர்த்துவிடலாகாதா சிதம்பரத்துக்கு போகும்படி கட்டளையிட்டருளவேண்டுமா, ஆனால் திருவுளப்பாங் கெப்படியோ அது யாரா லறியத்தக்கது, ஒருவராலும் அறியத்தக்கதல்லவென்று எண்ணிக்கொண்டு அதுமுதல் நித்திரைசெய்யாமல் திருநிலைநாயகி சந்நிதிக் கெதிரில்வந்து தோத்திரஞ்செய்துக்கொண்டிருந்தார், அப்படியிருக்கையில்உதய காலமானதால் ஸ்தானிகர்முதலானவர்கள் போய்த் திருக்காப்புநீ

க்கி உள்ளேசென்று அம்மைசந்நிதியில் நிற்பவரைநோக்கிச் சமீபத்தில்வந்து நீ இங்கே எப்படிவந்தாய் உன்னை உன்வீட்டார்தேடுகின்றார்களே யென்றுவினவத், தான் வந்ததும் தனக்குக்கிடைத்த நன்மையையுஞ்சொல்ல-அவர்கள்கேள்விபட்டுக் குருக்கள் வீட்டிலிருந்தவட்டகை யவனிடத்திலிருப்பதைக் கண்டதுமன்றி, அவர் முகத்தில் ஒருதேஜசு விளங்கியிருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்து அன்றுமுதல்முன்போல் தாண்டவனென்று அழைக்க மனம் ஒவ்வாமல் முத்துத்தாண்டவனென்று உபசாரமாக அழைக்கத் தொடங்கினார்கள்.

அப்பால்திருநிலைநாயகி உத்தாரப்படி பொழுதுவிடிந்தவுடனே புறப்பட்டுச் சிதம்பரத்திற்குப்போனார் அப்படிபோனவர் தில்லையெல்லையைக்கண்டமாத்திரத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து உள்ளேபோய் வீதிப்பிரதக்ஷணஞ் செய்து தில்லைமூவாயிரவர் வாசஞ்செய்யும்வீதியையும்வணங்கி ஆலயத்திற்குட்சென்று சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டான விதிகளைமுடித்துக்கொண்டு ஈரவுடையுடன்சென்று சந்நிதானத்தில் அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன் பணிந்து எழுந்து துதிசெய்து அன்பின்மிகுதியால் மனமுருகிப் புளகமடைந்து ஆனந்தக்கண்ணீர் பெருகும்படி பரவசப்பட்டிருக்கையில், நடேசமூர்த்தியின் திருவருளால் தரிசனத்திற்கு வந்திருப்பவர்களில் ஒருவாக்குண்டாக அதனைப்பல்லவியாகவைத்துக்கொண்டு ஒருகீர்த்தனம்பாடித்தோத்திரஞ்செய்தார்.

அதாவது (பூலோககயிலாசகிரி சிதம்பரம்) என்றுதோத்திரஞ் செய்வதைக்கேட்டருளிச் சபாநாதர் திருவுளத்திற்களிகூர்ந்து அவருக்கிருந்த வியாதியெல்லாம் நீங்கும்படி கடாட்சித்து ஐந்துபொன் பணம் பஞ்சாக்ஷரப் படியின்மேல்வைத்து எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டருளினார். அந்தக்கட்டளையைமறுக்கஅஞ்சுபணத்தை யெடுத்துக்கொண்டு தமக்குநேரிட்டிருந்த தீராப்பிணிதிரும்படி ஆனந்தநடேசமூர்த்தி கடாட்சித்தருளிய திருவருளின் பெருமையை எண்ணியெண்ணிக் களிப்படைந்தபின்பும் பலமுறை அஷ்டாங்கபஞ்சாங்கத்துடன் பணிந்துதோத்திரஞ்செய்து பிரியாவிடைபெற்றுக் கொன்று சீர்காழிக்குப்போய் அன்றுமுதல் தினந்தோறும் சபைக்குவந்து அம்பலவாணமூர்த்தியைத் தரிசித்து அவ்விடத்தில் என்ன சொல் தம்முடையசெவிக்குக் கேள்வியாகின்றதோ அதையேபல்லவி

வியாகதைத்துக்கொண்டு கீர்த்தனமாவது பதமாவது பாடிச் சிதம்பரேஸ்வரர் கட்டளையிட்டருளுகின்ற பணமும் பெற்றுக்கொள்ளுகிறவர், ஒருநாள் சிற்சபைக்கெதிரில்வந்து நிற்கும்போது சபாநாதர் கட்டளையினால் அங்குத் தரிசிக்கின்ற தொண்டர்கள் யாதொன்றும் பேசாமலிருந்தார்கள், அப்போது (பேசாதேநெஞ்சேயென்று) ஒரு கீர்த்தனம்பாடிக் கட்டளைப்பிரகாரம் பஞ்சாட்சரப்படியில் வைத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு சீர்காழிக்குச் சென்றார், இவ்வாறு நடந்துவருகையில் ஒருநாள் பழையபடி சீர்காழியிலிருந்து புறப்பட்டுச் சிதம்பரதரிசனத்துக்கு வருகையில், கொள்ளிடமென்னும் நதியில் அதிகப்பிரவாகம்வந்து ஒருவரும்போகக்கூடாமையாக விருக்கவே சபாநாதரைத் தரிசிப்பதற்கில்லையேயென்னும் ஏக்கங்கொண்டு கொள்ளிடக்கரைமேல்நின்று (காணாமல்வீணிலே) (காலங்கழித்தேனெயென்று) ஒருகீர்த்தனம்பாடினார், அந்தக் கீர்த்தனத்தைக் கேட்டருளிச் சபாநாதர் திருவுளத்திற் கிருபைகூர்ந்து பிரவாகம் விலங்கக் கட்டளையிட்டருள, அந்த நதியைக்கடந்து வருபவர் மனக்களிப்பினால் தரிசனஞ்செய்வேனேயென்றுஒருகீர்த்தனம்பாடினார். பின்பு சிற்சபையில்வந்து சபேசனைக்கண்டவுடன் (கண்டபின்கண்குளிர்ந்தேனென்று) ஒருகீர்த்தனம்பாடினார். அதன்பின்புஒருநாள் வரும்போது மார்க்கத்தில் தம்மைச் சர்ப்பந்தீண்ட அதற்கு (அருமருந்தென்கிற) ஒருகீர்த்தனம்பாடினார், பாடியவுடன் விஷமிறங்கிற்று, இவ்வாறு சபாநாதர்பேரில் அநேகங்கீர்த்தனங்களும் பதங்களும் பாடித் தோத்திரஞ்செய்துக்கொண்டிருந்து சபாநாதரது கிருபையினால் அனேகமகத்துவம் விளங்கப்பெற்று கடைசிநாளில் (மாணிக்கவாசகர்பேரெனக்குத் தரவல்லாயோவறியேன்) என்கிற கீர்த்தனம்பாடும்போது சிற்சபையில் ஒரு ஜோதியுண்டாக அந்தசோதியில் விதேகத்துடன் கலந்துவிட்டார்.

சபாநாதர் துணை.

முத்துத்தாண்டவர் - சரித்திரம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

## சபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர் பாடியருளிய

## கீர்த்தனம்-பதம் - இவைகளின் - அகராதி.


| கீர்த்தனம் | பக்கம். | கீர்த்தனம் | பக்கம். | கீர்த்தனம் | பக்கம். |
|---|---|---|---|---|---|
| ஹரஹரசிவசிவ | ௩௨ | கண்டாயோ | ௪௦ | தெருவிலெ | ௫௨ |
| அப்படி | ௪௯ | கலந்துகொ | ௪௩ | தேடித்திரி | ௪௦ |
| அம்பர | ௧௩ | கனவிலுமற | ௫௧ | தேனூர்மொ | ௪௫ |
| அம்பலவாணர் | ௨௨ | கனவுகண் | ௫௩ | தோத்திரஞ் | ௩௯ |
| அருமருந் | ௩௧ | காணமுத்தி | ௩௨ | நடனங்கண் | ௧௨ |
| அவனேதேவ | ௩௫ | காணமலிரு | ௬௯ | நடிப்பவ | ௨௯ |
| அழைத்துவா | ௪௮ | காணமல்வீ | ௨௯ | நானேமுழு | ௨௩ |
| ஆசைதிரவே | ௪௮ | கெட்டுப் | ௪௧ | நானேவெளி | ௩௮ |
| ஆடிக்கொண் | ௧௮ | சந்ததமுன் | ௧௫ | நிருத்தஞ்செய் | ௨௮ |
| ஆடியபாதா | ௧௯ | சபையில் | ௫௨ | நிர்த்தமிடுந் | ௩௯ |
| ஆடியவேடிக் | ௨௪ | சம்போசங் | ௧௯ | நினைத்துக் | ௫௫ |
| ஆடினதெப்ப | ௧௮ | சரசமிப்படி | ௪௭ | நீதயவாயெ | ௧௩ |
| ஆட்[illegible] | ௨௧ | [illegible]மிதரிச | ௨௨ | நேசமேன் | ௫௦ |
| ஆராராசை | ௨௨ | சிதம்பரமே | ௩௮ | பாததரி | ௩௭ |
| ஆநந்தத் | ௨௮ | சித்தரின் | ௧௯ | பிரிந்தாலும் | ௫௫ |
| இனிசுமக்க | ௪௨ | சிவசிதம்பர | ௪௩ | பூலோககயி | ௯ |
| இன்னமொரு | ௧௦ | சிவந்தபாத | ௩௫ | பேசவுமொ | ௬௯ |
| இன்னம்பிற | ௪௩ | சிவனைமற | ௩௯ | பேசாதே | ௩௭ |
| ஈசனே | ௧௩ | சிற்சபை | ௧௨ | மறவாதிரு | ௩௯ |
| உனைநம்பி | ௧௪ | சுந்தரகுஞ் | ௩௪ | மனதறியா | ௫௭ |
| உன்பாத | ௧௫ | சேவிக்கவேண் | ௧௦ | மனதினி | ௫௪ |
| எத்தனைத்த | ௫௯ | சொல்லவாரா | ௫௩ | மனமுறு | ௫௮ |
| என்னையென | ௧௪ | தனித்திருக் | ௫௧ | மாணிக்கவா | ௪௪ |
| என்றுசென் | ௩௧ | தீர்த்தமுதன் | ௧௧ | மாயவித்தை | ௨௦ |
| ஏசல் | ௪௯ | தூக்கியபாத | ௩௪ | மையல்மிக | ௫௪ |
| ஏனோவம் | ௫௦ | தெண்டனிட் | ௫௭ | பார்க்குத் | ௩௩ |
| ஐயனேநட் | ௨௩ | தெரிசனஞ் | ௩௦ | வருவார்வரு | ௪௫ |
| கண்டபின் | ௩௦ | தெரிசனமே | ௩௮ | வேண்டாமி | ௪௭ |
| கண்டவர்வி | ௧௭ | தெரிசித்தள | ௨௦ | | |


அகராதி-முற்றிற்று.

உ

சிவமயம்.

சபாநாதர்பேரில்

# மாரிமுத்தாப்பிள்ளைமுதல்

சிலவித்துவான்கள்பாடிய கீர்த்தனம்.

## இவைகளின்-அகராதி.


| கீர்த்தநம் | பக்கம். | கீர்த்தநம் | பக்கம். |
|---|---|---|---|
| அம்பலத்தாடி | ௭௨ | ஏனிந்தப்பரா | ௭௫ |
| ஆடவெடுத்த | ௭௭ | ஒருக்கால்சிவசித | ௬௩ |
| இதைவிடக்கு | ௭௧ | காலைத்தூக்கி | ௬௫ |
| இன்னமுமொரு | ௬௪ | சிவசிதம்பர | ௬௪ |
| இன்னம்வயிர | ௬௯ | தாண்டவம் | ௮௦ |
| உம்மைப்போ | ௬௯ | திருக்கூத்திற்கு | ௭௮ |
| உன்முகம்பா | ௬௬ | தில்லைச்சி[illegible] | ௫௯ |
| எந்ததலத்தை | ௬௧ | தில்லைத்தலம் | ௭௬ |
| எந்நாளும்வாசமா | ௬௧ | தெய்வீகஸ்தல | ௬௦ |
| எந்நேரமுமொ | ௭௦ | தெரிசிக்கவேண்டு | ௭௯ |
| என்னகாரிய | ௭௪ | தெரிசித்தபேணைப் | ௫௯ |
| என்ன துணி | ௬௭ | பரந்தனையடை | ௬௩ |
| என்னபிழை | ௬௮ | பலமந்திரத்தில் | ௬௨ |
| ஏதுக்கித்தனை | ௭௩ | பாருங்கள் | ௭௩ |
| ஏதுக்குதவி | ௬௬ | வீடெம்பலமாகி | ௬௮ |


முற்றிற்று.

உ

ஹரः

சிதம்பரம்.

சபாநாதர்பேரில்

பாடியருளிய

# முத்துத்தாண்டவர்கீர்த்தனம்.

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்.

பல்லவி.

பூலோககயிலாசகிரிசிதம்பரமல்லாற் புவனத்தில்வேறுமுண்டோ

அநுபல்லவி.

சாலோகசாமீபசாரூபசாயுச்சிய சபைவாணராநந்தத்
தாண்டவம்புரிவதாற் (பூலோககயி)

சரணங்கள்,

க. நாலுமஹமேருவென்னும்நாலுகோபுரநிலையும்-நவரத்னமணி
களாலொளிசித்ரமதில்களும் மேலுலகையளவிடுதற்போலுயர்
ந்தேவெயில்-விரித்தகம்பத்திரள்களும்
காலுலவுமாயிரக் கான்மணிமண்டபமும்-நவ-கங்கையு நிறைந்த
சிவகங்கையின்விசாலமும்-ஆலிலையின்மாலு மயனுலுமறியாத
பேரம்பலமேவுவோர்க் கற்புதம்புரிதலாற் (பூலோககயி)

உ. வேதமுதலெனுமூலநாதர் தூபியுமேரு-வில்லியார் சிவகாமவல்
லியார்கோயிலும் மாதவர்விண்ணவர்முனிவர்தபோதனர்வித்தி
யாதரர் மாளிகைகள்சூளிகைகளும்

ஏதமொருசற்றுமணுகாத கட்டளைகளுமிரவிபோ லிலங்குகின்ற விந்த்ரவிமானங்களுங் காதலுற்றேகண்டபூதலத்தோரெல்லாம் காணநூருயிரங் கண்வேண்டுமென்னையாற் (பூலோககயி)

ரு. மேவார்தொழிந்தில்லை மூவாயிரம்புனிதர் வீதியுஞ்சைவர்திரு வீதிமடங்களுந் தாவாதபசிதவிர வாவாவெனுஞ்சத்ர சாலையும் பலசோலையும்

பூவாவிகளும்வயலு மோவாமலேபெருகு பொன்னிநதியுந்தெருவும் மன்னியவளங்கண்டு தேவாரமூவர்முதற் பாவாணரனைவருஞ சிவஸ்தலத்தினிலதிகந்தில்லைவனமென்னையாற் (பூலோ)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

சேவிக்கவேண்டுமையா-சிதம்பரம்-சேவிக்கவேண்டுமையா

அநுபல்லவி

சேவிக்கவேண்டுஞ் சிதம்பரமூர்த்தியாந்
தேவாதிதேவன் திருசந்நிதிகண்டு(சேவிக்)

சரணங்கள்

க. காரானைமாமுகத் தைந்துகரத்தானை கற்பகராயனை முக்குறுணியானைச் சீரார்புலியூர்ப்பதிமே[illegible]வாழ[illegible]னை மீட்குஞ்சேவற்கொடியானை (சேவிக்க)

உ. சிங்காரமான சிவகங்கையின்மூழ்கிச் சிவகாமிசந்நிதிமுன்பாக வேவந்து பாங்காகவே பிரதட்சணமுஞ்செய்து பத்தர்கள்சித்தர்கள்பணிவிடையோர்தொழச் (சேவிக்க)

௩. சிட்டர்பரவுந் திருமூலத்தானைச்-சிற்றம்பலமென்னும்பேரம்பலத்தானை அட்டதிக்கும்புக ழம்பலவாணனை ஆண்டவனைத் தில்லைத்தாண்டவராயனைச் (சேவிக்க)

ச. நல்லதிருவிழாவானித்திருத்தேரும்-நாடெங்குமேபுகழ்நற்கோபுரநான்குந் தில்லைமூவாயிரவர் வளர்வீதியுந் திருமஞ்சனமுமார்கழிதரிசனமுஞ் (சேவிக்க) (உ)

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஏகதாளம்

பல்லவி

இன்னமொருஸ்தல மின்னமொருகோயி
லின்னமொருதெய்வமிப்படியுண்டோ

அநுபல்லவி

பொன்னம்பலத்தினிற் பூமலராயன்
போற்றுஞ்சிதம்பரர் பொற்பதமேயல்லால் (இன்ன)

சரணங்கள்.

க. காசிகழுக்குன்றங் காளாஸ்திரிகச்சி கமலாயந்திருவண்ணாமலை யுறை ரகசியமான தெய்வங்கட்கொடுக்கமும் நடனமுமிங்கே ந ளினமுமிங்கே (இன்னமொ)

உ. பாலானசந்திர சூரியர்மண்டலம்-பாரிந்திரன்பதி பற்றியமண் டலம் பூலோகத்திற்குக் கைலாசம்வைகுந்தம் பிரம்மமண்டல த்துப்புதுமையுமிங்கே (இன்னமொ)

ங. கரிசற்பிணிகள் பறந்துபோஞ்சிவ கங்கையின்மூழ்கிக் கனகச பைவந்து தெரிசித்தளவினிற் றேவனுமாவன் தெரிசித்தவரை க்கண்டாற்றேவனுமாவன் (இன்னமொ) (ங)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்

பல்லவி

தீர்த்தமுதல்மூர்த்தியுந்-தலவிசேஷமெங்கள்சிவசிதம்பரத்திற்றுனே

அநுபல்லவி

கீர்த்தனஞ்செய்யுமெய்ப் பொருண்மூன்றுமொன்றென்று
கேண்மையோடுவேதாகமப்பகருமாகையால் (தீர்த்)

சரணங்கள்

க. தெரிசித்தபேரதந்த பிரமனென்னுளுஞ் செலுத்தும்பாக்கியங் களுண்டாம்-பரிசித்தபோதுலகு பதினாலுமிரட்சிக்கும் பதும விழியோனாகலாம் - உருசிக்கும்பானீயு மன்பாகவுட்கொள்ளி லுருத்திரன்பதவிபெறலாம்-வருசிற்பரானந்தத் தீர்த்தமகிலா டவேமஹேசுரனுமேயாகலாம் (தீர்த்த)

உ. கல்லுமுதன்மணல்களுந் துகள்களுமிலிங்கமெனக் கருதும்வே தங்களெல்லாந்-தில்லைதனிலுண்டான குளப்படியினீரெல்லா ஞ் சிவகங்கையென்று சொல்லலாங்-குல்லைமாற்புகழரியகூபங் களானந்தக்கூபமென்றேபகரலாம்-வல்லநடராஜர்பதங் காணு மலேதலத்தில்வசித்தவருமுத்திபெறலாம் (தீர்த்த)

ங. சிந்தைமகிழ்சம்பந்தர் தரிசிக்கயாவருஞ்சிவசுரூபமானதிரமும் நந்திமுதலிந்திரர் மூவாயிரம்புனிதரும் நாரதருந்தொழுதே

த்தவேவந்துதெரிசித்தவர்க்குமாறுதபேரின்பவாழ்வுதருகின்ற பதமும் - கந்தமுருகோதைசிவகாமிபங்கிநடமிடு கடவுளருள் வடிவாகையால் (தீர்த்த) (ச)

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்

பல்லவி

சிற்சபைதனிலேகண்டு கொண்டேனென்றும்

அநுபல்லவி

அற்புதக்கூத்தனைநாடி-அவனையெங்குந்தேடி (சிற்ச)

சரணங்கள்

௧. வையந்தருசிவகாமி மாலேகொன்றை-மாலையெனவணிந்தானை மாந்தர்க்குமுன்னாலே-செயும்நாள்வாசனையின்மேலே கடற்றிரையெனவேவரும்பிறவிதீருவ்வகையாலே (சிற்ச)

௨. அடியவர்க்கருள்புரிகுவானைப்பண்டு அரிபூசைக்கு-வந்துடன் சக்கரமளித்தோனைத்-துடியிடையாள்மலைமகள்பங்கோனை-அன்பாய்த்தொழுதவர்க்குக்கதிகொடுக்குந்தூயவெளியானை (சி)

௩. தேவர்வான்சேனையன்மாலாதி மெய்ம்மைதிகழ் மூவாயிரவரில் நானொருவனென்றநீதிமூவர்பாடற்கருளனாதி-வந்துமூவுலகுந்தொழத்தில்லைதனிநடனஞ்செய்ஜோதி (சிற்ச)

௪. முனிவர்புரிதவமகிழ்ந்தேயனாறு யின்பமுடிவிலா-வருளளித்தமுதலேநாவென்றுதனியே-நீயரிதிவெனவின்று நின்ற சாட்சியைக்கண்ணுற் கனகசபையநுகேநின்று (சிற்ச) (ரு)

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்

பல்லவி

நடனங்கண்டபோதேயென்றன் சடலஞ்செய்த பாக்கியமையா

அநுபல்லவி

விடமணிந்தகண்டாமன்றுண் மேவுமம்பலவாணவுன் (நடன)

சரணங்கள்

௧. அரியபனுந்தேடிக்காண வருவாய்நின்றகாரண-மருமலர்ப்பச்சிலைகொண்டுருகுமன்பர்சிர்ஜைதயொன்று (நடன)

௨. அன்னைதந்தைநீயேயென்றேயுன்னையேமிகநம்பினேன் என்னையேநீகாக்கவேண்டுஞ்சொர்னசபைநடராஜா (நடன)

௩. பதஞ்சலிவியாக்கிரபாதரிதயம்புகுந்தாண்டவனே நிதம்பிரியாச் சிவகாமிநேசனேசிதம்பரேசனே (நடன) (சு)

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

ஈசனே-கோடிசூரியப்பிரகாசனே-கனகசபை

அநுபல்லவி

வாசனே-யானந்தநடராஜனே (ஈசனே)

சரணங்கள்

க. அறியேனெஞ்சினேசம்பிறியேன் வருங்கருமங்-குறியேனறிவில்லாதசிறியேனெனைநீயாளாய்

உ. நினையேனுனைவேடமும்புனையேன் சிவகங்கையி - னனையேன் கொடியதீவினையேனுய்யவேயாளாய்

ந. துதியேன்வணங்காவஞ்சமதியேனென்றுலுஞ் சபாபதியேநம்பினேன்சிவகதியேதந்தென்னையாளாய் (ஈசனே) (எ)

கீர்த்தனம்-இ-ம்-சுருட்டி-ஜம்பைதாளம்

பல்லவி

அம்பரசிதம்பரபரம்பரசதாநந்த வடிக்கண்மறவாதருளுமனுதினமு [மே

அநுபல்லவி

செம்பொன்மலைச்சிலைவளைத்ததிவ்யபரமானந்தசம்போ

சிவசங்கர-ஸ்ரீதாண்டவ-நடேசா (அம்பர)

சரணங்கள்

க. கங்கைமதியரவக்காதிற் குழையசையச் - செங்கைமழுத்துடியசையச் சைவசடையசையப்-பொங்குபுலியசையப் பொற்பாதசிலம்பசைய-மங்கைசிவகாமவல்லிமகிழநடம்புரியும் (அம்ப)

உ. நின்மலநிராலம்ப நிர்க்குணநிரஞ்சன-சின்மயானந்தபர சித்குணசொரூபா-வன்மலக்கோணிக்கிபருள்வாரியுறவேயென து புன்மையரவுமைக்காணப்பொதுவினடம்புரியும் (அம்பர)

ந. துங்கமறையாகமங்கள் சொன்னவிதிவழுவாமற்-சிங்காரமாமெங்கள்செய்துதினந்தினமு-மங்காதநீறுபுனைவைதிகமூவாயிரவர் நங்கோனென்றேபரவநாளும்நடம்புரியும் (அம்பர) (அ)

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி.

நீதயவாயென்னையாளா-யிரு-மாதவர்பாடுங்கச்சாளா

அநுபல்லவி

தாதகிசூடியதோளா உமை-காதலா குஞ்சிதத்தாளா (நீதயவா)

சரணங்கள்

க. ஒலிகடல்விடமுண்டநேயா-சிறுபுலியினதனுடைய தூயா-மெலி யுமடியவர்சகாயா பதஞ்சலிபுலிபணிநடராயா (நீதய)

உ. காலனைவதைசெய்தகாலா புலிப்பாலனையாண்டகபாலா-வேல னைத்தருமனுகூலா ஐந்துகோலனைவென்றதிரிசூலா (நீதய)

ங. மூவர்பரவியவினோதா திருநாவலூரன்விடுதூதா-யாவரும்நம் பினபாதாமகாதேவாகனகசபைநாதா (நீதய) (கூ)

கீர்த்தனம்-இ-ம்-குறிஞ்சி-ஏகதாளம்

பல்லவி

உன்னைநம்பினேனையா சரணம்-நாகம்

அநுபல்லவி

புனைசம்போநடராசா புலியூர்வாழீசா (உனை)

சரணங்கள்

க. இருவர்தம்மிசைகொண்டகாதா இத்தியெணநின்றுநடஞ்செய்யு மிங்கிதப்பொற்பாதா-திருநாவலூரன்விடுதூதா தில்லைச்சிவகா மியொருபாகாசிதம்பரநாதா (உனை)

உ. மழுவுழைதரிக்கின்றகையா கொன்றை மலர்மாலைபுனைகின்றவ டிசுடர்மெய்யா-எழுபுவிதுதிக்கின்றதுய்யா அன்பரிடமாயிருந் தின்பமுடனாளுமையா (உனை)

ங. நெடியமாலயன்தேடிக்காணுதெங்கும்நிறைந்தவா வெலும்பெ ல்லாமணிந்திடும்பூணு அடியவர்தொழுந்தமிழ்வாணு தில்லைய ம்பதிநடராஜா அம்பலவாணு (உனை) (ய)

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஏகதாளம்

பல்லவி [சே

என்னையெனக்குத் தெரியச்சொல்வாய் தில்லைப்பொன்னம்பலத்த

அநுபல்லவி.

தன்னையறியுமறிவதுநீ சற்றுந்தப்பவொண்ணுதிப்போ சாமிசமயம் (என்னை)

சரணங்கள்.

க. பூதமுநானல்லபொறிபுலநானல்லஓதுமனதியொருநான்கும் நா னல்ல போதக்கருவிபுறம்பல்ல வுள்ளல்ல வாதமுநானல்ல வென்று மயக்கும் (என்)

௨. ஒளியல்லவிருளல்ல உடலினிறைவதல்ல வெளிகறுப்பல்ல விளக்கொத்ததல்ல அளியுமவஸ்தையல்ல வவஸ்தைப்பிரிவதல்ல தெளிவுமறிவுமல்ல தெளியாதல்ல (என்)

௩. பாசமுநானல்ல பதிபசுநானல்ல பேசிலணுவுமல்ல பெரியவுருவுமல்ல ஈசரிலங்கிலங்கும்பொருளல்ல கோசரமேயேகதேசமுநானல்ல (என்)

௪. சேர்ந்துவருவதல்ல சேராதிருப்பதல்ல ஓர்ந்து களிப்பதல்ல வோராதிருப்பதல்ல பேர்ந்துவருவதல்ல பேராத்தனியுமல்ல தீர்ந்தவுயிரே துதில்லைநடேசா (என்னை) (௰௧)

கீர்த்தனம்-இ-ம்-பரஸ்-ஆதிதாளம்

பல்லவி

உன்பாதமே துணைகிருபை செய்யா யஞ்ச
லென்பாரெனக்கு வேறில்லைமெய்யா

அநுபல்லவி

அன்பாகியம்பலத்தாடுமையா அனல்வடிவெனவொளிர்
பனகசயனன்முதலினரனுதினநிறை கனகசபேசா (உன்)

சரணங்கள்

௧. பலதெய்வமாகெய்வமெனக்குறியேன் நின்னையலதென்மனத்திலொன்றையுமறியேன்வலதெள்ளளவுமில்லாச்சிறியேன் மருவியவிருவினை யிருளறவரு ளமரருமுலகரு மகிழ்திருநடராஜ (உன்பாதமே)

௨. என்னளவினிற்சித்த மிரங்காதோ வந்து சொன்னதெண்ணுத பராமுகம்மதேஉன்னுதலுதவுவதெப்போதோ உடல்வளைபட வடரடல்வினைகெடவொருமடவரலொடுமிடும் நடனவினோதா (உன்பாதமே)

௩. இனியவரெவரெனக் கென்குறைதீரா யோகமுனிவோரைவாழ்வித்தவுபகாரா தனியாம்பெரும்பற்றப்புலியூராசயமிருபுயதலிமுயலகனெளியமனியபதமருள்தம நயசபைநாதா (உன்பா)

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்

பல்லவி

சந்ததமுன்பாதசேவை தந்தென்மேற்கிருபைபாராய்

அநுபல்லவி

செந்திருமேவும்புலியூர்வாழ் சிற்சபைநடேசசுவாமி (சந்த)

சரணங்கள்

க. பண்சிலம்போசைபளிக்கப் பாவியென்வினையொழிக்கக்
கண்களானந்தந்துளிக்க கண்டெென்மனதுட்களிக்கச் (சந்த)

உ. சிந்துரப்போர்வையுமாடத் தேவர்கள்மறைபாட
ஐந்தெழுத்துருவம்நாட அணிமலர்தூவிக்கொண்டாடச் (சந்)

ந. பங்கயத்தயன்மால்காணுப் பாதனேபொற்பணிபூணு
தங்குவில்வாசுகிநாணு சம்புவேயம்பலவாணு (சந்த) (மந)

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-அடதாளம்

பல்லவி

சித்தரின்னமுண்டோ பூலோகத்திற் சித்தரின்னமுண்டோ

அநுபல்லவி

அத்தர்தில்லைவாழு மம்பலவாண
ரானந்தத்தாண்டவ ராயரல்லாமற் (சித்த)

சரணங்கள்

க. ஒப்பிடுவித்தைக ளெப்படியுலகத்தி லுடலேசெப்பாக வுயிரே
பந்தாகச் செப்பிடுவித்தைகள் விளையாடினபின்பு செப்புமில்
லை பந்துமில்லையென்றுளிக்குஞ் (சித்த)

உ. இதஞ்சொல்லிக்கின்னரர் கிம்புருடர்பாட விளந்தனிலம்பிகை
கண்களிகூடப் பதஞ்சலிவெம்புலி யஞ்சலிபண்ணப் பதஞ்சலி
யாமற்பண்ணுஞ் (சித்த)

ந. மாலொடுபிரமனுந் தேடரிதான மலர்ப்பாதங்கண்டு வணங்கித்
தெரிசிக்கச் சாலோகசாமீபசாரூபசாயுச்யந் தந்தருள்தாண்டவ
ராயரல்லாமற் (சித்தரின்ன) (மச)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

காணுமலிருந்தாலென் கலக்கந்தெளியாதே

அநுபல்லவி

பூணுரமரவணிந்த பொன்னம்பலத்தானைக் (காணும)

சரணங்கள்

க திரிபுரத்தையெரித்தானைச்செங்கையின்மான்தரித்தானைக்
கரியுரித்துப்போர்த்தானைக் கங்கைமுடித்தானை
அரியயனுதித்தானை யஞ்செழுத்தாயுதித்தானை
உருவிலியையெரித்தானை யொளிவெண்ணீற்றானைக் (காணு)

௨. தலைமாலைதரித்தானை தக்கன்சிரந்துணித்தானை
உலகெலாம்நிறைந்தானை யுவமையில்லானை
மலைதனுவாய்வளைத்தானை மறலிவிழவுதைத்தானை
கலைமதியைப்புனைந்தானைக் கண்மூன்றுடையானைக் (காண)

௩. நாலுகோபுரத்தழகும் நன்மதின்மண்டபத்தழகும்
சீலமிகுந்தெருவழகுஞ் சிவகங்கையழகும்
ஆலமிடற்றினிலழகும் ஆடும்பலத்தழகும்
பாலின்மொழியுமையழகும் பரமானந்தத்தழகும் (காண)

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரிராகம்-ஏகதாளம்

பல்லவி

கண்டவர்விண்டிலரே யனுதினம் விண்டவர்கண்டிலரே

அநுபல்லவி

கண்டவர்விண்டிலர் விண்டவர்கண்டிலர்
அண்டரண்டங்கடந்த ஆதிசோதிபாதங் (கண்ட)

சரணங்கள்

௧. முத்திபத்திசத்திமுப்பால்விளைவதல்ல நெற்றியொற்றுமொரு நிலைமைதானுமல்ல தத்தெய்யென்றுதாள மத்தளமதிரவே தித்தியென்றுமன்றுளாடுந்திருக்கூத்தைக் கண்டவர்

௨. அந்தக்கரணமொருநான்கு சத்தாதியைந்து மடக்கியறிவுடன் கூடிச் சந்தித்துநின்றருள்சற்குருவுப்போற்றும் அந்தமதாகிய வானந்தநடனத்தைக் கண்டவர்

௩. ஒவ்வுதானுமல்ல அவ்வுமிவ்வுமல்ல நவ்வுஞ்சிவ்வுமல்ல நாதநடுவணையிற் சிவ்வுமவ்வுமல்ல சேர்ந்தவட்டமல்ல அவ்வுமுவ்வுமல்ல வாதிருக்கூத்துநடனங் கண்டவர் ௰௬

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

பாததெரிசனஞ்செய்யும்போதே-செய்த
பாவம்வெருண்டுநிஜபலமானதே

அநுபல்லவி

வேதம்பரவுந்தில்லைமன்றுள் மீதேமெத்தமிடுக்குள்ளகாளியுந்திடுக்கிடவுலகமும்நடுக்கிடத்திகுர்தியென்றடுக்குடனடித்திடும் (பாத

சரணங்கள்

௧. பத்தியுடனே பூஜைபண்ணும்பாலன் தன்னைப் பற்றிப்பிடிக்க வந்தபாசக்காலன் தத்திவிழவே யுதைத்தருள்காலன் வெற்றி

த்தாண்டவம்புரிந்தென்னை யாண்டவனெனவரு மாண்டவரெ லும்பையும்பூண்டவர்சிலம்பணி பாத

உ. சுந்தரமூர்த்தியார் தமிழுக்காக வும்பர் தொழுதிடத்தூதுக்கி சைந்தன்பாக அந்தமின்பரவைக்கு முன்பதாக வந்த வரகரசி வகிரிதிரிபுரமெரிபட நகைபுரிவரதர் பரமரகசியமான பாத

ந. ஆலவிடமருந்துஞ்சர்வேசன் கங்கையணிந்தவன் மாகயிலைமா மலைவாசன் மாலுக்கிளையவுமைமகிழ்நேசன் சதுர்மறைவிரிமு டிமிசையுறைபவ னழல்நிகர் கறைவிடவரவொடு பிறையையு மணிபவன் பாத மிஎ

கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்

பல்லவி

ஆடினதெப்படியோ நடனம்நீ ராடினதெப்படியோ

அநுபல்லவி

தேடியமெய்ப்பொருளே வளமேவும் சிதம்பரத்தேயொரு சேவடிதூக்கிநின் றுடின

சரணங்கள்

க. ஒன்றல்லரண்டல்ல ஒன்றிரண்டுமல்ல நன்றல்லதீதல்ல நாதவி ந்துமல்ல அன்றல்லவின்றல்ல வாதியந்தமல்ல மன்றுள்மரகத வல்லிகொண்டாட ஆடின

உ. ஆணல்லபெண்ணல்லவன்றியலியுமல்ல காணரூபமல்லகாணாத ரூபமல்ல சேணல்லவேயொரு தேவர்க்குள்ளேதேவ வாணுத ற்பச்சை மடந்தைகொண்டாட **ஆடின**

ந. பூதங்களல்ல புறம்பல்லவுள்ளல்ல **வேதங்களாலே விளங்கும்** பொருளல்ல ஆதவன்போலே யசையும்**வடிவல்ல மா**துமையா ள் பச்சைவல்லிகொண்டாட ஆடின

ச. பஞ்சவர்னமல்ல பஞ்சபூதமுமல்ல நெஞ்சினினைவுமல்ல நினை விற்கனவுமல்ல அஞ்சுமுகமுமல்ல ஆறுதாரமுமல்ல வஞ்சி மரகதவல்லிகொண்டாட ஆடின மிஅ

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்

பல்லவி

ஆடிக்கொண்டாரந்தவேடிக்கைக்காணக்கண்ணாயிரம்வேண்டாமோ

அநுபல்லவி

நாடித்துதிப்பவர் பங்கிலுறைபவர் நமபர்திருச்செம் பொன்னம்பலவாணர் ஆடிக்கொண்

சரணங்கள்

க. பங்கயபாதச்சிலம்பசைந்தாடப் பாதச்சதங்கைகள் கிண்கிணென்றாடப் பொங்கமுடனேயுரித்துத்தரித்தபுலித்தோலசைந்தாடச் செங்கையிலேந்திய மான்மழுவாடச் செம்பொற்குழைகண்முயலகனாடக் கங்கையிளம்பிறைச்செஞ்சடையாடக் கனக சபைதனிலே ஆடின

உ. ஆரநவமணிமாலைகளாட வாடுமரவம்படம்விரித்தாடச்சீரணி கொன்றைமலர்த்தொடையாடச் சிதம்பரத்தோராட பேரணி வேதியர்தில்லைமூவாயிரம்பேர்களும் பூசித்துக்கொண்டிநின்றாடக் காரணிகாளியெதிர்த்துநின்றாடக்கனகசபைதனிலே ஆடி

ங. நிர்த்தகணபதி வேலர்நின்றாட நின்றயன்மாலாட னிந்திரனாட முப்பத்துமுக்கோடிதேவருடனே முனிவரும்நின்றாட மெய்ப்பத்திமேவும்பதஞ்சலியாட வியாக்ரமபாதரும் நந்தியுமாடக் கொப்புற்றகாதாள்சிவகாமியம்மையுங்கூடவேநின்றாட ஆடி

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசங்கரமஹாதேவா சதாசிவ சம்போசங்கரமஹாதேவா

அநுபல்லவி

செம்பொற்சபையில [illegible]ஞ்செய்யுஞ்சிதம்பர அரஹரசிவசம்போ

சரணங்கள்

க. அரிமாற்பிரமற்கரியோனே சித்தந்தெளிந்த வன்பர்கள்தமக்குரியோனே, புவனங்களில் திரியுமுப்புரமெரிசெய்தசச்சிதானந்த பரஹரஹரசிவ சம்போ

உ. அனவரததாண்டவராயா கைலைவெற்பைஅசைத்தவனை ரட்சித்தநேயா மருவார்கொன்றைபுனலோடுமதி தும்பைபுனையுஞ் சிற்பரஹரஹரசிவ சம்போ

ங. இருமுனிவர்க்கருளும்நாதா மூவாயிரவரென்று மர்ச்சனைசெய்பொற்பாதா வெனையாண்டருள் திரிபுரைசிவகாமிதினமும் மருவியஹரஹரசிவ சம்போ உம

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி

ஆடியபாதா இருவர் பாடியகாதா

அநுபல்லவி

நீடியவேதா தில்லை நிர்த்தவினோதா ஆடியபாதா

சரணங்கள்

௧. இருமுனிவருமொரு நிருபனு மருகினில், உருகியுருகிமனம் ஹரஹரவெனவே ஆடிய
௨. அந்தரதுந்துமியுந் துடியுந்தவில், திந்திமிதிமிதிமி திந்திமி யெனவே ஆடிய
௩. கும்பமுலையுமையாள் சம்ப்ரமத்தொடுகாண, உம்பர்தொழவரு சிதம்பரமதனில் ஆடிய ௨௧

கீர்த்தனம்-இ-ம்-கானடசாரங்கம்-ஏகதாளம்

பல்லவி

தெரிசித்தளவின்முத்தி பெறலாம் புலியூரானைத்
தெரிசித்தளவின்முத்தி பெறலாம்

அநுபல்லவி.

தெரிசித்தளவின்முத்தி பெறலாம் புலியூரானைத்
திகம்பரநடம்புரி சிதம்பரதேவனைத் தெரி

சரணங்கள்.

௧. அரனைமன்மதனைச்சங்கரனை மான்மழுவேந்துங்கரனைச்சடையிற்கங்காதரனைப், பரனைச்சருவதயாபரனைப் பராதிகம்பரனைத் தில்லையில்வாழ் சிதம்பரனைச்சங்கரனைத் தெரி
௨. மாயனையாண்டவுபாயனை பலைமகள்நே[illegible]யழிவில்லாக்காயனை, தூயனைவைபோகராயனைநால்வேதவாயனைத்தாண்டவராயனைச்சிவாயனைத் தெரி
௩. ஈசனையம்பரகேசனை யதிகப்பிரகாசனைக் கைலாசவாசனைப், பூசனைசெயுமன்பர்நேசனைத் திரிபுரநாசனைச் சிவகாமிநேசனைச் சபேசனைத் தெரி ௨௨

கீர்த்தனம்-இ-ம்-கேதாரகௌளம்-ஏகதாளம்

பல்லவி

மாயவித்தைசெய்கிறானே அம்பலவாணன்மாயவித்தைசெய்கிறானே

அநுபல்லவி

மாயவித்தைசெய்கிறான் காயமொன்றெடுத்துக்கொண்டு
நேயமானவெளிதன்னி லுபாயமாய்க்கூட்டத்திருந்து மாய

சரணங்கள்.

௧. உண்டுபண்ணிவைக்கிறான் கொண்டுகொண்டுபோகிறான்
நன்றுக்குந்தீதுக்கும் நடுவாயிருக்கிறான்
பண்டுநாலுவெளியெங்கும்பாரெங்குங்காணவொண்ணான்
அண்டர்தொழவம்பலத்தி லொண்டிகட்டியாடிக்கொண் மாய

௨. உண்கிறானுறங்கிறான் உருவாங்தேரோட்டுறான்
சங்கீதத்தைமீட்டுறான் தானேதீபங்காட்டுறான்
மங்கையுடன்கூட்டுறான் மலைக்கக்கண்காட்டுறான்
அங்கலிங்கபீடமாக விங்குமங்குமாயசைந்து மாய

௩. கூட்டுறான்வெகுசண்டை மூட்டுறான்தத்துவத்தின்
மாட்டுறானுலகப்பா ராட்டுறான்பின்னையுமோர்
ஆட்டிடையனம்பலத்தி லஞ்சாடுபேய்க்கிறவன்
காட்டுமெய்யிலாறுக்கப்பால் வீட்டிலேகுடியிருந்து மாய

௪. மண்ணுமல்லவிண்ணுமல்ல வாய்வுமல்லதேய்வுமல்ல
பெண்ணுமல்லவாணுமல்ல பேசாமனின்றவிடம்
ஒண்ணிலிருந்தஞ்சையு முண்டுபண்ணிக்கொண்டவன்
கண்மாயக்காரனென்றுங்கைக்குள்ளேயுஞ்சிக்காமல் மாய

கீர்த்தனம்-இ-ம்-பியாகடை-ஏகதாளம்

பல்லவி

ஆட்டுக்காலைத்தாரும் என்சாமிவா தாட்டுக்காலைத்தாரும்

அநுபல்லவி

ஆட்டுக்காலைத்தேடி யம்பலவானரே
காட்டுப்புலியும்பாம்புங் காத்துக்கொண்டிருக்குது ஆட்டு

சரணங்கள்,

க. கின்னரர்கிம்புருடராதியர்வீணையர்கெருடகாந்தருவர்சித்தவித்தியாதரர், தன்னிகரில்லாததந்திரர்மந்திரர் சரணஞ்சரணமென்றிருகைகூப்பிநிற்கப், பொன்னின்விமானத்தர்சிவிகைவாகனத்தர்பூதகணதிபர்போற்றியடிவிரும்ப அன்னவாகனத்தன் விண்ணிலேற வாயனாட்டுக்காலைத்தேடிக் கோட்டுப்பன்றியாயினான் ஆட்டு

௨. முப்பத்துமுக்கோடிதேவர்குழாங்களும்முனிவரானவரும்ரிஷிகளனைவோருஞ், செப்பமானசந்திராதித்தருங்கூடிச் செயசெயென்றுபாதந்தனைத் தேடுகிறார்கள். ஒப்பில்லாதகாளியம்பலத்தேநின்றுஉன்றனைக்கண்டுதொந்தோமென்றாடுகிறாள், மெய்ப்பதாகுமந்தக்காலையெனக்குத்தந்தால் வேண்டுமறுபத்தஞ்சாம் விளையாட்டாகுஞ்சாமி ஆட்டு

௩. ஆக்கியதிசைவளர்திக்குப்பாலகரு மாதிவைரவரும்நாதரனைவரும், தாக்கியதாவரசங்கம்கோடியுஞ்சந்தித்துப் பாதத்தைக் காத்துக்கொண்டிருக்கவே, பாக்கியஞ்செய்தவன் முயலகனொருகாலைப்பற்றிமுதுகணையில்வைத்துச் சுமந்துக்கொண்டான்,

தூக்கிபொற்றாளை யெனக்குத்தந்தாற் றலைசுமக்குஞ்சுமக்கும்
போதும்போதும்போதுஞ்சாமியிந்த ஆட்டு உச

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

சாமிதரிசனங்கண்டுசபலமானேனானே

அநுபல்லவி

வாமியொருபாகர்சபைவானராதிசபையில் சாமிதரிசனம்

சரணங்கள்

க. அனுதினமுமடிபோற்றுமடியர்தம்மைநினையாத மனிதனையுமீ
டேற்றவரமருளவே, தனனவெனவேபரதசாஸ்திரவிதிதவறு
மற்றினமுமுமைகாணநடனஞ்செய்தருள்சிற்சபையில் சாமி

உ. சோமனுயர்நதியரவுதூயதாகியகொன்றைத் தாமமணியுஞ்செ
ஞ்சடாபரனார், பூமன்முதன்முனிவோர்கணேம மாதவருடன்
சாமளசொரூபர்டணியேமசபைதனிலே சாமி

ங தேவாதிதேவரும்தில்லைமூவாயிரவரும்பாவணர்மூவர்தமிழ்பக
ரடியவரும், நாவாரவேபுகழ்ந்து பூவாலர்ச்சனைசெய்து காவ
லென்றேதுதிக்குங்கனகசபைதனிலே சாமி உ௫

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

அம்பலவாணர்நீரே தென்புலியூ ரம்பலவாணர்நீரே

அநுபல்லவி.

அம்பலவாணர்நீரே யன்பர்க்கன்பானசுவாமி
செம்பொற்கிளிமொழியாள் சிவகாமிநாதர்நீரே அம்பல

சரணங்கள்

க காலனையுதைத்தீரே காமனையெரித்தீரே
வேலனையீன்றீரே வேதவஸ்துவும்நீரே அம்பல

உ திரிபுரமெரித்தீரே திங்களைத்தரித்தீரே
கரியையுரித்தீரே காலகாலரும்நீரே அம்பல

ங இடைபிங்கலையுநீரே யேகப்ரம்மமும்நீரே
விடையின்மேல்வருவீரே வெட்டவெளியும்நீரே அம்பல உ௬

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்

பல்லவி.

ஆராராசைப்படார் நின்பாதத்துக் காராராசைப்படார்

அநுபல்லவி

அருள்பாராய் பதம்தாராய் துயர்தீராய் புலியூராய்
நின்பாதத்துக் காரார்

சரணங்கள்

க கனகமேனியன்பனகசயனன்கஞ்சனுடன்பதஞ்சலிபோற்ற,அன
வரதமுங்கனகசபையுளாடிச்சிவம்தென்னைத்தேடியபாதத்துக்

உ பாவித்தவெங்கணற்போலுற்றவந்தகன் பாசத்தின்மேவியேநே
சிப்பதேதுன்னைச். சேவிக்கவேளையிலேமுத்திபாலுக்குந் தே
வேயென்னையாண்டகோவேநின்பாதத்துக் காரார்

ங அருவரைதன்னையொருபதுகையா லசைத்துபலன்கொண்டெ
டுத்தராவணன், ஒருபதுகரம்நெரியவே முன்னொருவிரலூன்
றுமருமலர்ப்பாதத்துக் காரார்

ச மூவாயிரவரும்பூவார்மனிதரும் முப்பத்துமுக்கோடிதேவர்மு
னிவரும், தேவாதிதேவனே வாவாவென்றேத்திடும்தேசாசிவ
காமிநேசாநின்பாதத்துக் காரார் உள

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி

நானேமுழுதும்நம்பினேன் கனகசபையானே நின்பாதந்தானே

அநுபல்லவி

ஆனேவாகனமாகக்கொண் டோனேபுலியூரானே
அறியேநான்சிறியேன் பிரியாதருள்செய்வாய் நானே

சரணங்கள்

க விடியாமிடியார்கொடியார்பக்கலிற்றமிழ்ப் படியாதருள்செய்யவு
ம் குடியாயிருக்குமுன் அடியாருடனேயென்னைக்கூட்டாய்கா
ட்டாய்காட்டாய்திருநடனம் நானே

உ கனவிலுநனவிலுமனதிலுமுனைநாடிக் கவிபாடித்துதிசெய்யவு
ந்தினமும் வரந்தானேயருளுன்பதியையெண்ணித் திருநாள்வ
ருநாளொருநாளுனைக்கண்டு நானே

ங அந்தரிசிவகாமசுந்தரிமணவாளா வந்தரிதொழுந்தாளா திந்திரி
டிகுடிகு திந்திமியெனவாடுஞ்சிவனே சிவனேசிவனே துணை
யென்று நானே

தாளகீர்த்தனம்-இ ம் கௌளிபந்து ஏகதாளம்

பல்லவி

ஐயனேநடனமாடியபொற்பாதா ஆனந்தக்கயிலாயனே

அநுபல்லவி

துய்யனேதிருச் சபைதனில்தாண்டவஞ்
தோகுஜெம்தரி தாகுதித்திமி திகுர்தமென்றெரு பாதந்தூக்கிய ஐ

சரணங்கள்

க கங்கைசடைக்கணிந்த கருணேசாதவளங்கா
அங்கையின்மழுவேந்து மாநேபரமலிங்கா
செங்கைபார்ப்பதிபங்கி ஞளும்வளாபிரசங்கா
ஜேகுஜெம்தரிதாகுதித்திமி திகுர்தமென்றெரு பாதந்தூக்கிய

உ வேழமுகனைப்பெற்ற விமலாநமச்சிவாயா
ஆழிதரித்தகைய ஞன்முகந்தனேயா
சோழன்கைவெட்டுண்ட தூயாஅன்பர்சகாயா
ஜேகுஜெம்தரிதாகுதித்திமி திகுர்தமென்றெருபாதந்தூக்கிய

ங சித்தஜனுடன்புர மெரித்தபாபநாசா
உத்தண்டசர்வேசா உமைமகிழ்ந்திடுநேசா
சத்திமாகாளிமுன் றலைகுனிந்திடவீசித்
தாகுஜெம்தரி தாகுதித்திமிதிகுர்தமென்றெருபாதந்தூக்கிய

தாளக்கீர்த்தனம் இம் தோடி சாப்புதாளம்

பல்லவி

ஆடியவேடிக்கைபாரீ ரையராடிய வேடிக்கைபாரீர்

அநுபல்லவி

தேடியமாலயன்காணுதபாதர் தில்லைமூவாயிரவர்கண்டவதீதர்
தாடொழுவார்க்கருணல்கும்பிரக்கியாதர் தம்பரமானசிதம்பரநாதர்

தாகுசேகிண சேகிணங்கிட தகிங்கத்தோம்தரிகிட
ததிங்கத்தோம் திரிகிடத்திங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்
ததிங்கத்தோம திரிகிட ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத் தத்திமிதிததிமிதெய்தெய்
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடததக
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடததக
தத்தடிங்கு தடிங்கு டிங்குகு

தகண தஜெணுத தகண தஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென ஆடிய

க. அதிரும்வாணன்குடமுழவோசைதிசைமுட்ட அந்தர துந்துமி நாதமகிலமெல்லாமெட்ட சதுர்முகனிசைக்கொத்தங்கருகிற்றாளந்தட்ட சதியறிந்தயன்றூதைதூக்கிமத்தளங்கொட்ட
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட
ததிங்கத்தோம திரிகிட ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதிததிமிதெய்தெய்
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடததக
தந்த திந்திமி தக்கிடத்திக்கிடததக
தத்தடி[illegible]ங்கு டிங்குகு
ததணதஜெணுத
ததணதஜெணுத்
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென ஆடிய

உ. விரித்தசெஞ்சடையாட விளங்குகுண்டலமாட மென்கைமான் மழுவாட மேனியிற்பொடியாடத், தரித்தவெண்புலிதன் மருங்கிலிசைந்தாடத் தண்டைகிண்கிணியிருதாளிலசைந்தாட
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம்திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம் திரிகிட
ததிங்கத்தோம் திரிகிடததிங்கத்தோம் கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமி தெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமி தெய்தெய்
தாம்தகுந்தரிதரிகு திருகுகு தரிகுஜெம்தரி

தாம்தகுந்தரி தரிகு திரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடததிக்கிடததக
தந்ததிந்திமி தக்கிடததிக்கிடததக
தத்தடிங்கு தடிங்குடிங்குகு
ததணதஜெணுத
ததணதஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென ஆடிய

௩. நன்மைசேர்தும்புருநாரதரிசைபாட நாரதப்ரமானந்தத்தழுந்தி யாவருந்தேடத்தம்மெய்மறந்திருமாதவர்கூத்தாடத்தையலுமை மகிழ்கொண்டிருவ்ழிநாட
தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம்திரிகிட ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
தாம்தகுந்தரிதரிகுதிரிகுகுதரிகுஜெம்தரி
தாம்தகுந்தரிதரிகுதிரிகுகுதரிகுஜெம்தரி
தந்ததிந்தந்தந் தணந்தணந்திமி
தந்ததிந்தந்தந் தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத திக்கிடததக
தந்ததிந்திமி தக்கிடத திக்கிடததக
தத்தடிங்கு தடிங்குடிங்குகு
ததணதஜெணுத
ததணதஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோமென ஆடிய நடம்

தாளக்கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

நடிப்பவனே சிற்சபைநின்று நடிப்பவனே

அநுபல்லவி

நடிப்பவனேகங்கை முடிப்பவனேமற
படிப்பவனேவிடங் குடிப்பவனே நடிப்பவ

சரணங்கள்

க. அரியுமயனும் விண்ணமரர்முனிவருமனகதிநகரர் பனகசயன
மும் உருகியுருகியுள்ளொளியும்வெளியேயொளியும் வெளிபெ
ற வடியர் துதிசெய
தரிகுதரிகுகு தரிகுதரிகுகுதாம் தாம்தத்தாம்
திரிகுதிரிகுகு திரிகுதிரிகுகுதிம் தீம்தித்தீம்
தரிகுதரிகுகுதாம் திரிகுதிரிகுக்திம்
தரிகுதரிகுகு திரிகுதிரிகுகு
தக்தெய்யத்தெய்யத்
தரிகிடதகததிங்கணத்தோமென்று நடிப்பவனே

உ. அண்டரண்டமு மண்டலங்களு மஞ்சலிசிர பந்தனத்தொடு
சண்டுகண்டுளம் நைந்துபொங்கக் கணங்கனின்று வணங்கி
யின்புற
திந்த தந்தக தந்ததந்தக தாம் தாம் தத்தாம்
திந்ததிந்திகி திந்ததிந்தி தீம் தீம் தத்தீம்
தந்ததந்தக தாம்
திந்ததிந்திகி தீம்
தந்ததந்தக திந்ததிந்திகி
தந்ததெய்யத்தெய்யத்
தரிகிடதகத ததிங்கணத்தோமென்று நடிப்பவனே

௩. பட்டரானவர் சிட்டரானவர் பத்தரானவர் முத்தரானவர்
இட்டமாம்புலி கட்டபாத மிணங்கிநின்றுவணங்கியின்புற
தகதகததக தகததக தாம் தாம்தத்தாம்
திகிததிகிதிகி திகிததிகிதிகி தீம்தித்தீம்
தகததகதக திகிததிகிதிகி தீம்
தகததகதகதாம் திகிததிகிதிகி தீம்
தகததகதக திகிததிகிதிகி
தத்ததெய்யத்தெய்யத்
திரிகிடதகதக ததிங்கணத்தோமென்று நடிப்ப ௩௪

மூவடீக்கொலித்தாள-கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி

நிருத்தஞ்செய்தாரேஐயர் சதானந்த நிருத்தஞ்செய்தாரேஐயர்

அநுபல்லவி

திருத்தமானமன்றுள் சிவசிதம்பரநாதர்
தித்திமிதிமிதிமி திக்கிடத்திக்கிடத்திரு
தத்திமிதிமிதக ததிங்கணத்தோமென நிருத்தஞ்

சரணங்கள்

க, அருமறையொலிகதிக்க ஹர ஹர ஹர ஹர ஹர ஹர வென
வே அடியவர் குழாந்துதிக்க, திருநுதலுமைமதிக்கச் சிவசிவ
சிவசிவசிவசிவவெனவே சேர்ந்திருமுனிகுதிக்க தரிக்கதோந்
தத்திமி தரிகிடசத்தித்தாந்தாந்தாந்
ததண ததணஜெனு தஜெனு தஜெனுத
ததண ததண தகததிங்கணத்தோமென நிருத்

உ, தித்திமத்தளநாதந் திங்தோந்திங்தோந்திங்தோமெனவே ஜெக
மெங்கணுமோதப் பத்தரஞ்செழுத்தோதப் பம்பம்பம்பம்பம்
பம்மெனவே பகர்திருச்சங்கமூத
தித்தித்தோம் திந்திமிதிரிகிட தித்தித்தீந்தீம்
திரிகுகுதிரிகுகு ஜெம்ஜெம்ஜெம்தரி
தரிகுதரிதக ததிங்கணத்தோமென நிருத்

ங. தரணிபவத்தைக்கெலிக்கத் தகதகதகதகதகவெனவே தரித்த
கைமழுச்சொலிக்க கருதினரெண்ணம்படிக்க கலகலகலகல
கலகலவெனவே காலிற்சதங்கையொலிக்க
தரிகுகும் தரிதித்தி தரிகிட தித்திங்தோந்தோந்தோந்
தகணகடிங்குகு தடிக்குடிங்குகு
தகணககணதக ததிங்கணத்தோமென நிருத் ஙஉ

மூவடுக்கொலிக்கீர்த்தனம்-இ-ம்-கௌளிபந்து-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆனந்தத்தாண்டவமாடினார் தில்லையம்பலவாணர்

அநுபல்லவி

ஆனந்தத்தாண்டவமாடிநின்று ரரியருள்சித்தம்பெறச்சக்கொ
டன்றருச்சிக்குந் தனிப்புஷ்பந்தரிச்சுத்தம்பதத்திற்பொற் றிருச்சிற்
றம்பலத்துனின் ஆனந்தத்தாண்டவம்

சரணங்கள்

க. பாதச்சிலம்புகலீர்கலீர்கலீரென்னப் பைம்பொற்குழைகள் பளீர்பளீர்பளீரென்ன வேதபுராணந்தத்தெய்தத்தெய்தத்தெய்யென்ன விரித்துச்செஞ்சடைக்குப்பெண் தரித்துக் குஞ்சரத்தைக்கொன் றுரித்துத்திண்புரத்தைப்புண்சிரிப்பிற்சங்கரித்து நின் ஆனந்த

உ. மால்கைமத்தளந் தணுதணுதணுவென்ன மலரவன்தாளங் கணீர்கணீர்கணீரென்னச், சேல்விழிமாது சபாசபாசபாசென்ன சிறக்கக்கிண்கிணிச்சத்தந்தறைக்குட்கிங்கிணுக்கென் றுபிறக்கச்சொர்க்கமட்டுக்குந்திறக்கச்சபைநிறக்க ஆனந்த

ங. பத்தர்கள்தேகம் விரீர்விரீர்விரீரென்னப் பதஞ்சலிவியாக்கிரர் ஜெயாஜெயாஜெயாவென்ன சித்தகணங்கள் சிவாசிவாசிவாவென்ன திடுக்குச்செந்தணக்குத்திந்திடுக்குச் செந்தணக்கென்றவகுடுக்கைக்கைம்புயச்செங்கையடுக்கத்தொனியெடுக்க ஆன

இஃது

கொள்ளடக்கரைமேல்நின்றுபாடியது.

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்.

பல்லவி.

காணமல்வீணிலே காலங்கழித்தோமே

அநுபல்லவி

சேணுடர்போற்றுந்தில்லைச் சிதம்பரஸ்தலத்தை காணமல்

சரணங்கள்

க. சேரன்சோழன்பாண்டியனிரண்ணியவன்மன் கோபுரமுஞ் சூரவீரப்பபூபன் செய்ததிருமதில்களும் பாருலகும்போற்றுகின்ற பஞ்சாக்ஷரப்படிகளும் ஆரணங்கள்சூழ்ந்த திருவாயிரக்கால் மண்டபமும் காணமல்

உ. கங்கையும்நிறைந்தசிவகங்கையும்படித்துறையும்மங்கைசிவகாமியம்மை வாசல்பணிமண்டபமுந் திங்களணிதிருமூலநாதருட்சந்நிதியும் பொங்குசெல்வம்போலுயர்ந்த தங்கப்பேரம்பலமுங் காணமல்

ங. நிர்த்தசபை கனகசபை சிற்சபையின்தெரிசனமும் முத்திபெறலாமெனவேமுழங்குஞ் சின்னத்தொனியும் பத்தர்க்குட்சிறந்த கோவிந்தராஜர்சந்நிதியும் சுற்றிலுந்துலங்கரத்னசொர்னக்கொடிமரங்களும் காணமல்

ச. தில்லைமூவாயிரவர் முனிவர்பெரும்வீதிகளும்-அல்லும்பகலு மளிக்குமன்னதானசிறப்புஞ் - சொல்லரியமடங்களுஞ்சோலைக ளும்வாவிகளும் - நல்ல திருக்கூட்டங்களும் நாலுதெருவீதிக ளும் காணமல் ௩௪

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி

தெரிசனஞ்செய்வேனே முத்திகொடுக்குந் திருவம்பலவாணேசனை

அநுபல்லவி.

அரியயனிருவருமறியாத விமலனை
கரியுரிபோர்த்தநங்கருணைக்கடலைத்தேடி

சரணங்கள்

க. செஞ்சடைமதிகங்கையுந் திருமுகஞ்சிறந்த பங்கயச்செங்கையு மபஞ்சாட்சரப்படியும்பாதத்தணிசிலம்பும் நெஞ்சாரவேதுதி த்துநின்றெனதுகண்ணாரத் தெரி

உ. காளியுடன்வாதனை யிருமுனிக்குங்காட்சிகொடுத்தநாதனை மா லுடன்பணி யிரணியவன்மன்றனைக்கருள் காலகாலனையன்பா கருத்திற்குடிகொண்டானைத் தெரி

௩. சிவகாமிபிராணேசனை யெனையாண்டருள் தில்லையம்பதியீச னை அவனிதொழுதபாபரனை யென்னையனை சிவசிதம்பரதேவ சிற்றம்பலவாணனைத் தெரி ௩௫

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

கண்டபின்கண்குளிர்ந்தேன்ஜனனக் கடலைக்கரைகடந்தேன்

அநுபல்லவி

அண்டர்பிரானைக் கருணைகடாக்ஷனை யம்பலத்தைகண்டபேர்க்கரு ள்மோக்ஷனை அண்டபகிரண்டமும்படைநேயனை யாண்டவனை நித் தியத்தாண்டவராயனைக் கண்டபின்

சரணங்கள்

க. அந்திப்பிறைகங்கைதா னசைந்தாடவே யமரர்முனிவர் சிவசிவ வென்னவே சந்திததேயன்புடன் தும்புருநாரதர் சங்கீதமேபடி க்க விந்தைக்கிசைந்தமால் மத்தளம்கொட்டவே வேதங்கணீ ரென்றுதாளமுழங்கவே திந்தோந்திரிகிடதோதிமியென்னவே சிந்தித்துநின்றாடுமும்பர்கள்கோனைக் கண்

உ. பரவைத்தன்வாசலிற்றூதனை வேதனைப்பத்தர்க்குமுந்திரளித்திடுங்கர்த்தனைக், கரமதிற்சூலகபாலந்தரித்தானைக் கங்காளனைப்பரனை, நிராமயமாகப்புராந்தருணுதனைநித்தியகல்யாணனைச்சித்தவினோதனைப் பரம்பரமாகியவாண்டவனைக்கிருபைபாரென்பாருக்கருள்பேரம்பலத்தானைக் கண்

ங. தண்சேல்நல்விழிமாகாளிவாதுக்குத் தாக்களித்தெக்களி சொல்லியரண்டு கண்படைத்தேயெதிர்த்தாடுகின்றுன்தலைகவிழ்ந்தப்புறம்நிற்கவே, மண்ணிலொருபாதம் விண்ணிலொருபாதமாகவேவைத் தூர்த்தநடனஞ்செய் அண்ணலைக்கண்ணனையாருமுக்கண்ணனையனங்கனைவென்றகனகசபேசனை கண ஙசு

## விஷந்தீண்டியவுடன்பாடியது.

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்

பல்லவி

அருமருந்தொருதனிமருந்தம்பலத்தேகண்டேனே

அநுபல்லவி.

திருமருந்துடன்பாகமருந்து தில்லையம்பலத்தாடுமருந்து-இருவினைகளறுக்குமருந்து-ஏழையடியர்க்கிரங்குமருந்து அருமரு

சரணங்கள்.

க. கொன்றைதும்பையணிந்தமருந்து கோவைமீசிற் படர்ந்தமருந்து, மன்றுளேநின்றுடுமருந்து மாணிக்கவாசகர்கண்டமருந்து

உ. இந்திரானவர்வானவர்தாமுமிருடிகள்தமக்கெட்டாமருந்து, சந்திரசூரியர்காணுமருந்து தானேமூளைத்துத்தழைத்தமருந்து

ங. திரித்திதித்தியென்றுடுமருந்து தேவாதிமூவர்கள் காணுமருந்து, கருத்தைத்திருத்தியிருத்துமருந்து காலனைக்காலாலுதைத்தமருந்து அரு

கீர்த்தனம்-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்

பல்லவி

என்றுசென்றுகாண்பேனெனதுகண்குளிர

அநுபல்லவி

மன்றுள்பதஞ்சலி புலியூர்வாழுஞ்சபாபதியை என்று

சரணங்கள்.

க. புண்டரீகமுகத்தழகும் புன்சிரிப்பினழகும், வண்டுநிறவிழியழகும்வரிசைதந்தத்தழகும், குண்டலமுஞ்சவுக்கிளியும் கொப்பு

தரித்திடுமழகும், மண்டலமெல்லாம் விளங்குங் கண்டசரத் தழகும் என்

உ. மெய்யெல்லாம்வெண்ணீறு விளங்கியவற்புதவழகும் கைகளிலே தரித்திருக்குங்கனலும் டமருகமும் பையரவம்பூண்டகையாற்டயந்தீர்க்குமழகும் வையமெல்லாமுய்யவங்கண் வரவீசுங்கையழகும என்று

ங. குஞ்சிதபாதத்தழகுங்குளித்தவோர்பாதத்தழகுங்,கஞ்சன்முடிமாலையொடுகவின்பதக்கத்தழகுங், கொஞ்சுமொழி சிவகாமிகூடநிற்குமழகும் நெஞ்சைவிட்டுநீங்காம னிதமுமனங்களிக்க என்றுசென்றுகாண்பேனெனதுகண்குளிர என்று ஙஅ

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி

காணமுத்திபெறலாமே ஒருதரத்திற் காணமுத்திபெறலாமே

அநுபல்லவி

காணமுத்திதருந்தில்லைத் தாணுவாயிருந்துபஞ்ச பாணனைக் கண்ணுலெரித்த, சோணகிரிவல்லவா புராணசுந்தரர்தமிழ்மூவாணருக்கருள்செயும்நிர்வாணரெனும்பேரம்பலவாணர்தஞ் சிவந்தபாதங்காணமுத்திபெறலாமே காண

சரணங்கள்,

க. பண்டுவிடமுண்டுநீலகண்டபுரஹரசம்பு முண்டகத்திருமணாளர்புண்டரீகாசனர் துதிகொண்ட சிவசங்கரபிரசண்டகாலனை யுதைத்துத் தண்டனைபுரிநடேசர் புண்டரீகமலர்த்தாளைக் கா

உ. பஞ்சவதனமகேசர்குஞ்சரசருமதரர் வஞ்சிசிவகாமிநேசர் தஞ்சமென்றடைந்தவர்தம், நெஞ்சிலுதயம்புரிந்த விஞ்சுகனகசபேசர் செஞ்சிலம்பணியொளிர் குஞ்சிதத்தாண்மலரைக் கா

ங. தேடரியதிகழ்பாதமாடரவப்பூணணிந்து வேடனுக்கருளிமூவர்பாடவேமனமகிழ்ந்து, நீடியசெஞ்சடையினுடியகங்கைபுனைந்துகூடிவொளிர்நடராசராடியமலர்ப்பதத்தைக் கா ஙகூ

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிராகம்

பல்லவி

ஹரகரசிவசிவநமச்சிவாயா வெங்களம்மைசிவகாமசவுந்தரிநேயா

அநுபல்லவி

டரவுந்தொண்டருக் கன்புசெய்யுஞ்சகாயா நித்தியபதம்பெறு சமயத்தினிதம்பரிவாயிருந்து மிதம்பெறவிளையாடுஞ்சிதம்பர தேவா அரகரசிவசிவ

சரணங்கள்

க. தினமும்நின்பதசேர்வை சேவிக்கவேணு மிந்தத் தெரிசனமே மோட்சபலமெல்லாங்காணும் நினைவெல்லா மந்தரூபமாயத் தோணுமென்றும் நித்தம்பலதேவதைகள் சுற்றம்பலவிருந்தாலும் வெற்றம்பலமல்லாதுசிற்றம்பலமாமோ அர

உ. யாவர்க்குமுயிர்க்குயிரா உறைந்தாயேபரம ரகசியமாகவெங்கும்நிறைந்தாயே மூவர்க்குமுதல்வனைச் சிறந்தாயே கருணைமுகதரசெகநகநகவெனநடமிடுயுகதரவரடமருககரதரனே அர

ங. பாதிமதியணிந்தபரஞ்சோதியன்பாய்ப் பணியுந்தொண்டருக்கெல்லாமநுபூதி ஆதிவுமைபதியாகியநீதி மிகவும்பரமானதிகபரரூபபரம்பரமானசிதம்பரதேவா அர

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி

யார்க்குத்தெரியுமையா சபாபதிநீ ராடியவிந்தைதானையா

அநுபல்லவி

தூக்கியபாததிரிசூலமுங்கையிலேந்தித்தும்புருநாரதர்கிம்புருடர்கின்னரர் சூழப்பொதுவிலன்பர் தாழவாடினவிந்தை யார்க்குத் தெரியுமையா.

சரணங்கள்

க. பாதச்சிலம்புமசைய உமையாளிடப்பாகத்திற்கூடியொசியவே வேதகீதங்களும்நின்றோதவேமழுவேந்தி விடையைவிட்டிறங்கிச்சடையைவிரித்துக்கொண்டுவேளைபார்த்து வொருதாளைத் தூக்கிக்கொண்ட தார்க்

உ. குண்டலம் ரண்டுதுலங்க திருச்சடையிற் குளிர்கங்காதேவிகுலுங்க பண்டுசுந்தரர்க்காகப் பரவைக்குத்தூதுசென்று பதும நல்லழகிய வதனவிழிசுமந்த பாதம்நோகாமற் சாமவேதம் பாடிக்கொண்ட தார்க்

௩. திருச்சிற்றம்பலவாழ்வோய் பத்திவலையிற் செகந்துத்திடவீழ்வோய் தரித்தித்தித்தோந்திமிதிரித்தித்திச்நீந்திமி தகதகதரிகிட திகிதிகிதிரிகிட தாத்திம்மென்த்திருக்கூத்தாடியவிந்தை

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி

சுந்தரகுஞ்சிதபாதவிலைகண்டு தொண்டுசெய்வாய்மனமே

அநுபல்லவி

சந்ததந்தில்லை சிவகாமிபங்களூர் தானந்தமாகிய
வானந்தநாடகச் சுந்தர

சரணங்கள்

க. அச்சுதன்முன்னளிலேனமாகித்தேடு மரக்கன்றலைகணெருங்கிடச்சூடு மெச்சியோர்பாம்புப்புலியுங்கொண்டாடு மேலாஞ்சிதம்பரந்தன்னினின்று நிஞ் சுந்தர

உ. வெஞ்சினத்தேமனுயிரைமடிக்கும் வீட்டின்பந்தந்தெண்ணந்தன்னைமுடிக்கும் செஞ்சிலம்புங்கிண்கிணியும்படிக்குஞ்சிற்றம்பலத்திலென்னுளும்நடிக்குஞ் சுந்தர

௩. நல்லவர்செம்மைமனத்தவர் போற்றும்நம்புமடியார் பிறவியை மாற்றுந் தில்லைமூவாயிரர் பூசைசெய்தேத்துந் திருமால்தன்கண்ணைமலரெனச்சாற்றுஞ் சுந்தர சுடு

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்

பல்லவி

தூக்கியபாதத்தி னேக்கொளிகண்டு சும்மாயிருநெஞ்சமே

அநுபல்லவி

தூக்கியபாதத்தைக் கண்டவர்க்கே சித்திசொன்னேன் சொன்னேன்முக்காலும்வெற்றி தேக்குங்கருணைச் சிவகாமியேசத்தி தில்லைச் சிதம்பரங்கண்டவர்க்கேமுத்தி தூக்கிய

சரணங்கள்

க. பாக்கியமானபராபரங்காணும் பார்ப்பதெல்லா மதுவாகவே தோணும் வாக்குமனதுக்கெட்டாததுபூணு மன்றுள்நடனமுனக்குள்ளே காணுந் தூக்கிய

உ. பிறப்பிறப்பென்னுந் துயர்போயொளிக்கும் பேரின்பமானசுகமேயளிக்கும் மறப்புநினைப்புமிலாதமிளிர்க்கும்மன்றுடையானருள்கொண்டு தளிர்க்குந் தூக்கிய

௬. தத்துவமெல்லாந் தலைதடுமாறுந் தானோநாமானவிடங்கண்டு தேறும் அத்துவிதப்பொருளாகியேவீறு மானந்தவின்பவமிர் தம்முள்ளூறுந் தூக்கிய ௪௬

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

சிவந்தபாதத்தைக்காணவேணுமென்று சிந்தையினினைமனமே

அநுபல்லவி

தவந்தனக்குப்பயன் தருவோமெனத்தில்லைச்சபையி
னடனமிடுந்தாண்டவராயன் சிவந்த

சரணங்கள்

௧ அம்பரத்தினின்றமரர்கோன்முனிவர்க்கு மாறுசமயவேதசாஸ் திரத்தலைவர்க்கும் உம்பவர்க்குமுயரிருடிகட்கு மூலகிலுள்ள பேர்களுக்குமோமென்றாடிச் சிவந்த

௨ பதஞ்சலிபகவற்கும்வியாக்கிரபாதற்கும்பலனுளும்நடஞ்செய்த பாதங்காண்பதற்கு நிதமுமவனருளினாலே துதிக்குமன்பர் நி னைவிலுங்கனவிலும்நின்றுநடம்புரிந்து சிவந்த

௩ காளியுடனேகூடிவாதாடினவிந்தைகண்டதில்லைக் காதாற்கேட் ட துண்டிப்போது தூளியுடம்பிற்பூசி மான்மழுவு மேந்தித் தொந்தோமென்றொருகாலைத்தூக்கிநின்றாடிச் சிவந்த ௪௭

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

பல்லவி

அவனேதேவர்கள்கண்ட னவனேதேவர்கள்தலைவ
னவனைத்தினமுநினை மனமே

அநுபல்லவி

தவனேசர்பணிசிதம்பரவாச னொளிருஞ்சிற்சபைநட
ராஜனெவனோ அவனெவனோ அவனே

சரணங்கள்.

௧ இகலாதியேகனநேகனென்றேதிகழுமெழிலானஜோதியெவனோ புகலாதிபூமியான் மாவந்தபாசபரிபூரணமானதெவனோ சகலா தியெபயர்சராசரமாகியேநின்றசப்புநாதனெவனோ அகலாதியம ரருக்காதாரமோர்தெய்வபாமகாதேவனெவனோ வவனெவனோ

௨ உருவாலுமருவாலுமுருவருவதினாலு மொளிரும்பிர்ம்ம செவ்
னே விரிவாலுமுபர்வாலு மெவ்வுயிர்க்குமுயிராய் விளங்கிய
மெய்யனெவனே ஒருநாலுமறையாலு மூடுச்கலை களினாலுமோ
தொணாதனெவனே அரியாலுமயனாலுமடிமுடி பறியாதவா
திமுன்னாதியெவனே வவனெவனே அவனே

௩ பேரானவரிசிரமேறிப்பிளந்திடும் பெரியதானுமெவனே நேரா
னபங்கயன் சிரமதைக்கிள்ளிடும் நிமலனமலனெவனே ஏரான
மதனைமுன்னுதலின் விழியினாலெரித்த பகவானெவனே சீரா
ன புலியூரிற்சிவகாமிபங்கனாஞ் சிற்சபாபதியெவனே வவனெ
வனே அவனேதேவர்கள்கண்ட ௪௫

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

மறவாதிருநெஞ்சமே உனக்கிது பிறவாமருந்தாமே

அநுபல்லவி

நறுமாமலர்ப்பொழில் சூழ்தில்லையம்பல நாதர்க்குஞ்சிதச்
செம்பொற்பாதமிமைப்பொழுதும் மறவா

சரணங்கள்

௧ நிச்சயமாகவேகேளாயஞ்செழுத்துண்டுநிற்கும் நிலையையறிந்து
ச்சரித்துக்கொண்டு வைச்சவழியேசென்றும் அச்சமறவேகண்
டுமென்றுளானந்தநடமின்றேகண்டுகொளென்றும் மறவா

௨ பழையவடியார்திருவடியில்வீழ்ந்தெழுந்து பணிசெய்யவே யவ
ரிரங்கிமனமகிழ்ந்துபிழைவராமற்காத்துத் திருவடிநிழலிற்பிச
கா திருக்கவைப்பாரசையாய்நீயெப்போதும் மறவா

௩ தினவாரமுந்திருமூலத்தானமேசென்றுதெரிசனஞ்செய்சிவகா
மிசந்நிதிகண்டு அனவரதமுஞ் செம்பொனம்பலத்தாடிய வம்
மையப்பர்பொற்றாள்செம்மையாகக்கண்டு மறவா ௪௬

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி

சிவனைமறவாதே நினைமனமே-ஒருக்காலுஞ்
சிவனைமறவாதே நினைமனமே

அநுபல்லவி

அவனியுடன்பகிரண்டங்களையுமளித் தாண்டவனைத்
தாண்டவனைபரசம்பலத்தானைச் சிவனை

சரணங்கள்.

க நடவாதநடக்கைநடந்தாலுங் கூடியடையாத கொடியகலியரவு
தொடர்ந்தாலும் படையாளர்சிற்றுமடர்ந்தாலும்மாதர் கடை
மனைதோறும்நிதங்காத்துக்கிடந்தாலுஞ் சிவனை

உ பெண்ணாசைவந்துபிடித்தாலும்நம்மையெண்ணமலேயொருவ
ரேசியடித்தாலும் புண்ணாகிமனதுதுடித்தாலு மோய்ந்துகண்
ணாகிசெவிமூடிக்கால்கள் துடிக்தாலுஞ் சிவனை

ரு வாரியளறுயுறைந்திட்டாலும் பொன்னும்மேருகிரி வீறுபடவி
ண்ணுடைபட்டாலும் பாருலகவர்ழ்வது கெட்டாலும் முந்த
யாருமறியாதபழிபாம்வினைதொட்டாலும் சிவனை

ச அரியபிரமபதங்களழிந்தாலு மின்னுமிருசுடருமாறி யெதிரே
றியிழந்தாலும் வருணனும்மண்மாரி பொழிந்தாலும் நாளுந்த
ருமநெறிபகருமறைதவறிமொழிந்தாலுஞ் சிவனை

ரு. மருமலர்களணியுமம்பரனைத் தேவதருவாகிக் கதியின்பந்தரு
ங்குருபரனை உருவர்கிளரும் திகம்பரனைசீலத் திருவுடனேநட
னமிடுஞ்சிதம்பரேஸ்வரனை சிவனை சஎ

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி

பேசாதே நெஞ்சமே பேசாதே

அநுபல்லவி.

பேசாதேநெஞ்சேபின்சொல்லிப் பேசியுந்தானென்னகண்டாய்
ஈசர்புலியூரில்வளர்நேசரதுபூதியல்லாற் பேசாதே

சரணங்கள்

க சிங்காரவிடைபிங்கலைசங்காரவழிபோகாமற் பொங்கமாகவேகி
றுத்தியெங்கள்குருராயர்பாத மேத்திக்கோ மனதைத்தேற்றி
க்கோ அருளைக்காத்துக்கோ அஞ்செழுத்தையும் போற்றிக்
கோ நானென்றசத்தம் பேசா

௨ ஆசையாயைந்துருப்பையு மூமைமெழுத் துள்ளிருத்திச் சோம
சேகரன்பதத்தைநாமெனக்கருத்துள்வைத்து நாடிக்கோ பொ
ருளைத்தேடிக்கோமுத்திவழியைக்கூடிக்கோ ஆனந்தக்கூத்தா
டிக்கோநானென்றசத்தம் பேசா

௩ பட்டிப்பசுக்களைந்துண்டுகொட்டிலிலடைத்துக்கொண்டு எட்
டெழுத்துருவையுண்டு பொட்டெனச்செபத்திற்றெண்டுபூண்
டுக்கோவருளை ஈன்றுக்கோ நமது ஆண்டவன்தில்லையம்பலத்
தாண்டவன்தன்னைநீகண்டாற் பேசாதே ௪௮

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

சிதம்பரமேநினைமனமே ஜென்மமீடேறச்
சிதம்பரமேநினைமனமே

அநுபல்லவி

சிதம்பரமேமுத்தி சின்மயமாகிய
டதஞ்சலிபூசித்த பாதரைக்காணச் சிதம்பரமே

சரணங்கள்

௧ ஆகமவேதபுராணவல்லாசசிவோகமகேசநடேசரைக்காணச் சி
௨ தக்கிடதிக்கிடதரிகிடவெனவே திக்குநடனமிடும் வேதரைக்கா
ணச் சிதம்
௩ திந்திமிதிமிதிமிதிமிதிமியெனவே விந்தைநடனமிடும் வேதரை
க்காணச் சிதம்
௪ சந்தனலேபனசம்பிரமலாலித சந்தவசந்தவை போகரைக் கா
ணச் சிதம்
௫ பத்தியருட்சிவ காமசவுந்தரி முத்திதரும்பரா சத்தியைக் கா
ணச் சிதம்
௬ தரணியிலனைவருந் தமியொடுதுதிசெயு மிரணியவன்ம விநோ
தரைக்காணச் சிதம்
௭ தேவர்தொழுந்திரு மாலயன்தேடு மூவாயிரர்பூசித்த மூர்த்தி
யைக்காணச் சிதம் ௪௯

கீர்த்தனம்-இ-ம்-மங்களகவுசிகை-ஆதிதாளம்

பல்லவி

தெரிசனமேநினைமனமே சபாநாதர் தெரிசனமேநினைமனமே

அநுபல்லவி

தெரிசனமேமுத்தி பரிசனமோநித்ய
வரிசைநடம்புரி வாழ்சபைவாணர் தெரிசனமே

சரணங்கள்

௧ கஞ்சமலருதயன் கஞ்சவனிதைபதி கஞ்சநயனன்பணி கஞ்சமல
ர்த்தாள் தெரி

௨ ஆகமத்துட்பொரு ளாகிநிறைந்தசுதாகரபநிமைகோ ளாகாச
லிங்கர் தெரி

௩ கனகாம்பரதர கனகசடாதர கனகசுபாகர கனகசபேசர் தெரி
சனமேநினைமனமே தெரி ருமு

கீர்த்தனம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்

பல்லவி

தோத்திரஞ்செய்மனமே உபாக்கிது மாத்திரமுற்பனமே

அநுபல்லவி

காத்தெமையாளும் வெண்ணீற்றனைவார்சடை
யாற்றனையானந்தக் கூத்தனையனுதினம் தோத்திரஞ்

சரணங்கள்.

௧ ஈசனைக்கனகசபேசனை ஞானப்பிரகாசனையோர்சொல்லும்வாச
னைப்பதஞ்சலிபூசனைசெயுஞ் சருவேசனைக்கயிலாச வாசனைத்
திருநடராஜனைபரனைத் தோ

௨ பாணனையாண்ட நஞ்சூணனைவாசுகி நாணனையக்கினிப்பூணனை
மால்தேடுஞ் சேணனைநித்யகல்யாணனைமுத்திநிர்வாணனையம்
பலவரணனையரனைத் தோ

௩ வேளனைமுண்டகத்தாளனைவீறுங்கங்காளனைவிபூதித் தூளனை
ப்பாம்பணிதோளனையடியவர்க்காளனையாதிரைநாளனை யுமை
மணவாளனையரனைத் தோ ருக

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி

நிர்த்தமிடுந்திருச்சிற்றம்பலவரை நித்தம்நினைமனமே

அநுபல்லவி

வித்தைவருமுயர் புத்திவருஞ்செல்வ
மெத்தவருமொன்று மொத்துவரும்மன்றுள் நிர்த்த

சரணங்கள்.

க செந்திருமாலயனிந்திரன் மாதவர்செய்யமுனிவர் செயசெயவெ
ன்றிடத் தந்திரமாயொருகாலைத் தூக்கிக்காளிமுன் தாகுதோ
திமிதிந்திமிதாவென நிர்த்த

உ சகலபுவனத்தவரவர்போற்றிடச் சந்திராதித்தர் கள்தாமுந்துதி
த்திடச் செகணதோதிமிதிமிதத்திமிதிமி திகுததாகுதாகு கிக்
கிடதத்தீயென நிர்த்த

ந அந்தமுள்ளமாலே சொந்தசவுந்தரியான சிவகாமியம்மைமகிழ்
ந்திடத் தந்தநாதன தானதானதன தக்குதிக்குடிகு தளங்கு
தாவென நிர்த்த ருஉ

கீர்த்தனம்-இ-ம்-நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

தேடித்திரியாதே நெஞ்சே தேடித்திரியாதே

அநுபல்லவி

தேடித்திரிந்து திகையாதேநெஞ்சே
சிற்றின்பத்தாலே ஜெகமெல்லாம்பஞ்சே தேடித்

சரணங்கள்.

க நானென்றவாணவந் தன்னையேநீக்கு நாதாந்தப்பேரொளிதன்
னிலேதாக்கு மோனமாமந்திரத் துண்மையைநோக்கு முத்தி
க்குவித்தாய் முழுமதியாக்கு தேடித்

உ ஆத்துமஞானிக்குமெய்தனிற்சொட்டு அண்டரண்டபகிரண்ட
ங்கள்விட்டுப் பேரானவானந்தவெள்ளத்தையெட்டுப்பேச்சுஜை
யற்றவிடந்தனைக்கிட்டு தேடித்

ந போட்டவிடத்திற்பொருள்தனைத்தேடு போதகிஷ்டையுட்புகு
ந்துநீயாடு நாட்டமுடன் சற்குருபாதந்தேடு நாலாம்பதத்தி லரு
ருள்ஞானவீடு தேடித் ருந

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்

பல்லவி

கண்டாயோமனமே நடேசனைக் கண்டாயோமனமே

அநுபல்லவி.

அண்டமுழுதும்பிர்ம்ம மென்றுதோன்றலீலை
கொண்டவஸ்துவாய்வந்த புண்டரீகபுரத்தைக் கண்

சரணங்கள்

க தொந்திப்புநீங்கினையே மெய்ஞ்ஞானத்தின்சந்திப்பு வாங்கினை
யே செத்துப்பிரளயகன்ம மென்றுபகலிறவா யந்தக்கரண்மே
யானந்தக்கடலுருகிக் கண்

௨, சத்துவக்குணம்புகுந்தாய்ரஜோதம மற்றகுணமிகுந்தாய், செத்தகயிறுதனிற் புற்றுப்பாம்புப்பிரமை யுற்றுந்தெளிந்துமகிழ் பெற்றதிரள்பேரின்பங் (கண்)

௩, இன்பந்தெளிந்துகண்டா யசேதன வெம்பசி தீர்ந்துக்கொண்டாய், அன்புக்கினியதோர் சிதம்பரந்தனிலே நடம்புரிந் தருடரு மம்பலவாணனைக் (கண) [ருச]

கீர்த்தநம்-இ-ம்-சாவேரி-சாப்புதாளம்.

பல்லவி.

சிவசிதம்பரமே தெரிசிக்கமனமேஜெனனமில்லை யிதுநிஜமே

அநுபல்லவி.

தவசிகட்கூடஞ்செய் சம்போசங்கரசிவ
பவநாசபுனித பஞ்சாட்சரரூபர்வாழ் (சிவசிதம்)

சரணங்கள்.

௧, பரவும்பதஞ்சலிவியாக்கிர பாதரோடும் பார்த்தவர்க்கெல்லாம்பிர்ம்மானந்தமேமூடும்; அரியுமயனு மயங்கிமே தேடுமாதியந்தமில்லா வமலனின்றாடுஞ் (சிவ)

௨, மங்களவேள்விபுமாதவர் பூசையு மருவியவாகம் வேதத்தினோசையுந. துங்கமத்தளதாளசங்கீத ஓசையுந் துலங்குமெய்யடியார் துதியோசையும்வளர் (சிவ)

௩, வல்லவர்வாசஞ்செய்தில்லை யுள்தொண்டு மகிழ்ந்து செய்வார் பதஞ்சென்னிமேற்கொண்டு - அல்லும்பகலும் பேரின்பத்தையுண்டு ஆனந்தநிர்த்தநடேசரைக்கண்டு (சிவ; [ருரு]

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-சாப்புதாளம்.

பல்லவி.

கெட்டுப்போகாதேநெஞ்சே அநியாயமாய்க்
கெட்டுப்போகாதேநெஞ்சே

அநுபல்லவி.

சிட்டர்தொழுந்தில்லைச் சிதம்பரந்தனில்வாழுஞ்
சிவனேசிவனேசிவனேயென்றுரையாமற் (கெட்டு)

சரணங்கள்

க, ஆசாபாசத்தைத்துரத்து - உனக்-கதினலுண்டோசொல் வரத்து, பேசாமலநுதினம்பிழைக்கும் வகையைத்தேடி பெருமான் பெருமான்பெருமானென்றுரையாமற் (கெட்டு)

உ, விழலுக்கு முத்துலைபோட்டுசும்மா வீணுக்கிரைத்தென்பலன் காட்டு, பழகப்பழகவெட்டுப் பழமென்றுசிக்குமோ பரனே பரனேபரனேயென்றுரையாமற் (கெட்டு)

ங, சஞ்சலமேதுனக்கடங்கு குரு சாமிபதம் பணியத்துடங்கு, வஞ்சகமேவேண்டாம் மன்னன் பொன்னம்பல—வரதா—வரதா வரதாவென்றுரையாமல் (கெட்டு) [ருசு]

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்.

பல்லவி,

இனிசுமக்க முடியாதுதேகம் தில்லை

அநுபல்லவி.

வனத்துறையுஞ்சிவகாமவல்லி யுமைபாகா இனிச்

சரணங்கள்.

க, மலத்தினல் விளைந்தபுழுக்கூடு - துன்ப - வாரியைம்புலவேடர் வாழும்பெருங்காடு, சலத்துளிபாமேலிந்தவீடு இருமை தளைத்தலெனுஞ்சனனந்தனையெடுத்துப்போடு (இனிச்)

உ, ஒருநாலுபேர்சுமக்கு மூட்டைநரனொருவனே சுமப்ப னிந்தவுடன்மாயக்கூட்டை, மருவிலாப்பழக்காயக்கோட்டை கன்னவாசலொன்பதாகியே வரும்பழையவீட்டை (இனிச்)

ங, வருவாதவூரனையுங்காத்தீர் இரண்ணிய வன்மனுக்குத்தனதாகமவரவேநீர்பார்த்தீர், திருநாளைப்போவானையுஞ் சேர்த் தீர் நாளுஞ்சிற்சபையிலானந்தத்தெரிசனந்தந்தேற்றீர் (இனிச்)

ச, வருவதென்றுமலாக்கொன்றைதாரும்-வந்து-வாழாதுவாழுமிந்த மலமயக்கந்தீரும் திருவருளானேக்கி என்னைப்பாரும் பார்த்துச்சித்தமகிழ்ந்தானந்தத் தென்மதுரைசேரும் இனிச்[ருஎ]

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்பிறவாமலேயாளாய் கேளாய்

அநுபல்லவி.

பொன்னம்பலவாணாவாகா பூமதனைவென்ற யோகா நிரந்தரமும்
ஏமசபையில்வைபோகா புலியூர்ச்சிவகாமவல்லியுமைபாகா (இன்ன

சரணங்கள்.

௧. காயமேநிலையென்றெண்ணி தீயபாவமேபண்ணிமாயநரகைக
ண்ணிவருந்தவேமுடியாது பாவஞ்செய்யாமலிருந்தகலவுமொ
ண்ணாதுதவஞ்செய்தாலு மிகுந்தஜனனமும்போதும் (இன்)

௨. தொலைபாச்சனனத்தாலே அலைவாய்த்துரும்புபோலேநிலையா
ச்சுழலின்மேலேநின்மனதருளைநாட்டி யகலாதகன்ம வினைக
ளைவிட்டோட்டி யழிவில்லாதசின்மய வீடுமாட்டி (இன்)

௩, நின்னருளினாலேவந்தேன் சந்நிதிதனையடைந்தேன் - முன்னம்
வினையைத்துறந்தேன் - மூண்டகடுவுண்டதூயா வணங்கினரை
யாண்டருளும்வெகுநேயா கனகசபை தாண்டவநடராயா (இ)

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரி-ஆதிதாளம்.

பல்லவி.

கலந்துகொள்வேனே இனிநான் கலந்துகொள்வேனே

அநுபல்லவி.

கலந்துகொள்வேன்தில்லை யம்பலந்தன்னிலே
காரணங்கடந்த பூரணத்துடனே (கலந்)

சரணங்கள்.

௧, கூற்றுவனைத்தொடரு மிருமைக்கொடியவினைகளடியோடகன்
றது சாற்றும்பெரியபுவன மெல்லாங்கொண்டு தானதுவானது
நானதுவாகக் (கலந்து)

௨, கட்டுரைகேளாதவன்மனம் யான்வைத்த காவலிற்றங்கியென்
னேவலாளாயது, தொட்டு மறித்திங்கெனைத் தடுப்பாரெவர்
சொல்லற்கரியதோர்நல்லவுறவினிற் (கலந்து)

௩, செங்கோட்கடவுட்பதமுமயான மூஞ்செய்பகமலத்தோன்கை
யுஞ்சலித்தது, நங்குருநாதன்குறியும் நிலைத்தது நம்பலமான
பேரம்பலச்சோதி கலந்து (௫௬)

## கீர்த்தநம்-இ-ம், ஆரபி ஏகதாளம்.

### பல்லவி,

மாணிக்க வாசகர்போலெனக்குத்தர வல்லாயோவறியேன்

### அநுபல்லவி.

காணிக்கையாகக் கொடுத்தேனுனக்கென்னை
ஆணிப்பொன்னேதில்லை யம்பலவாணா மாணி

### சரணங்கள்.

க, நோயும்வறுமையுஞ்சண்டையிடாதே நோக்கரைநோக்காகநோ
க்கிவிடாதே, தாயுந்தமருஞ்சலித்துவிடாதேசந்தியில்லையாதே
ஆயுமிளம்பிறை சூடியமூர்த்தியத்துவிநமுத்திபுத்தியளித்துத்,
தீயமறுமையெதிர் வின்றுதள்ளுஞ்சிற்சபைமந்திரசிதம்பதேவா

உ, கட்டிலைவிட்டுக்கிடத்து மென்னுதே காலக்காரங்களைக் கட்டுமெ
ன்னுதே, கொட்டிமுழக் கிட்டுக்கூகூவென்னுமேல கோரணி
கொள்ளாதே, யெட்டிபொருவர்புலம்பிவராதே ஏழப்பிணக்
கையெடுமென்றிடாதே சிட்டர்தொழுந்திரு கட்டளைமேவுஞ்
சிதம்பரதேவாதிருநடராயா [மாணிக்கவாசகர்]

ங, கட்டையின் மேல்வைத்துச் சுட்டுவிடாதே கள்ளக்குழியிற்பு
தைத்துவிடாதே, பட்டும்பணியுந்தரித் தயலோர்வந்துபாலள்
ளிக்குத்தாதே, கிட்டியொருவர்சடங்குசெய்யாதே கேட்டவ
ரெல்லாம் கிடைக்கத்தகுமென்னச், சிட்டிப்பவன் பணிசிற்ச
பைமேவுஞ் சின்மயரூபா சிதம்பரநாதா [மாணிக்கவாசகர்]

ச, அப்பருஞ்லிங்கத் தடைந்தனரென்று மாரூரர்வெள்ளைக்கரி யேறி
னரென்றுஞ், செப்பரியதிருஞானசம்பந்தர் தேசுடன் சென்று
ரென்றும், இப்படி யென்னையலைத்துவிடாதே எம்மானிருந்தப
டியே விருந்திடச், செப்பவருவீர் நடம்புரிமேவுஞ் சிதம்பர
தேவாசிவகாமிநேயா [மாணிக்கவாசகர்]

ரு, சிற்பரதற்பரமெய்ப்பொருளுங்கண்ட சித்தரெல்லாரும் நிறை
ந்துதெரிசிக்கக், கற்பதடாம நாலாஞ்சத்தினிபாதமுஞ்சாயுச்சிய
மும்பெறவே, பொற்பூமாரியிமையோர் சொரிந்திடப் பொன்
னூசலாடுந்திருவாதிரைநாளிற், கர்ப்பூரதீபம்போ லென்றனு
டலைக்கநகசபையிற்கலந்துகொள்வாயே. [மாணிக்கவாசகர்]

முத்துத்தாண்டவர்

சபாநாதர்பேரில்பாடியகீர்த்தநம்

முற்றிற்று.

---

ஆக—கீர்த்தனம்—கூ௰.

உ

திருச்சிற்றம்பலம்.

சபாநாதர் துணை.

---

# முத்துத்தாண்டவர்பதம்.

பதம்-இ - ம்-கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவாரென்றென் மனதைத்தேற்றுவாரல்லால்
வந்தாரென்பாரைக் காண்கிலேன்

அநுபல்லவி.

தெருவிற்கும்வாசற்குந் திரிவார்சகிமாரெல்லாந்
தில்லாபுரீசர்முன்போய் நல்லாரென்காதல்சொல்லார்(வரு)

சரணங்கள்.

க. நிலவிலுலாவச்சொல்வார் சலவைப்பன்னீரிரைப்பார் கல்விக்
குவேளையென்பார் மலர்மெத்தையிதுவென்பார், சமோவிதா
சிநேகப்பல மோகானேதுசெய்ய உலகாளுந்தில்லையீச ருலவி
யென்னையணைய (வரு)

உ. நாமறியோமோசாமிதாமதஞ்செய்வாரோ நீமயங்காதேயென்
றுபூமலேற்றவருவார், காமனார்வந்தாலென்ன சோமனார்வந்தா
லென்ன பூமலர்வாடுமுன்னே ஏமசபேசரென்முன் (வரு)

ந. கங்கைசடையிலாடச் செங்கையிற்றுடியாடப் பங்கயமெனுங்
கைகொள்மங்கையர்கள்கொண்டாட நங்கைசிவகாமிகொங்கை
சேர்புயமாட செங்கைவீசியாடச் சதங்கைபாதத்திலாட (வரு)

பதம் இ ம் நாதநாமக்கிரியை - ஏகதாளம்.

பல்லவி.

தேனார்மொழிமானாள் தன்னைச் சேரீர்மயல்தீரீர்

அநுபல்லவி.

மானார் கரனேயம்பலவாணுபணிபூணு [தேனார்மொழி

சரணங்கள்.

க. அாகம நசரிய முகமலர்விளெரியக் களபமுலே புளகமெழக் கல்விசெய்யத்தருணம், வளமைபெறுமக்கு மாலிகைமார் பாவ திருபா, களமார்விடவுண்டதில்லைக் கனகசபைவாணு [தேனுர்]

உ. அன்னதான் வசைபேசவே துணையானமாதருமேசவே, கன்னன்மாமத னெய்யவே மலர்க்கையிற்கங்கணந்தொய்யவே. என்னதான்செய்வாள்சொல்வீர் மயலெளிதல்லவேதில்லீர், மன்னுசுந்தரர்தூதா தில்லைமன்றுளாடியபாதா [தேனுர்]

ரு. சந்தனஞ்சுடுதென்பள் மனந் தகைத்தால் பகையென்பள் - அந்தியுந்தணலென்ப ளொரு - வல்லுநாறுகமென்பள், கொந்தார்கொன்றைத்தாமா - நறுகோதைபம்பிகைவாமா - இந்திரன்றிருமாலயன்றொழுமீசாநடராசா (தேனுர்மொழி) (உ)

பதம்-இ ம்-ஆஷாடகன்னடம்-ஏகதாளம்.

பல்லவி

பேசவுமெண்ணுதோ கோபமேதோ தென்புலியூர்

அநுபல்லவி

ஈசரேயுமக்குநானுகாதோ (பேசவுமெண்)

சரணங்கள்.

க. வருந்தினனைழைக்கவுமாச்சோ உம்முடன் - பொருந்தாதவென்னைச்சேர்ந்தா லேச்சோ—இருந்தவிடமெல்லாமவள்பேச்சோ - அவள்கையின -மருந்துதான்றலைக்கேறிப்போச்சோ (பேச)

உ, மாதவர்வசையாலேமனம்நோமோ - வென்னைத்தள்ள நீதமோ பெண்பழிவீணேபோமோ, காதலறியாதவர்நீர்தாமே - சுந்தரனுர் - தூதரேயிப்படிசெய்யலாமோ (பேச)

ரு. கொந்தலரமளியிற்சேர்ந்திரே சேர்ந்தணைந்து - சந்ததம்நீங்காமயல்தந்திரே, அந்தமின்னுர்தம்மைநினைந்திரே - சிவகாம -சுந்தரிபாகரே மறந்திரே (பேசவும்) (ரு)

பதம்-இ-ம-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

அப்படி யிப்படி செய்தற்கொப்பினேன் - தப்பிதமோதில்லைதாண்ட

அநுபல்லவி.

பொற்படியேகொடுத் தெப்படியாகிலும்
மெய்ப்புடன்வந்தென்னை யொப்புடன்கூடநீர் (அப்படி)

சரணங்கள்,

௧, வாலையிலேசந்தச் சேலையிலே முத்து மாலையிலேபொன்னோலை யிலேசெய்த, வேலையிலேயந்தி மாலையிலேதென்னஞ் சோலை யிலேகாமலீலையிலேநீர் (அப்படி)

௨, மேடையிலேமலர் சூடையிலேவிளை யாடையிலே யுறவாடை யிலே, நீராடையிலேயென்னைக்கூடையிலேமுத் - தாடையிலே கைபோடையிலேநீ (அப்படி)

௩, நாளையிலே யென்னையாளையிலே சொந்தக் - காளையிலேறியே வாளையிலே, யிந்தவேளையிலேநல்லநாளை யிலேகர்பக் - கோளை யிலேயாசைமீளையிலே-நீர் (அப்படி) (௪)

பதம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்.

பல்லவி,

சரசமிப்படிசெய்யலாமோ - சாமிநீர் - சரசமிப்படி செய்யலாமோ

அநுபல்லவி.

வரிபெறும்விநோதரே வளர்சிதம்பரநாதரே (சரச)

சரணங்கள்)

௧, ஸ்தனத்திலேகையைப்போடுறீர் முகத்திலேமுத்தம்நாடுறீர்
தலையிலேமலர்சூடுறீர் தழுவியேவிளையாடுறீர் (சரச)

௨, மானமுறுமெங்கள்குலத்திலே மாதவர்வருமின்பநலத்திலே
ஞானமுறுஞ்சவஸ்தலத்திலே நாகரீகபொன்னம்பலத்திலே()

௩. வேதந்துதித்திடுமநீதரே மிகுந்திடும்பிரக்கியாதரே
ஓதவருந்தில்லைவாதரே யுயர்சிதம்பரநாதரே(சரச) (௫)

பதம்-இ-ம்-சாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவி

வேண்டா மிதெல்லாங்காரியமல்ல - தீண்டாதேநில்லும்

அநுபல்லவி,

வேண்டா மிதெல்லாங்காரியமல்ல தீண்டாதேநில்லுந் தாய்தமர்கண் டால், ஆண்டவரென்றும்பயப்படார் இல்லைத் தாண்டவராயரே

சரணங்கள்.

க, இராவிலேவந்தென்னைமல்லிகைப் பூவினுலேயெறிந்துசருவித் தாவிமடியைபிடித்துப்பண்ணாத சரசமேபண்ணுறீர் கோவிலில்லாதவூரோவையோ பாவியேன்பக்ஷம்யார்சொல் வார்கள் - சேவிலேறும்நீதரே திருத்தில்லைநாதரே (வேண்)

உ, ஆருமில்லாவிடத்திற்பிடித்தாற் சேருவாளென்றுபார்க்கிறீர் அந்த-தாருகாவனத்துமாதர்போலல்ல சமர்த்திநானையா ஊ நமூலகுமறியச்சேலை தாருமிரவும்பகலும்வீட்டில் வாருங்கூடியணையலாஞ்செம்பொன் மன்றுளீசரே (வேண்)

ங, இன்னாரினியாரென்றெண்ணாமல் முன்னாளுறவாயிருந்தவரை ப்போற், பின்னாலேவந்துதழுவினாற்கண்ட பேரென்னசொல் வார், சொன்னாலுஞ்சற்றுமறிகிறீரில்லை முன்னாலறிந்தவர்வரு கிறார்பாரும்-பொன்னுடர்பணிகயிலை வாசரேபுலியூரீசரே (வேண்) (சு)

பதம்-இ-ம்-நீலாம்புரி ஜம்பைதாளம்

பல்லவி.

அழைத்துவாபோடி யடிமானே யின்பம்

அநுபல்லவி.

தழைத்தபுலியூரிற் றாண்டவரைத்தாமே (அழைத்து)

சரணங்கள்,

க, அன்னநடைமின்னே யேனிவ்வன்ம மென்னையன்னையென்று ம்பார்உன்றன்தன்மம் - சொன்னோ ணொருவார்த்தை கன்மம் நாளுஞ்சுகமுறவே மருவாதஜென்மமென்னஜென்மம் (அழை)

உ, செம்பொன் மலரின்பமுடன்கூடி யுயர் செம்பவள வாயிலிசை பாடிக், கும்பமெனுமிருதனததைநாடி - யென்னைக் - கூடியவர் போனவிடந்தேடி யுறவாடி (அழை)

ங, தில்லைவனந்தனிலிருக்குமீசர் - எங்கள் - சிவகாமவல்லியுடன்பிரி யாதநேசர், அல்லலறுத்தாண்டவர்பிரகாசர் இப்போது அன் னமேநீர்சொன்னால் வருவான்பிராணேசர் (அழை) (எ)

பதம் இ-ம்-எதுகுலகாம்போதி ஆதிதாளம்

பல்லவி,

ஆசைதீரவேயென்னை - அணைந்தாலொண்ணாதோ

அநுபல்லவி.

பூசைபுரியுந்தில்லை ஈசாசபைநடேசா (ஆசை)

சரணங்கள்.

௧. சந்திரனைக்கணடுநீல மந்தரங்கமானதுபோல் எந்தன்மீதிற்சட் சமலவத்துவந்தாலொண்ணுதோ, கந்தர்ப்பன்கைபுஷ்பபாண மந்திநேரமேவருமே தந்திரமோசெய்வதெல்லா மந்திரசபைந டேசா (ஆ)

௨. தேடியவல்லவன்பேடு-கூடிமருவாதிருந்தா-னிடிடவுலகிற்பே டோடிநின்றுய்யுமோ, நாடியேவந்தவென்மேல்மோடி செய்ய லாகுமோ பாடியகின்னரர் போற்றவாடியசபைநடேசா (ஆ)

௩. கருமேகங்கண்டு மயிலொருமைப்படுலீலைபோற் - கரிசனமுட ஞ்சேர்தல்பெருமையதல்லவோ, திருவுளமகிழ்ந்தென்னைமரு வணைமீதினிற் சுறுதிபுகழுந்தில்லைக் கனகசபைநடேசா (ஆ)

ஏசல்-பதம் இ-ம் சௌராஷ்டிரம் ஏகதாளம்.

பல்லவி.

௧. திருமுத்துப்பந்தலின்கீழ் கருதிப்பயன்முதலோர்
இருபக்கமுதொழுவேவரும் இவரார்சொல்லன்னே
ஒருபதஞ்சன்செயுந்தவத்தைத் தக் கருதிநிருத்தங்காட்ட
வருகிறபேரம்பல வாணர்காண்மின்னே

௨. வடகயிலைதனின்மூன்று சுடருமுதித்ததுபோல்
இடபமிசையேறிவரு மிவரார்சொல்லன்னே
கடல்கடையும்போதெழுந்த விடமமுதுசெயுநேசர்
நடனராதிபரர்தில்லை நாயகர்காண்மின்னே

௩. சுரரெனுமூவாயிரவர் திரளுமுனிவருஞ்சூழ
இரதமிசையேறிவரு மிவரார்சொல்லன்னே
சரமதராஜனுமூன்று புரமுமெரிபடமுனிந்த
பரமசிவகாமிவல்லி பங்கர்காண்மின்னே

௪. கந்தருவரிசைபாட தந்திரநான்மறைமுழங்க
இந்திரவிமானத்தில்வரு மிவரார்சொல்லன்னே
அந்தவடிவினர்தொண்டர் புந்தியில்வாழ்பவர்வால
சந்திரசேகரானந்தத் தாண்டவர்காண்மின்னே (சு)

பதம் இ௰ சௌராஷ்டிரம் அடதாளம்.

பல்லவி.

நேசமேன்பூசலே ஞசையேன்பேசுநீர்
நேசமேன்பூசலே ஞசையேன்பேசுநீர்

அநுபல்லவி.

வாசன்சேர்தில்லைநட ராஜரேமுந்தவும்மை
மோசஞ்செய்தாளேபந்த ரோசம்போதாதோ (நேசமே)

சரணங்கள்.

௧. வாடியென்றழைத்துற வாடிமுகவிச்சைகள்
பாடியவள்மேற்சிந்து பாடிக்கொள்வீரல்லாற்
போடியென்கிறபேச்சைப்போடீர் முன்னமும்பேய்க்கூத்
தாடியென்பதுமெய்க்க வாடியபாதரே (நேச)

௨. கொம்பனையாள்குதிரைக் கொம்புரண்டானையொரு
கம்பஞ்சேர்த்தீர்சேர்த்த கம்புகன்றிடக்கண்டீர்
அம்பலவாணரேவூ ரம்பலேனுமக்கிப்போ
யென்போலுமேயொருத்தி யின்பஞ்செய்வாளோ (நேச)

௩. பூண்டவாசையானேசம் பூண்டபோதேயெனக்கு
வேண்டாதவளைத்தீண்ட வேண்டாமென்றேனே
ஆண்டாரேநீரெனைப்பெண் டாண்டாற்றலைக்குமேலே
தாண்டவாறீரோதில்லைத் தாண்டவராயரே (நேச) (௰)

பதம் இ-௰ நாதநாமக்கிரியை ஏகதாளம்.

பல்லவி.

நானேவலியவந்தேனே கோபம்

அநுபல்லவி.

ஏனேயம்பலத்துறை வானேதுய்யோனே

சரணங்கள்.

௧. நினைந்துமனதின்வன்மங்கண்டு - நெஞ்சி னினையாதெல்லாநினை ந்துநின்றுதுவண்டு, கனதனமெனு ஸ்தனரண்டுநல்ல காணிக் கையெனவலங்காரமாகக்கொண்டு (நானே)

௨. தூறேதுமில்லையேயென்மீது- வீணே தூறுசொல்லிப்பிரிந்துவ ந்ததேசூது, வேறேயொருவரைத்தூது போகவிடுத்தாற் றீரா தென்றுவேண்டியிப்போது (நானே)

௩. தில்லையம்பலத்திலாடிநின்ற சிவனேநீர்வாராதசேதியைநாடி
முல்லையமளிமேற்கூடிக்கொண்ட மோகத்தையுன்னி முயங்க
வேதேடி (நானே) (௰௧)

பதம் இ-ம் நீலாம்புரி ஜம்பைதாளம்.

பல்லவி.

கனவிலுமறப்பதில்லை மானே நாளுங்

அநுபல்லவி.

கனகசபையிலாடுங் கடவுள்பதந்தானே (கனவிலு)

சரணங்கள்.

௧. ஒன்றாகநின்றசுந்தரமும் மூவுலகுக்குயிர்க்குயிராகியேயுண
ர்த்தும்விசித்திரமுங், குன்றாதருளளிக்குந்திரமு - மென்னைக்
கூடிவிளையாடிய வுபாயதந்திரமுங் (கன)

௨. இன்பவெள்ளத்தழுத்து மிங்கிதமுங்கிர்பை யெங்கெங்குந்தானா
யிருந்திலகுஞ்சதமும், அம்பரத்திலாடியபொற்பதமும் புஷ்ப
வணைமீதிலெனையணைந்தவனுபோகவிதமுங் (கன)

௩. பரமகல்யாணசர்வேசா யெங்கள் பார்வதியெனுஞ்சிவ காமிபி
ராணேசா, கருணைசந்திரசேகரவிலாசம் நாளுங் கனகசபையி
லனவரதமும்நடேசம், (கன) (௰௨)

பதம் இ-ம் யதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தனித்திருக்கப்போகாதமானே தில்லை

அநுபல்லவி.

வனத்துநடராஜர்தம்மைமருவாமனுனே. (தனித்)

சரணங்கள்.

௧. காமன்பெருங்கழைவலைத் தெய்யப்-பூர்ண
கலைநிறைந்தமாமதியுந் தழல்மாரிபெய்யச்
சாமமெல்லாங்குயிற்கூவி வையவென்
றலையிலெழுத்தோவிதென்றெண்ணி மனம்நையத் (தனி)

௨. இரவோர்யுகமாகுதெங்கே செல்வோனினி
யென்தரத்துப்பெண்கட்கிதையே தென்றுசொல்வேன்
கரவிலெய்யுமதனை யென்றுவெல்வேன்-வீறு
காதல்வெள்ளந் தீர்ந்தென்றுகலந்தணைந்துபுகல்வேன் (தனி)

ங. திங்கள்கங்கையரவணையும் வேணி-புலியூர்ச்
சிவகாமிவல்லியிடப் பாகமாக்காணி
செங்கமலப்பதத்தின் மனமுணி நறுந்
தேன்கமழும்பூங்கொன்றைத் தொடையதனைக்கேணி (தனி)

பதம்-இ-ம்-கல்யாணி அடதாளசாப்பு.

பல்லவி.

சபையில்வந்தெதிர்நில்லது அவரைக்கிட்டித்
தழுவவுன்றர மல்லடி.

அநுபல்லவி.

உபசரிப்பேன்சொல்லடி அம்பலவாணன்ருள் வரிந்தெனைவெல்லடி
சுபதினமென்றனக்குச் சொலபமாய்வந்தி போ
அபிநயம்பிடித்துக்கொண் டலைந்துநீதிரிகிருய் (சபை)

சரணங்கள்.

க. வழக்கமொன்றறியாயோடி நாலுபேர்சொன்னவார்த்தையுங்கு
றியாயோடி, இழுக்குக்குச்சிரியாயோடி தினமெடுத்தாலிடம்பா
ரத்துச்சொரியாயோடி உழக்கிற்கிழக்குமேற்கென்றுண்டாக்கு
கிருய்த்தேடி, மழைக்கொதுங்கிமனைக்கு வழக்கிடுகிருய்வடி()

உ. தெருவிற்பெண்களைக்கூட்டுருய் ஒளித்திருந்துதிருடக்கன்னக்
கோல்திட்டுருய், கருதித்திருகல் மூட்டுருய்விரித்துனது கடின
த்தொண்டையைககாட்டுருய் பெருமைக்கொருசரிகைப்படவை
யிரவல்வாங்கித், தரமரியாதுமந்தித் தசுக்குகின்றசித்திராங்கி ()

ங, இடக்குத்தொழில்மறக்குமோ-யுனக்கு இனிமேற்குணம்நிறக்கு
மோ, எடுத்தவடிசிரக்குமோ உன்மரிடகதினிலின்பயம்பிறக்கு
மோ, முடிக்காயமபலத்தானை முயங்குவேனுனென்று திடுக்கிட்
டெவருமெச்சத் தென்பாய்ச்சொல்கிருய்கன்று (சபை) (மச)

பதம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

தெருவில்வாரானே எனைச்சற்றே திரும்பிப்பாரானே

அநுபல்லவி.

உருவிலியொடுதிரிபுரத்தையுமுடனெரிசெய்தநடனராஜன் (தெரு)

சரணங்கள்.

க. வாசல்முன்னில்லானே வெனக்கொரு-வாசகஞ்சொல்லானே
நேசமாய்ப்புல்லேனேகழைவைத்த ராஜனைவெல்லேனே,தே
சிகனம்பலவாணனடம்புரி தேவாதிதேவன்சிதம்பரநாதன் ()

௨, போதுபோகுதில்லையே யெனக்கொரு - தூதுசொல்வாரில்லை யே, ஈதறிந்தேனில்லையே யென்மேற்குற்றமேதொன்று மில்லை யே, வேதனுமாலு மூவாயிரருந்திரள்விண்ணவருந்தொழ வா டியபாதன் (தெருவில்)

௩, மெய்யென்றிருந்தேனே - யவருடைசைகையறிந்தேனே - மையல் தணிந்தேனே - பசந்திடுமெய்யுங்குளிர்ந்தேனே, வையகமுய்ய ப்பதஞ்சலிபோற்றிட வாழுங்கனகசபைநடராஜன் (தெருவில்)

பதம்-இ-ம்-குறிஞ்சி-ஆதிதாளம்,

பல்லவி

கனவுகண்டெழுந்திருந்தேனே-மானே - தில்லை

அநுபல்லவி.

அனவரதநடராஜர்க் கன்புசெய்யநானே (கனவு)

சரணங்கள்.

௧. தெருவினிற் பவனிவந்திடவும்கண்டு தெரிசித்தளவிலென்றன் சீவன்வாதைப்படவும், ஒருகிளியைத்தூதுபோக விடவுமாசை யுள்ளத்திலடங்காமலோடிப்போய்த்தொடவும் (கனவு)

௨, கண்டவுடனவாமிதில்விழவும் வாசங் - கமழ்கொன்றை மாலைத னிற்காதலுற்றழவும - பு[illegible]ரீகபா கர்த்தைத்தொழவும்கொங்கை பூரிக்கவுடைதாழப்புரத்தாரிகழவுங் (கனவு)

௩. அங்கசன்சமர் செய்ததறவுமெத்த வாராப்பேராசை யென்னே ரமுந்துறவுஞ், செங்கமலவிணைமீதுரவுந் திருத்தில்லைத்தாண்ட வரைச்சேர்ந்தின்பம்பெறவுங் (கனவுகண்) (௰௬)

பதம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சொல்லவாராய்-சேதி-சொல்லவாராய்

அநுபல்லவி

சொல்லவாராயசேதி சுந்தரமாமின்னே
தில்லைநடராஜவிரன்னைச் சேர்ந்தமரமையல் (சொல்ல)

சரணங்கள்-

௧. அடுத்தடுத்தேவந்தே யந்தரங்கம்பாராட்டி
தடுக்காகமோடிசெய்தாற் சொல்வதேதுமானே (சொல்)

உ. ஆசையாகினுமென்ன வதுர்ஷ்டமுன்னிலேவேணும்
பேசவுமறியாத பெண்பேதையானடி (சொல்)

௩. இருவருமொருமித் திருந்தசுகங்களெல்லாம்
ஒருவரறிவாரோ வூரில்லுமலாகுதே(சொல்)

௪. சம்புசிவகாமி பங்கர்சந்திரசேகரர்
செம்பொன்னம்பலவாணர் சேர்ந்தணைந்தமையல் (சொல்) மிள

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாதிம்.

பல்லவி.

மையல்மிகவுமிஞ்சுதே சுவாமிநீரிப்போ
மருவாதிருந்தாலென்செய்வேன்

அநுபல்லவி.

வையகம்புகழ் தில்லைவனநாதரேயென்சாமி - மருமலர்மெத்தைமீதிலி
ருவருமாயிருந்து - சருவிச்சுருள்கொடுத்து மருவிமுத்தமுத்தாட (

சரணங்கள்.

க. வரிக்குயிலேழிசைகூவத் தென்றலுந்தாவ மன்மதன்மலர்க்க
ணைதூவ, உருக்குமதிதனிலே யுலைவாய்மெழுகதுபோல் உரு
குதென்றனுளம் பரவசமாயுடலம் - வருகுதுகாம வெள்ளம்
பெருகுது வரவர (மையல்)

உ. களபகஸ்தூரிகள்பூசத் தேவரீருடன் கலந்திங்கிதமொழிகள்பே
ச, அளகமலர்கள் வீசவணைதனிலேயிருந்த அந்தரங்கமாகியெ
ந்தனுளமறிந்து - சிந்தைமகிழ்ந்துநீ ரிந்தநாளிற்சேர (மையல்)

௩. தில்லைமூதூரில்வாசரே மூவாயிரவர்தினந் தினந்தொழுமீசரே,
வல்லிசிவகாமி மகிழுஞ்சபேசரே மாதவர்பணியும் பொற்பாத
ரே- தமிழ்க்கொருநீதரேயென்பிராணநாதரே வர வர (மையல்)

பதம் - இ-ம்-எதுகுலகாம்போதி அடதாளம்.

பல்லவி.

மனதினிற்றயவாளுற் றினந்தினமிப்படி வருமோவராதே

அநுபல்லவி.

தனதுக்குறைவுண்டோ வென்கிறீர் தேவர்சித்த
மெனதுபாக்கியந்தில்லைக்கனகசபேசரே (மனதினிற்)

சரணங்கள்.

௧. உருமத்துக்கமலப்போற்றிரு முசம்புலர்வானே னொருமனதா
யிருந்தால்பெருமூச்சு வருவானேன், அருமந்தமனது நான் தெ
ருவெங்குமுலவுதே பெருமைக்குத்தழுவு வதுரிமையோசாமி()

௨. எவர்மோகந்தனில் வீழ்ந்தெவாமயமானாலுங் கவரியின் காற்
றைப்போற்றுவள் வேண்டாமோ, அவரவரிச்சைவைத்தா நல்
ரசருசிபோல நவபலங்காணுமன்றோ சிவகாமிபிராணேசரே()

௩. தயவானாலடிக்கடி சுயமாவரவேணும் பிரியவார்த்தைபேசினாற்
செயலாவதேது, அயலாகவென்னைத்தள்ள நியாயமோதேவர்க்
கு மயலார்க்குஞ்சரியே நன்னயசபைவாணா (மனதினி) (௰௯)

பதம்-இ ம்-நீலாம்புரி ஆதிதாளம்,

பல்லவி,

நினைத்துக்கொண்டால் சகிக்கப்போமோ தனக்குத்தானே
நிகராகியசாமி செய்வித்தையை

அநுபல்லவி,

அனைத்துலகுந்துதிக்கு மம்பலவாணரென்ற
னந்தரங்கமறிந்தே தந்தவின்பசுகத்தை (நினைத்து)

சரணங்கள்,

௧. வெடித்தமல்லிகைமுல்லை முடித்தேன்குழலைசீவி
மடுத்தசுருள்தந்திகழ் கடித்தசம்பிரமலீலை (நினைத்)
௨. மூலையைநெருடிநெஞ்சை உலைமெழுகாயுருகிக்
கலைநெகிழ்த்தியமிர்த நிலைசோதித்தவிதத்தை(நினைத்)
௩. முத்துஸ்தனத்தின்மேற் கையைவைத்துநகம்பதித்துச்
சித்திரமஞ்சத்திருத்தி முத்துமுத்தாடினதை (நினைத்)
௪. நாதரூபமொன்றில்லாச் சோமசேகரர்சிவ
காமசுந்தரிமகி ழீசரின்பம் (நினைத்) [௨௰]

பதம்-இ ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்.

பல்லவி,

பிரிந்தாலுமறக்கிறதில்லை பெண்ணே-நடனம்

அநுபல்லவி.

புரிந்தாரம்பலவாணர் பூவணையின். கண்ணே (பிரிந்தாலு)

சரணங்கள்.

க, சந்தனகஸ்தூரிவகைபூசி - மெத்த சரசவிங்கிதலீலைச் சுரதமொழிபேசி, சந்த தமணைந்தால் வெகுவாசி யிரவிற்-றனித்திருக்கு மபெண்ஜென்மந்தானென்னசிசி (பிரிந்தாலு)

உ, ஸ்தனத்தின்மீதிலழுந்தவைத்து நகத்தைக்கொஞ்சி - முகத்தின் முகமவைத்துக் குறிபடுத்திய, சுதரத்தைதலைநெகிழ்த்தி யுறவாடும் விதத்தைநாளும் - கல்வியநுராக மனுபவித்திருந்த சுகத்தைப் (பிரிந்தாலு)

ங, தென்கைலைபம பதியின்வாசர் - நாளும் - சிவகாமவல்லியுடன்பிரியாதநேசர் - என்கவலைதீர்க்குஞ்சருவேசர் - எங்குமிணையொருவரில்லாதஈசா நடராஜர் (பிரிந்தாலு) (உக)

பதம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி,

எத்தனைத்தவஞ்செய்தாரோ-மானே-தில்லை
ஈசநேனப்புணரத்தானே

அநுபல்லவி.

கர்த்தரெனத்தெரியப் பொன்னம்பலத்திலாடுங்
காரணபூரண வாரணமானவர் (எத்தனை)

சரணங்கள்,

க, கொக்கிறகைச்சூடுவாருக்கிப்போது கொழுந்தும்வேரு முண்டாச்சே, மேலும் - அக்கரவம்பூண்டமார்பர்தமக்கு ரத்நஹாரமுமுண்டாச்சே, அந்தத் - தக்கனென்னும்மா மன்றலைதயரிந்தார்க்குத் தாக்ஷண்ணிய முண்டாச்சே, சற்றும் - வெட்கமில்லா நிருவாணிக்குப் பட்டாடை மெத்தவு முண்டாச்சே-யென்னம்மா (எத்தனை)

உ. ஒருத்தருமில்லாதபரதேசிக்கிப்போதுலகெல்லாமுறவாச்சே, பெரு - முருத்திராக்ஷவடஞ் சூடுஞ்சடைக்கிப்போதுயர் பொன்றுராவாச்சே, கையில் - தரித்தமான்கூச்சலைக் கேட்டவருக்கிப்போது சங்கீதமுண்டாச்சே, புரம்- சிரித்தெரித்தவருக்குச் ஜெகரக்ஷகரெனுந்திருநாமமுண்டாச்சே-யென்னம்மா (எத்)

ங. யானைத்தோலும்புலித்தோலு மூடுத்தார்க்கு ஆடைத்திரளாச்சே, உயர் - வானத்தினம்புலி சூடினோர்க்கிப்போது மணிமுடியுண்டாச்சே, மது - பானத்தைமுன்னாள் சுமந்தார்க்கும்

சைவப் பழமெனப்பேராச்சே பெண்கள்-மானத்தைப்போ
க்கினர்க் காசாசெனனுமொரு மாபட்டமு முண்டாச்சே-
யென்னம்மா (எத்)

ச. மாட்டிலேறித்திரிவாருக்கு வேண்டியவாகனமுண்டாச்சே, த
லை-ஒட்டிலிரந்தேகுடிப்பாருக்கிப்போ துயர்பாத்திரமாச்சே,
ஒரு-வீட்டிற்குடியிருந்தேயறியாருக்கு விண்தோய்மதிலாச்சே
சுடு-காட்டிலாடுவார்க்குத் தில்லையென்றேயொரு காணியுமு
ண்டாச்சே-யென்னம்மா (எத்தனை) (உஉ)

பதம்-இ-ம்-யமுனகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தெண்டனிட்டே னென்றுசொல்வீர்-நடேசர்க்குநான்
தெண்டனிட்டே னென்றுசொல்வீர்

அநுபல்லவி.

அண்டமெல்லாம்பரவுந் தொண்டல்கால்கள்கும்பிட்டே
னண்டவரெனுநதில்லைத் தாண்டவராயர்முன்போய்(தெண்)

சரணங்கள்.

க. பொருந்துங்காதல்கொண்டு பொன்னிதழ்த்தேனுண்டு
இருந்தோஞ்சொல்லவோவிண்டு ஏகாந்தந்தனிற்கண்டு (தெ)

உ. கண்டால்வருமப்பேச்சு கன்னிவயதிலேச்சு
பண்டுசொன்னதும்போச்[illegible] பார்வையவண்மேலாச்சு (தெ)

ந. மன்னுர்நாணம்போக்கி மனதைத்தாணமலர்க்காக்கிச்
சென்னிமேற்கரந்தூக்கித் தில்லைப்பதியைநோக்கித்(தெ) (உந)

பதம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

மனதறியாமல்மைபல்கொண்டேன்-கொண்ட
மையலுக்கென்னபலன் கண்டேன்

அநுபல்லவி.

தினமும்கிருபைபுரியும் நேசர்-தில்லைச்
சிவகாமிமகிழ்ந்திடும் திருநடராஜர்(மனதறி)

சரணங்கள்.

க. மனதில்தாய்க்குவெறுப்பாச்சே -யினி- வரவரநிஷ்டூரப்பேச்
சே-நினைத்துக்கொண்டாற் பெரும்மூச்சே - பருவ - நேரிழையா
ர்க்கிதெல்லாமேச்சே (மனதறி)

ந. மதிகாய்வதென்னகொடுமையோ -மாரன்- மலர்க்கணையெய்ய
நாறுகையோ, சதிக்குயில்கூவது -பொய்யோ- நிமிஷந்தானூறு
யுகமாகுதையோ (மனதறி)

ச. துதிசெய்து சொன்ன தொருகோடி - செய்த - சுகலீலைதன்னை மிகநாடி. அதிவிதமாகக் கவிபாடி-தில்லையம்பலவாணனைநான் கூடி. (மனதறி) [உச]

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை-துருவதாளம்.

பல்லவி.

மனமுருகுதுவிழிபுனல்பூணுது மையல்பெருகுது மதியனல் மூளுது, வருமுருவிலிசர மென்னைதீண்டுது வகையென்ன செய்வேன்

அநுபல்லவி.

அனவரதமுமதிவிதத்தாண்டவ மரவும்புலி முனிதெரிசித்திடும் ஹரஹரசிவசிவ வென்னை யாண்டருளம்பலவாணு(மனமுரு)

சரணங்கள்.

க. தலமீதொருகாயேன்தந்தை தமரேன்மைந்தார்தாமேன்-மலரேன் சந்தனமேன்புநுகேன் மையல்சாஸ்வதமே, கலைசோருது வளைசோருது - நல்ல - கைசோருது - மெய்சோருது -கஸ்தனம் சோருது - பணிசோருது - நெறிமுடிசோருதையோ, இலையோ கிருபைகீவந்தென்னையணையிலையோ இனிநிரந்தரமந்திரமிலையோ-இனியுயிர்விடுவேன் பழியெய்துவதினியே (மன)

உ. விரகாக்கினிமேனியிலெழுகுது வேண்டாம்-வேழமுண்டகனி போல், ஒருராத்திரி[illegible]போய் விழியுறக்கேனுறங்கேன் அருளாற்றினம் பணிவதுமுனையே - அருளாற்றெழுதிடுவதுமுனையே - அறிவேனறிவேன் கருணைகரதென்புலியூர்ச்சிவகாம சவுந்தரிபாகாவுன்கருணைகடாக்ஷமே புரிகுவாய்கனகசபேசா ()

ங. தவசம்பவி தகுணகுணந்தகு தகுதிந்திமிதிமியெனநின்றொரு சவகம்பெறத் திருநடனம்புரி தருசங்கரனே, நவசந்திரநுதல் வேல்விழிதரு-நவசிந்தையிலுருகி யிதம்பெற, நவபஞ்சணையதனின்மகிழ்ந்தெனை-நண்பிலணைந்தாள் சிவசங்கரதிரிசூலாதர-திரியம்பக திரிலோகநாயகா திரிபுண்டரஹர மகாதேவ தேவராயமூர்த்தி (மனமு) [உரு]

முத்துத்தாண்டவர்-சபாநாதர்பேரில் பாடிய

பதம் முற்றிற்று.

---

முதல்புத்தகப்பதிப்புப்பதம்-உரு-ம், முற்றியது— மற்றகீர்த்தனங்களையும் பதங்களையும் இரண்டாவதும்- மூன்றாவது-புத்தகங்களென - ஏற்படுத்தி அவற்றுள் ஈ-ஈ-ஆகப்பிரித்துப்பதிப்பிக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

# சபாநாதர் பேரில்

## தில்லைவிடங்கன்

# மாரிமுத்தாப்பிள்ளை பாடியகீர்த்தனம்.

(*)

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரமே-அல்லாமல்-வேறில்லைச்சுதந்தரமே

அநுபல்லவி.

சொல்லுக்கெளிதுநெஞ்சே சொல்லுவாய்சிவகாம
வல்லிக்கன்புளசபை வாணன்வீற்றிருக்குந் (தில்லைச்)

சரணங்கள்.

க. தோற்றும்மலவேளைக் காற்றிவிடபஞ்சாகத் தூற்றியொழி
த்துக்குளா யாற்றிமயக்கந்திரத் தேற்றியணியுந்திரு நீற்றினை
யிருவினை மாற்றிப்பரகதி[illegible] லேற்றிவைப்பதற்கு (தில்லைச்)

உ. தத்துவநிலைதெரிந்தொத்தமனதோடிரு கைத்தலமெதிரே குவி
த்தேமுடிமீதில் - வைத்தபிறகுபய பத்தியுடனே தெரிசித்த
பொழுதிலுயர் முத்திதந்தாளத் (தில்லைச்)

ந. காசினிதனிற்கயிலாசரென்றொருநட ராஜரிருந்து பாவநாசஞ்
செய்வதிதுவே - வாசஞ்செய்வோருக்கு மோசம்வராது கிலே
சம்வராதெம பாசம்வராது (தில்லைச்) [க]

கீர்த்தனம்-இ-ம்-சவுராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசித்தபேரைப் பரிசுத்தராகச்சிதம்பரமன்றியுண்டோ

அநுபல்லவி.

விரிவுற்றபூலோக கயிலையென்றுளவொரு - மிக்குநடந்தெதிர்
கொண்டு, மேரு - வொத்தவிரண்டோடிரண்டு- கோபுரத்தைக்க
ண்ணாரவேகண்டு. (தெரிசித்த)

சரணங்கள்.

க. மேலைத்திசைக்கோபு ரத்தினிற்கற்பக வேழமுகன்றனைவாழ்த்
தி, நல்ல - நீலத்திருமயி லேறுங்குமரன்முன் நின்றுதொழுதடி
போற்றி, அநு-கூலச்சிவகங்கை மூழ்கியந்நீரையுட கொண்டு

மனக்குறையாற்றி, இந்த-ஞாலத்தையீன்ற சிவகாமசுந்தரி பா
லுற்றிருவினைமாற்றி,வெகு - சீலத்துடன்மலர்சாத்தி அர்த்தசா
மத்திலேதொழுதேத்தி. (தெரி)

௨- நம்பித்திருமூலஸ்தானத்திலேதுதி நாத்தழும்பேறப்பயின்று,
உமை அம்பிகைத்தாளைப் பணிந்துமலாதிம்யா டைந்துபுலர்தி
யைவென்று, நித- மும்பர்வணங்கும்பே ரம்பலத்தானைக்கண்
டுணமையாய்ச்சேவித்தகன்று கள்ள-வெம்பிறவிப்பிணிவே
ரைப்பொடிசெய்யுஞ் செம்பொற்சபைநாடிச்சென்று, கொடி
க்-கம்பத்தருகினில்நின்றுகையால் கும்பிட்டரகராவென்று ()

௩. ஞானசபைதன்னைச் சேவித்தங்குள்ள ரகசியவுண்மையாநா
டி, யொளி-யானத்தையற்புத ஞானக்கண்ணுலறிந்த தானந்த
வாரியலாடித், தவ-மோனத்துடனங்கிருந்து செபங்கண்முழு
துஞ்செபித்தன்புநீடி, நாளும்-வானத்தவர்க்குங் கிடையாதமு
க்தி நிதானத்திற்சேவடிதேடி, மெய்த்-தியானத்திலதுபாடி ய
க்கியானத்தைவேரறச்சாடித். (தெரி) [௨]

கீர்த்தனம் இ-ம்-பூரிகல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

தெய்வீகஸ்தலமிந்தத்தில்லை-இந்த வைபோகமெங்கெங்குமில்லை

அநுபல்லவி.

துய்யவேதனுமாலுந்தேடிபேகாணுச் செய்யதாமரைத்தளாலடியே
நின்ற, வையனிருந்துவாசஞ்செய்யுந் தென்கயிலாசமாமேயிணைசொ
லலப்போமோவொருவராலே. (தெய்வீக)

சரணங்கள்.

௧. மதிலாயெழுந்துபஞ்சாக்ஷரமே சுற்றி-வளைந்திருப்பதுஞ்சித
ம்பரமே, போலாஞ்-சதுர்வேதநாலுங்கோபுரமே யாகிச் சமை
ந்துநிற்பதுகிலவரமே, யிது - வகனெலத்தலத்தையும் வெல்லு
மே யுலகம்பதினாலுமிதைத்தானே சொல்லுமே - யார்க்குங், க
திதருதவிததாலேபதியொன்றை யிதைப்போல - காணேனு
ண்டென்றுவீணேசொல்லக்கூடுமோ (தெய்)

௨. மூர்த்தியுந்தீர்த்தமுந்தலமுமமூன்று முக்கியமுமொருமித்த ந
லமுங்-கண்ணுற்பார்த்தவர்க் குண்டோசஞ்சலமும் நினைவின்
படியேவந்தெய்துஞ்சகலமும் வேத சாஸ்திரமுமிதைத்தா
னே யோதுமேநிமிஷந்தோத்திரமாயுரைத்தாலும் போதுமே,
யிதிலோர் மாத்திரையாம்போது வீற்றிருந்தாற்றீது வருமோ
பிறவியைத் தருமோசற்றுந்தராது. (தெய)

௩. எப்போதும் நலந்தருவதுவே - யிதுவெல்லாச்சமயத்துக்கும் பொதுவே - யிதற் - கொப்பான நலமினியிதுவே விராட்புள்ள க்கமலத்தானமிதுவே வச்சிரக் கொப்பாருங் குழைச்சியோர் பாகனார்காலந் தபபாதவராயபிஷேகனார் தமக் கொப்பாந்தல ந்தமதுமெய்ப்பானதலமிதுவுண்மை யிதிலுள்ளவண்மை யின் னமனந்தம் (தெய்) [௩]

கீர்த்தனம்-இ-ம். தேவகாந்தாரி ஆதிதாளம்.

பல்லவி.

எந்தத்தலத்தையுமிந்தத்தலத்துக்கிணை சொல்லக்கூடாதேஐயா ள்

அநுபல்லவி.

சொந்தத்தலஞ் சிதம்பரமென்று மனதினிற்சிந்தித்து கருமலைபோலே எமிர்வந்திட்டமுயலகன்மேலே ஆனந்தக்கூத்தாடினத் ஈலே (எந்)

சரணங்கள்.

௧. ஆதியில் வெண்குட்டந்தீர்ந்து கவுடதேசத்தரசன் பொன்னி றமானன்தேகம்சேச். சாதியின்மூவர் புலைத்தன்மை போய்க் கதிசார்ந்தாரது வேதெய்வீகம்ஒரு, வேதியன்வாயிலோர் சேர் ப்பிட்டுக்கூடபோய் வீட்டிற்புகுந்ததுகாகம் பின்னுந் தீதறுவத் தாலெப்போதுந்தரிசனம் செ[illegible]புலிபாகம, முன்னம் பெய்தது பொன்மழைமேகம் இந்தவைபோகமினமனேகம்

௨. கழுகுபுசிக்கத்தவறியிறந்தகயலு மடைந்ததுகதியே, நீரில் முழு கியெழும்பவிளமையைத்தந்து முதுமையைத்தீர்ந்ததிப்பதியே கூவி, யழுதபுலிக்குட்டி முண்டிளப்பாற யருகில்வந்ததுபயே- ததியே, கொலை பழிசெய்யும பார்ப்பானொருவனுக்கு முத்தி பாலித்ததையன்சந்நிதியே அதனுலித்தையேதினந்துதியே செ ய்து மேலிட்டுச்சொல்லும்சுருதியே (எந்த)

௩. எங்கெங்குந்தானீயைப் பூலோககயிலாச னென்றுரைப்பாரொ ருபேரும், இதில் அலங்கமிறந்துதிரும்பிப்பிறப்பாரோ வாடிய தாளைக்கண்டோரும, மலர்ப் பங்கயன்மால்முதலோர் வந்தரு ச்சனை பண்ணுகிறுரதைப்பாரும். ஒளி பொங்குந்தொளாயிர த் தொண்ணூற்றென்பதுபங்குக் கலையிதிலாருந், தல மெங் கெங்குமோர்கலைசாரு - மதுவுமிங் கர்த்தசாமத்திற்சேரும். (எந்)

கீர்த்தனம்- இ-ம், பியாகடை ஆதிதாளம்.

பல்லவி.

என்னாளும்வாசமாய்சிதம்பரஸ்தலத்திலேஇருக்கத்தவஞ்செய்தே.

அநுபல்லவி.

பன்னகப்புலிகாகம் பார் பான்புலையன்முதற்
பத்திசெய்தேயிதின்முத்திபெற்றிடலாலே (எங்நாளும்)

சரணங்கள்.

௧. முந்திபன்னையுதரந்தனிலேகரு விருந்துதிநவயிறுநொந்து பசியொடு பிறந்துதிமிசை தவிந்துதளர்நடை நடந்து பருவமாகி, இந்தமனை மனைவிமைந்தர்நிதிபலவு மெந்தனுடைமையிது சொந்தமெனவேசொல்லிச் சிந்தைதனின்மத மிகுந்துபலபல கந்தைகளைசெய்துதிருந்ததல்லாமல் (எங்)

௨. வட்டஸ்தனத்திற்றெங்கவிட்டபணிபழகும் ஒட்டிவச்சிரமிழைத்தசுட்டியழகும்நுதற் பொட்டழகுமிடையிற் பட்டழகு முடையகட்டழகிபர்வலையிற், கிட்டிபறிவழிந்து மட்டியெனவே தொடர்ந் - தெட்டினின்மொய்த்தசிறு சிட்டெனவேயவர்கள் தொட்டு மயக்கிலகப்பட்டுமிகவு மதி கெட்டுமெலிந் தலைந்திட் டதல்லாமல் (எங்நாளும்)

௩. தேசமதற்குளொரு காசுகொடுக்கப் பிரையர்சமனத்தர்தமைப் போஜனைனத்துதிசெய், தாசுமுதற்கவிகள் பேசியலுத்துமனங் கூசுவதேயல்லாம வீசனதிகப்பிரகாசனணிசருமத் தூசனுமைமகிழ்வல்லாசனை...வர்கள், நேசனிலகுகயிலாசன்கனகசபை வாசன்புலிசைநடராஜனைச்சேவித்து (எங்) [௫]

கீர்த்தநம்-இ-ம.மத்தியமாவதி ஏகதாளம்,

பல்லவி.

பலமந்திரத்திற்கும் பலமந்திரம்பொன்னம்
பலமென்னும் மந்திரமே.

அநுபல்லவி.

புலவர்க்கும்முநிவர்க்கும் பலவர்க்குஞ்தியானிக்கப்
பொதுவாயிருக்குமந்திர மதுவேசுருக்கமந்திரம் [பல]

சரணங்கள்.

௧. ஜெனனமரணவாதை நீக்கியமந்திரஞ்சேரு மும்மலமாயைபோக்கியமந்திரம், மனதிருமெய்ஞ்ஞான முண்டாக்கிய மந்திரம் மந்திரத்திற்கெல்லாஞ்சிலாக்கியமந்திரம் [பல]

௨. முதுமைபோயிளமை கொடுத்திட்டமந்திரம் மூன்றுபுலையர் நீசம்விடுத்திட்டமந்திரம், கதியிலோரகண்காக மடுத்திட்டமந்திரம் காட்டுப்புலியைப்பாம்பைதடுத்திட்டமந்திரம் [பல]

ரு. அதுவேயெவர்க்குங் காயசித்திக்குமந்திரம் அதுவேவினைவின் படிசித்திக்குமந்திரம் அதுவேயழிவிலாத முத்திக்குமந்திரம் அதுவேசிந்தித்தசெஞ்சிற்றித்திக்குமந்திரம் (பல) (சு)

கீர்த்தநம் - இ-ம். மோகனம் சாப்புதாளம்.

பல்லவி.

பரந்தனைப்படைந்திட வேணுமென்றுசிதம்
பரந்தனையடையுங்கள் மாந்தர்களே

அநுபல்லவி.

வரந்தனை தருமிந்தத் தலந்தனிமேலயிருந்த
மாந்தரெல்லாருந்தவ வேந்தரே [பரந்தனை]

சரணங்கள்

க. காட்டிலிருக்கின்றபுலியும் பாம்பும்பெற்ற காட்சியுங்கேட்டிருப்பீர்களே, வீட்டிலிருக்கின்றநாகமுமுயர்ந்தமேல் வீட்டினிற் சென்றதுங்கேட்டிருப்பீர்களே [பரந்தனை]

உ. சாதியிலீன முள்ளபுலையர்மூவரிதிற் றனித்தனியேபுனிதராகினர், வேதியரிலதிகபாவி பொருவரிதில்மேவிப்பரகதியிலேகினர்

ரு. வெள்ளியினலெங்க ளையனிருக்கச்செய்த வீட்டைவடகயிலையென்பாரே - தெள்ளியசெம் பொனினாற் செய்தவீடித்தைத்தென்கயிலாசமென்பாரே [பரந்தனை] [எ]

கீர்த்தநம்-இ-ம்-ஆரபி ஆதிதாளம்.

பல்லவி.

ஒருக்கால் சிவசிதம்பரமென்று நீசொன்னு லிருக்காதுழ்வினையே.

அநுபல்லவி.

கருக்காறருக்கிதுதெரியும் பொதுவிலொரு
காலைத்தூக்கிநின்ற சோலத்தைமனதில்வைத் [தொரு]

சரணங்கள்.

க. சூழ்வலியுடையபஞ் சாக்கினியிடைநின்று சொரூபங்கரிவானேன், மனே - வாழ்வைவெறுத்துக்கனிகாயுஞ்சருகுந்தின்று மாதவம்புரிவானேன், பல - வேள்விகள்செய்தந்தவோ மகுண்டத்தினெய்யை வீணிலேசொரிவானேன், காதுங் - கேள்விசில்லாத முழுமோங்களாய்த்தலையிற் கிளைத்திட்டசடைதனை வளைத்திட்டுத்திரிவானேன் (ஒருக்)

உ. வேதமந்திரஞ்சொல்லிவாயிரத் தெண்டன்புவிமீதினில்விழுவானேன், இரு - பாதமுஞ்சிவந்திடத்தலங்கடோறுந்திரிந்து பல தெய்வந்தொழுவானேன், கொல்லன் - ஊதுந்துருத்திபோலே

வாயுவைக்கும்பித்துடல் போகத்திலெழுவானேன், ஐந்து-பூத ங்களுங்கலங்கவங்கப்பிரசுஷண மாய்ப்புரண்டுபுரண்டுமெதிமரு ண்டெழுந்தழுவானேன். (ஒருக்)

ரு. உருக்கிபுடலைமெத்த வருத்தியுறககத்தையு மூனையுந்துறப்பானேன், சிலை-யனைக்கில்லா நிருவாணியாகிலோச்வாழ்க்கை யனைத்தையும்மறப்பானேன், வரு - கரைக்குந்திரைக்குங்கற்பமருந்திச்சித்தர்களாகிநாடெங்கும்பறப்பானேன், சபைத் - திரைக்குள்ளேமறைவாசியிருக்கும் ரகசியத்தின் திறந்தெரியாமல்வீணே யிறந்தின்னம்பிறப்பானேன். (ஒருக்)

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவசிதம்பரமென்று நினைப்பாயே உனக்
கபசெயம்வாராதென்று மனப்பேயே

அநுபல்லவி.

கவசமுமுனக்கிதென்றறிவாயே நல்ல கனகசபையில்புலி
பனகமுனிவர்கள்தொழ வனவரதநடனந்தனையரனுடு (சிவ)

சரணங்கள்.

க. கன்மவினைபோய்களையாறலாமே பொல்லா மன்மதவாதைதீர்ந்துதேறலாமே, சென்ம சாகரக்கரையேறலாமே யெழுந்து சென்றபோதிலுஞ் சும்மாயிருந்தபோதிலும்மொன்றைத் தின்றபோதிலும்படிக்கின்றபோதிலுநீ (சிவசித)

உ, மனிசருறவைமெய்யென்றிருக்காதே கதிர்முன் பனியானவாழ்வைச்செல்வஞ்செருக்காலே தனிவேதமந்திர மிதைச்சுருக்காதே பசிகந்தவேளையுமிடர்வந்தவேளையும் மனம்நொந்தவேளையும் பின்னெந்தவேளையுநீ (சிவசித)

ங. ஒருமந்திரத்தையும் நீசெபிக்காதே யிந்ததிருமந்திரமன்றியொன்றும்பலிக்காதே, கருமந்தப்பிதஞ்செய்து தவிக்காதே தில்லைக் காட்டினிலையன்செய்த வாட்டினிலுறுதியை நாட்டிடுமொன்றிலுமாட்டினில்லாதே (சிவசிதம்) (சு)

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமுமொருஸ்தலமிருக்குமென்றெருக்காலே
ஏனமலைக்கிறாய் மனதே

அநுபல்லவி.

சொன்னசொன்னஸ்தலங்க ளெங்குமோடிக்களைத்துச்
சோதித்தறிந்தாலிந்த ஆதிசிதம்பரம்போல் (இன்ன)

(க) சருக்கரையுந்தேன்பாகுஞ் சரியாய்நிறம்பெற்றாலுஞ் சருக்கரைருசிமாவிலிருப்பதுபிரயாசம், முருக்கஞ்செம்பரத்தையும் நிறமென்றாலு மந்த முருக்கினிலுண்டோவாசம்

தரிக்கும்வச்சிரக்கல்லுந் தறிப்புமொத்திருந்தாலும் தறிப்பைத் தள்ளிவச்சிரந் தனைத்தரிப்பதுல்லாசம், உரைக்கும் ஸ்தல மனந்தந் தரைக்குளிருந்திட்டாலும் உம்பர்வந்துதொழும் பொன்னம்பல மேவுவிலாசம் (இன்)

(உ) உப்புங்கர்ப்பூரமு மொன்றைப்போ லிருந்தாலு மூரெங்கும் பெரியதாய்க் கர்ப்பூரந்தனைச்சொல்லாரோ, இப்புவியிலெவர்க்கும் யோக்கியந்தருங்காவிரிக்கேற்பது சணணுரோ

ஒப்பரிதாய்விளங்குந் தெய்வீககங்கைபாற்றுக் குவமைபெடுத்துரைப்பதுவர்க்கழியாற்றுநீரோ, அப்படிபோலனேகம் ஸ்தலமிருந்தாலு மந்தவல்லவல்வினைதொலைக்குந்தில்லைப்பதிக்குநேரோ (இன்)

(ங) விண்ணுலகத்திலு மீனினமெல்லாங்கூடி வெண்மை நிறமாமொரு தண்மதிமுன்னில்லாது, தண்ணுலவிபவல்லி திரளாய்ப் பூர்த்தாலுமெரு தாமரைக்கொவ்வாது

மண்ணுலகத்திலுள்ள தருக்களனைத்துங்கூடி மருவுலவுங் கற்பகத்தருவுக்கிணைவராது, புண்ணியஸ்தலங்கள் பலவிருந்து நடேசன் வாழும்புண்டரீகபுரம்போற் கண்டுசொல்லவேறேது (இன்) (ம)

கீர்த்தனம், இராகம் எதுகுலகாம்போதி ஆதி தாளம்.

பல்லவி.

காலைதூக்கிநின்றாடுந்தெய்வமே என்னைக்
கைதூக்கியாள் தெய்வமே

அநுபல்லவி

வேலைத்தூக்கும்பிள்ளை தனைப்பெற்றதெய்வமே
மின்னும்புகழ்சேர்தில்லைப் பொன்னம்பலத்திலொரு (காலை)

சரணங்கள்.

க. செங்கையில்மான் தூக்கிச் சிவந்தமழுவுந்தூக்கி அங்கத்திலொருபெண்ணையவளுமினந்தூக்கி, கங்கை யைத்திங்களைக்கதித்தசடையிற்றூக்கி இங்குமங்குமாய்த்தேடி யிருவர்கண்டறியாத (காலை)

உ. நந்திமத்தளந்தூக்க நாரதர்யாழ்தூக்கத் தொந்தமென்றயன்றாளஞ் சுதியொடுதூக்க, சிந்தைமகிழ்ந்துவானோர் சென்னிமேற் கரந்தூக்க முந்தும்வலியுடைய முயலகனைத்தூக்க (காலை)

௩. கும்பமண்டத்தைதூக்கக் கொடுங்கை கும்பத்தைத் தூக்கப் பைம்பொற்சுவர் கொடுங்கைப்பாரத்தைத்தூக்க, எம்பிபாரத்தை விராட்டிதயதாமரை தூக்கச் செம்பொனம்பலத்திலே தெற்கு முகமாயொரு (காலே) (௰க)

கீர்த்தனம்-இ-ம். புன்னுகவராளி. ஏகதாளம்.

பல்லவி.

உன்முகம்பார்த்தபயமென்று லென்முகம்பார்த்தருளாமற்
றென்முகமாயிருப்பதென்ன வைம்முகத்தையாவே

அநுபல்லவி.

மின்முகம்பார்த்தாடுந்தில்லை மேவும்நடேசரேயருக்கன்
தன்முகம்பார்த்திடவிரும்பும் தாமரைபோல்நான்விரும்பி (உன்)

சரணங்கள்.

க. யார்க்கோவந்தவிருந்தெனவே யறியாதுபோலிருந்தால், பார்க்கிறவர்யாரினி யென்பரிதாபமுழுதநீ, தீர்க்கிறதெய்வ மறுதெய்வமுனையன்றியுண்டோ, நீர்க்குமிழியாக்கைதனை நீக்குமுன்வந்தாட்கொள்ளவையென் (உன்)

உ. தூக்கியதாளிணைமுடிமேற், சுமக்கு முயலகன்போலப், பாக்கியஞ் செய்யாதகொம்பாதகனதைலினுலே, சூக்குரல்செய்தோலமிட்டுக்கூவியுன்றன்கோயில்தனை, நோக்கிவசமாகவந்து நூறுதெண்டனிட்டெ[illegible] (உன்)

௩. காரினிற்பூங்கமுகுதொடுங் காவனந்தமேவுபுலி யூரினிற் காண்பவர்க்குமுத்திபுதவும்நடராயா பாரினிலிவ்வுருவெடுத்துன்பதமலர்க்காளாகாமனீரினிலப்புலிபோலே நிலைகலங்கித்தலைவணங்கி (உன்)

கீர்த்தனம். -இ-ம். சாவேரி. திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏதுக்குதவியிந்தகாயம் சுமந்ததினுல்வருவதேதாயம்.

அநுபல்லவி.

சீதப்பிறையணி சோதிச்சடைமுடி தேவன்புலிசைமேவம் பலவன்பொற், பாதம்பணிவிடைக் காகித்தவஞ்செய்து பவத்தையொழிக்காம லவத்திலேபிறந் (ஏது)

சரணங்கள்.

க. கருமராசன்தறிக்குங்கட்டை பிரமன்தைக்குமென்பது பீற்றச்சட்டை, கிருமிகட் கொருகன்மகுட்டை. காலன் ஒட்டும்போதினிலொடலொட்டை, வருமேயினதமெய்யென்போர்க்கும் பெரு

ம்பழிமாங்கிஷமுஞ்சியும் வழும்புங்கிறைகுழி அருமையினியிடு மதனையெழியொழி யாருங்கம்பொணுதுநீரின்மேற்குமிழி (ஏது)

௨. விஞ்சுமும்மலஞ்சேருமவீடு பலவேடரைவரிருக்குங்காடு, கஞ்சிதப்பறவைக்கோர் கூடு இதைச், சதமென்றெண்ணுவ தெல்லாங்கேடு. மஞ்சின்மேலிடு வானவல்லிணைகூறும், வாழ்வைநிலையென்றுமயக்கித்தினந்தோறுந், துஞ்சிலேம்பொறி கலங்கிமதிமாறுஞ் சுவாசமடங்கினற்றொடக்கூடாதுநாறும் (ஏது)

௩. கொடுவினை முளைக்குந்தோல் மூட்டங் கழுகுகொடும் நாய்நரிக்குழ்விருந்தூட்டந், சுடுகாட்டக்கினிககிடுசாட்ட மங்கச் சூக்ஷம் பார்த்திடில் பொம்மலாட்டம், விடுவிடுவெடுத்திடுவதனை மூன்னை வினைக்குக்குநகைபை மருந்தளிக்கவல்ல அன்னை படருமமெய்யன் பொன்னம்பலவனடி தன்னைப்பணிந்தாற் பிறவிநோய்தணிந்துபோம்பின்னை (ஏது) (யஅ)

## சிந்தாஸ் துதி.

கீர்த்தனம். -இ-ம். ஆரபி. ஆதிதாளம்.

### பல்லவி.

என்னத்துணிவாய்நான் பயப்படாமல்வந்துன்
னிணையடிபணிவேன்ஐயா.

### அநுபல்லவி.

பொன்னம்பலவாணனே முன்னமுன்றனைப்பாடும்
புலவனைநீவிழுங்கும் புதுமையைக்கேட்டிருந்தும் என்ன

### சரணங்கள்,

க. பாய்கிறமாடொன்றுவாயிலில்மேவுதே பாம்பும்புலியுமிரு பக்கமுந்தாவுதே, பேயும்பூதமும்முன்னு பின்னுமுலாவுதே பிடித்தகைமானண்டம்வெடித்திடக்கூவுதே என்

௨. கொழுந்துவிட்டோங்குமழற் பிழம்பாகு முன்னுறுப்பு கொடியதில்லைக்காடுநீகுடியிருக்கபொறுப்பு, ஒழிந்திருக்காதெப்போதுமுனதுநெஞ்சிற்கருப்பு - வுனைத்தான்பித்தனென்பதை நினைத்தாற்றோன்றும்வெறுப்பு (என்ன)

௩. ஆதியின்மாலயனுவடிமுடி தேடுவோனேயாதிபந்தமில்லாநின் றருமறைபாடுவோனே பாதிமதியைச்சடைமீதினிற் சூடுவோனே பாதத்தைதூக்கிப் பொன்னம்பலத்தினின்றுடுவோனே ()

கீர்த்தனம்-இ-ம். காம்போதி ஆதிதாளம்.

பல்லவி.

வீடும்பலமாகிநீருமந்தரமானீர் வேளைப்பொல்லாப்பாகியோ

அநுபல்லவி.

காடுங்காணியாகியோரோடுங் கையிற்கொண்டீரே
கனகசபைநாதரேபனக பூஷணனாரே (வீடும்)

சரணங்கள்

க. உளக்கனிவாய்ப்பல வுயிர்களிக்கும்படிதா - னளக்கிர மைத்துன
ன்வந்தருகினிலிருந்து - இளக்கறியாமற் செங்கெலி - ராழியாலற
த்தை யளக்குஞ்சீமாட்டி சொக்கமனைபாட்டியாயிருந்து (வீடு)

உ. ஈட்டுமடற் லக்ஷிதிக்கெல்லாந் தலைவனாகச் சூட்டுங் குபேர நீங்
காத்மேசாபூவென்றிருந்தும், பூட்டசம்வெளிபாச்சே - புலிபாம்பு
க்குள்ளோயுன்ற - ஞட்டபெல்லாமடங்கி யரையுடம்பானீரையா -

ங. வெள்ளைப்பிலுக்கக் கபாத்தால் மேல்பூச்சல்லாம் லுள்ளிலும்
புறம் பிலுமொன்றிலுமில்லையே, எள்ளிலெண் ணெய்போலெ
ங்கு மிருப்பேனென் றொருநச்சு லே - தள்ளிக்கூத்தாடினீரோ
சொர்னசபைநாதரே (வீடு) (௫௫)

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம். ௪

பல்லவி.

என்னையினம் புன்றன்பிழைப்பையா யிதை
யெண்ணிப்பார்த்தாலார்க்கும்பழிப்பையா

அநுபலலவி.

அன்னங்கண்டறியாமற் சொரூபமும்மாறினீர்
ஆட்டையெடுத்துத்துணிங் தம்பலமேறினீர் (என்)

சரணங்கள்.

க. கூடைமண்சுமந் தண்ணைப்பரிந்தீரே முனிவர் கொண்டபெண்
களைத்துகிலுரிந்தீரே, ஓடெடுத்திரந்துண்டு திரிந்தீரே பசியா-
லொருவன்பிள்ளையைக்கழுத்தறிந்தீரே, வேடனுகிவிஜயன் வில்
லாலடிபட்டீரே காடேகுடியிருப்பாய்க் கல்லாலடிபட்டீரே ()

உ. பெண்டாட்டிமூழுநீலிதானுச்சே - பெற்ற - பிள்ளைதகப்பன்சா
மியாயப்போச்சே, பண்டாமைத்துனன்தாதனெனும் பேச்சே
யாரும் - பழிப்புக்கிடமாய்ச்சாமபல் மேற்பூச்சே, அண்டர்க்கரி
ய கூத்தையாடியுமங்கிங்கே - எண்டிக்கறியமூவாயிரத்தினி
லொருபங்கே (என்ன)

ங. மலைவேடனெச்சிலைத்தின்றீரோ- குதிரை - மாராடிமழுவேந்தின்றீரோ, விலைமாதிடத்துற்றாதுசென்றீரோ - வெட்கம்விட்டுச்சபைநாதரென்றீரோ, தலையிற்கோமணந்தன்னைக்களவு செய்தெடுத்தீரோ தலையிற்பாதிசோமனைதரித்துத்தோலுடுத்தீரோ () (யசு)

கீர்த்தநம்-இ-ம்-புன்னுகவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

உம்மைப்போலாட்டையெடுத்தம்பலத்தினிற்பா
ரொருவரைக்காணேனையா

அநுபல்லவி.

செம்மைமலர்த்திருவுமுந் சிதம்பரநாதரோ
தின்னுமலொருபிள்ளை கொன்றபழிகாரரோ (உம்மைப்)

சரணங்கள்.

க. யானைத்தோல்புலித்தோ லாடையுண்டச்தாட்சி-யது - வல்லாலெலும்பைக்கோர்த்தணிந்த சுற்றச்சாட்சி - மானைக்கையிற்பிடித்த வாறேயுமக்குத்தாட்சி-மழுவெடுத்தது மெய்யாச்சோ கழுகுக்கேற்றகண்காட்சி (உம்)

உ. இடையிற்கிடந்தவாயடைபை மெள்ளத்தேடிக்-கிட்டும்போது மச்சானென்றெட்டினிருறவாடி அடவிப்புலியும்பாம்பு மறிந்தொருமித்துக்கூடி யாட்டுக்காலுக்கொட்டுப்போட்டிருக்குதேநாடி (உம்)

ங. வெற்றிவிஜயன்பன்றி விரும்பியடிபட்டீரே - வேடன்வாய்த் -தசையெச்சில் வேண்டிருசிகண்டீரே. சிற்றிடைச்சியைப்பாகஞ்சேர்த்துத்தானேகொண்டீரே - சிதம்பரேசரோயாட்டாற்றிருமேனிதுவண்டீரே (உம்) (யஎ)

கீர்த்தநம்-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வயிரமுன்றநெஞ்சிலேயிருப்ப
தென்னகாரணத்திற்கையா

அநுபல்லவி.

தன்னந்தனியனுகிப் பொன்னம்பலநேசனே
சலப்பிரளயகாலத்திற் சர்வசங்காரஞ்செய்தும் (இன்ன)

சரணங்கள்.

க. கருப்புவில்மதன்சண்டைக் கெதிர்த்தபோது-மனக்-கறுப்புத்
திரகண்ணுல் வதைத்ததுவும் நெருப்புப்போலேசீறி வந்திடுப்

கொடுங்கால-னிலத்திலலறிவிழ வுதைத்ததுவும்-மருப்புக்கரிவ யிற்றைக்கிழித்துப் போர்த்ததும் பொல்லா - மருத்துவனுருயிர் சிதைத்ததுவும், பொருப்பைப் பறித்தசைக்குமரக்கனைக்கால்க கத்தாற் பூமிதனிலழுக்கப் புதைத்ததுவும்போதாமல் (இன்ன)

உ. சேரலர்திரிபுரம்வெந்துநீறுநீறுகச் சிரித்துமனஇன்படிமுடித் ததுவும், வேருடனருக்கனபல்முறிந்து பலபலென்று-விழுந் திடக்கன்னத்திலடித்ததுவும், யாரையுஞ்செயம்பண்ணித்திக்கு விஜைபனபெற்ற-சந்தாசுரனை மடித்ததுவுங், கோரநரசிங்கத் தை வீரசிம்புள்ளாய்வந்து கொத்தியிழுத்தாரத்தங்குடித்தது வும்பற்றுமல் (இன்)

௩. தன்னைமறந்துமதமிருந்து மகஞ்செய்தக்கன் தலையையரிந்துத மூலிற்றீத்ததுவும், பின்னும்தக்கனுக்கு மருகனென்னுஞ்சந்-தி ரன்பிலனெடுங்கிடக் காலாற்றேய்த்ததுவும், அன்னர்தனைப்ப ரிவாயேறும்பிரமன்றலை-ஐயந்தி லொனறையறுத்துச்சாய்த்தது வும்,வல்லமபலவாயுள்ள பொன்னம்பலவாணனே-வலியச்ச லந்தரனை மயக்ந்துவுமல்லாமல் (இன்னம) [௰அ]

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்நேரமுமொருகாலைத்தூக்கி நொண்டிக்கொண் டிருக்கிறவன்[illegible]யுகையா

அநுபல்லவி.

தொன்றைர்போற்றுந்தொல்லை நன்றுடரோத்துந்தில்லைப் பொன்னம்பலவாணரோ யின்னந்தானுமூன்றுமல் (எந்நே)

சரணங்கள்.

க. எக்கியநொருப் விக்கத்தக்கன் வீட்டினடந்தோ-எமனைவுதைத் தபோதெதிர்சுருக்கரிகொந்தோ சிக்கெனவேபிடித்துச்சந் திரனைநிலத்திற் றேய்த்தபோதினி லுறைந்தோ, விக்கிரசாமுண் டியுடன்வாதக்காடியசைந்தோ உண்டநஞ்சுடம்பெங்கு மூரி க்கால்வழிவந்தோ, தக்கபுலிபாம்பிருவர்க்குங் கூத்தாடியாடச் சலித்துக்காலோபொற்பாதம் வலித்துத்தானோதேவரீர் (எந்)

உ. பொருட்பெண்ணிடத்திற்சநது போனத்தினற் றுவண்டோ- சொல்லா-முயலகன்மேல்வைத்த போதினில்கலிகண்டோ, அ ருச்சுனனுடன்கட்டிக்கீழ்மேலாய் விழுந்தபோ ததிர்ந்துநரம்பு புறண்டோ, சிரசிற்றண்ணீரேறித் தேகத்தில்வாதங்கொண்டோ

சேர்க்குஞ்சோழன்போலுமக் கேற்கவே மடமுண்டோ. எருதி
ன்மேலேபெண்சாதி தனையுந்தூக்கிக்கொண்டு பாய்ந் தேரு
போதிலொருகாற்று முமாமுய்ப்புரண்டோ (எங்)

ங. மலைவில்லிலடி வைத்து வளைக்க மக்களித்திட்டோவாமேனோர்வண
ங்கும்போது மகுடமுடிகள்பட்டோ நலமிருகயிலைவிட்டெழு
ந்தருளித்தில்லையினடங்க வருத்தத்தைத்தொட்டோ, கலகலெ
னும் பொற்சிலம்பழுந்திக் காலவலித்திட்டோ- சடியவரக்கன்
பத்துமுடிமேலுறுத்திநட்டோ பலபலவிதத்திலெவ்விதத்
தோவறியேன்-பொன்னம்பல விலாசரேதில்லைத்தலநடேசரோ
நீர்தான் (எங்) [ஙக]

கீர்த்தநம்-இ-ம்-தேவகாந்தாரி-சாபுதாளம்.

பல்லவி.

இதைவிடக்குறித்துகூத்தாடினலு
மூவாயிரத்திலோர்பங்குமக்கே

அநுபல்லவி.

பொதுவினிலாடினல்லிடுவரோநாகத்தைப்- பூண்டவரோதில்லைத்
தாண்டவரேயுமக்கதிகப்பங்குக் கிடங்காணேமும்மிடபங்கி லதைப்
பங்குதனையுமோர்வரைப்பெண்ணுக்களித்திரோ (இதை)

சரணங்கள்.

க. தெண்டிரைக்கங்கையைச் சிரசின்மேலேதேக்கித் - திங்களைக்க
திரைச்செந்தீயை முக்கண்ணுக்கி எண்டிசைத்தலையருந் தொ
ழுதிடமான்மழு வேந்தித் தென்றிசைநோக்கி, விண்டலத்தோ
டண்டமெங்குமோசைபோக்கி மிகவுங்குமிறுவீரவீருகாலங்கி
ண்கிணிவீக்கி-அண்டரியமுயலின் மேலொருகாற்றூக்கி-யசை
ந்தசைந்தொருகாலைஉசந்துதூக்கித்தூக்கி (இதை)

உ. படர்ந்தசடைகளிருபக்கமுந் துவண்டாடப்-பாதிப்பிறைகுலு
ங்கக்காதிற்குழையுமாட நடந்துகட்டியஞ்சொல்லி-நந்திமத்த
ளந்தட்டநாரதர்யாழ்பாட தொடர்ந்துநான்முகன்தாளந்தூக்கி
ப்பண்ணெடுபோடச் சுமக்குஞ்சேடனுமுடிதளக்கிநெளிந்
துவாட, இடந்தெரியாதெங்குமடர்ந்து பூமழைமூட-விக்கிராதி
பரும்பார்க்கவந்துகூட்டங்கூட (இதை)

ங. வெம்புலித்தோலாடைவிளங்கி யரையிற்றேண - மெலிவுயர்ந்
தொருபாமபும்புலியுமகிழ்ச்சிபூண கம்பீரமாய்வாதுக்காடுகி

ன்றயக்ர காளிமண துரா ண, புமைமல்லாரிதூந்துமியா தியாய்
வேண-பல்லிய பார்பரிக்கப் பலரும வந்தடிபேண, நம்பினவ
ரைக்காக்குஞ்செம்பொன்னம்பலவா நாதரேநீர்கொண்டகாத
லிகண்காண (இதை) (உ௰)

கீர்த்தநம்-இ ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அம்பலத்தாடிமடிப்பென்பதையும்மிடத்தி
லறிந்தேனறிந்தேன்ஐயா

அநுபல்லவி.

வம்பவிழ்கொன்றைசூடுஞ் சிதம்பரேசரேயுமது
மார்க்கத்தையெல்லாமுன்றிப் பார்க்கப்போனல்கூத்தாச்சே (அம்)

சரணங்கள்.

௧. பெண்ணுடன் பிறந்தமைத்துனனுக்கருமைப் - பிள்ளையைப்பா
ர்த்துக்கண்ணுற்சுட்டீரேபின்னுங் கண்டோரநகைப்பதற்குப்
பெண்கொடுத்தம்மானைக்கழுத்தை யறுத்தழலிலிட்டீரோ, உமக்
குண்டானகுணம்தானோ வேதமெல்லாங்கற்றோன்றன் - ஒருத
லைதனைக்கொய்[illegible]டீரோ [illegible]டைப்பண்டாரம்போல்வந்துதமு
ந்தையையறுத்துண்டபசியாளி யென்றெவரும்பழிக்கத்தலைப்
பட்டீரோ (அம்ப)

௨. பேரிட்டெதிர்க்தருகில்வந்த முப்புரத்தாரைப - புன்சிரிப்டா
லே குடிகெடுத்தீரே, வயதிரெட்டும்நிறைந்தபின் - மார்க்கண்ட
னைத்தொடர்ந்தவேமனைச் சொற்புரட்டினற்றடுத்தீரே' முநி-
வோரிட்டமுடன் சேருக தர்கண்மயக்கங்கொண் - டுடைகுலைந்
திடவேட மெடுத்தீரே, பன்றி வீரிட்டுவரும்போது கூரிட்டக
ணைகொட விஜயனுடன் வேடன் போல் வீண்சண்டை
தொடுத்தீரே. (அம்ப)

௩. செம்மனக்கிழவிதந்திடும் பிட்டைதின்று வேலைசெய்யாமல்
விளையாடிகுதித்தீரோ, அதற் கும்மைப்பிரம்பினாலே யரசனடி
த்தாலனைத்துயிர்க்குமடிபடவிதித்தீரோ, எங்களம்மைசிவகா
மியிணைபிரியாதிருந்துமமுந்தச் திரசிலோர் பெண்மதித்தீரோ,
அன்பர் தம்மைவந்தாண்டருளுஞ் சிதம்பரேசரேநீர்தான் தா
ண்டிமுயலகனைத்தீண்டியேமிதித்தீரோ (அம்பல) (உக)

கீர்த்தனம். இ-ம். சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

ஏதுக்கித்தனைமோடிதானுமக் கென்றன்மேலையா

அநுபல்லவி.

பாதிப்பிறையைச் சடையிற்றரித்தபரமரே தில்லைப்பதிநடேசரே (ஏ)

சரணங்கள்.

௧. ஆட்டுக்காலெடுத் தம்பலத்தினின்றீ ரதனைச்சொன்னேனோ,
ஒற்றை - மாட்டுக்காரரென்றுருடனுகிலும்வாய்மதஞ்சொன்னே
னோ - தலை ஓட்டிலேயிரந்துண்டீரென்றந்தவுண்மையைச் சொ
ன்னேனோ, பல்லைக் காட்டிலேமுப்புரத்தார்முன்னே நின்றநக
தையுமெச்சிலுண்டதையுஞ்சொன்னேனோ (ஏது)

௨. சாதியுந்தாயுந்தகப்பனுமில்லாத்தனியரென்றேனோ, பெண்ணு
ற்பாதியுடையபாகிக்கள்ளனுஞ் சுமந்திட்டபறையரென்றேனோ, சா
தி பேதமாய்ப்பிள்ளைக்குக்குற வர்வீட்டிற்பெண்கொண்டீரெ
ன்றேனோ, மறை யோதிவணங்குநடேசரேயும்மை நானேப்பா
ருமில்லாத தப்பிலியென்றேனோ [ஏது]

௩, அழுந்தவேபிரம்படிப்பட்ட கூலியாளரென்றேனோ - தசை - க
ழிந்தவெள்ளெலும் பணிந்தடையித்திருக்காரரென்றேனோ, கட்ட
ப் - பழந்துணியின்றித்தோலுடுத்ததைப் பழிப்புச்சொன்னே
னோ, சிறு - குழந்தையைக்கொல்ல வஞ்சியவந்தகுட்டெல்
லாம் வெளிவிட்டுச்சொன்னேனோ (ஏதுக்) [௨௨]

கீர்த்தனம்-இ-ம்-கேதாரகவுளம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாருங்கள்வந்து-பாருங்களாட்டுது பாம்புபிடாரினையே.

அநுபல்லவி.

ஆருங்காணவேதில்லை யம்பலத்தில்வேடிக்கை
பார்லேபதமுயலோன் மேலேவைத்தவேடிக்கை (பாரு)

சரணங்கள்.

௧ ஆருரிற்புற்றிடமமர்ந்திருந்ததும்பேச்சு - ஆபரணமாய் மெய்யில
ணிந்ததும்வீண்பேச்சு, காருரில்விடமுண்டகதையைச்சொன்
ஞலேச்சு கைச்சிலைக்குக்காபிருய்க்கட்டியதுமென்னுச்சு (பாரு)

௨. ககனத்தகரவித்தை கற்றதனுலென்ன - கற்றுமெல்லாம்வல்லசி
த்தனுகியுமென்ன, சகலமந்திரத்திற்குந்தலைவனுகியுமென்ன- த
லையிற்கடிக்கேற்றபச்சிலைவைத்திருந்துமென்ன ,(பாருங்கள்)

௩, மைக்கணடமடந்தைகாணக் கைக்குள்மழுவைவைத்து - மாயவுயிராம் பந்தைக்காயச்செப்பில்மறைத்துத், தக்கதொழிலுக்கேற்ற கொக்கிறகைத்தரித்துச் - சபைக்கேற்றகூத்தாடச் சமர்த்தனென்பதையுற்றுப் (பாருங்கள்) [உ௩]

நிந்தாஸ்துதி

பதம்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னகாரியத்துக்கிந்தபேயாண்டிமேல்
இச்சைகொண்டாய்மகளே

அநுபல்லவி.

தன்னேரொருவரில்லாப் பொன்னம்பலவன்கண்ணில்
தழலைக்காட்டியெவர்க்குந் தழலைக்காட்டிவானேன் (என்)

சரணங்கள்.

௧. காடேஞ்சஞ்சாரம்வீடொன்றில்லாமல் - வேரே - காணேனுஸ்தியொருமாடேயல்லாமல். ஓடியிரந்தான்பசி யில்லாமற்பின்னுமுண்டானெச்[illegible]வேண்டாமென்றுசற்றுஞ்சொல்லாமல், ஓர்ந்துபார்த்தாலுருவருவந்தங்கெடுவானே - பேர்ந்தபிட்டைவிரும்பிப் பிரம்படிபடுவானே, சார்ந்தவரை யம்பலந்தனிலேற்றிவிடுவானே - தீர்ந்தபக்ஷநெற்றியிற் றிருநீற்றையிடுவானே (எ)

௨. சமர்த்தாய்த்தேட்டாண்மைதேடவறியாயோ - இந்தத் - தப்பிலிமேலாசையையெறியாயோ, இமப்புரட்டனென்பதுங் குறியாயோ - மழு - வெடுக்கும்வன்னெஞ்சனென்பவ தண்ணித்தான்பிரியாயோ, ஏதுசொன்னாலுநிசமென்றெண்ணு வாயென்சொல்லை - மாலைகொள்ளாதேகொண்டால்வருமேயதிகசல்லை - போலேயல்லாமலுள்ளே புட்டுக்காட்டினுற்கல்லை - தோலேயல்லாலுடுக்கத் துணையொன்றவனுக்கில்லை (என்ன)

௩. குதிரைமாறுடினையெத்தனடி - மெத்தக் - கொஞ்சமதியுடையபித்தனடி, முதுமையிளமையில்லாச்சுத்தனடி - சடை - முடிக்குளொருபெண்டீரையடக்குஞ் சமர்த்தனடி - முன்னம்நகைத்துச்செய்தான் முப்புரத்தாரைமோசம் - என்னசொல்லியுமுனக்கேனவனுடனேசம், அன்னங்கண்டறிவதற்கருதினம்பிரயாசம் பொன்னம்பலவனேயுட்புகுந்துபார்த்தாலாகாசம் (என்) [உச]

அம்பாடுணை.

# சிவகாமியம்மைபேரில் கீர்த்தனம்.

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

ஏனிந்தப்பராக்கு- வேளைமீதிலுனக் - கென்னவன்மமோவம்மா.

அநுபல்லவி.

பானந்தலவியபழனந்தனிற்கயற் பாயும்புலிசையிலாயன்றிசை முகன், வானிந்திரன்றொழு மானந்தநடேசர்வாமமுறுஞ்சிவ்காமசவுந்தரி

சரணங்கள்,

க. துக்கசாகரத் தழுந்திபருட்கரைபேறிமலன் - பிறவிச்சுழலிலலேலந் தலேந்துழலுந் தொழிலின்னமாறிலேன், பக்கந்தனிலெனக்குதவியுனேயன்றிவேறிலேன் - ஒழியாப், பாரப்பெருஞ்சமுசாரச்சுமைவிட்டுத்தேறிலேன் - அதனால், றிக்குவேறில்லேவருமைக்கலியிப்போதீர்த்திடாவிடிற்பார்த்தவர் கட்கெப்போ, மக்கண்மேற்பெற்றதாயார்க்கும்வெறுப்போ - வருத்தஞ்சொன்னால் காதை மறைத்ததன்னக்கொப்போ (ஏனி)

உ. சொல்லிமுடிகிற தெல்லாமனதின்விசாரமோ - முடியச்சோதிக்கமௌனஞ்சாதிப்பதும் பக்ஷபாரமோ - நல்லதல்ல - வுனக்கிதுவு நான்செய்த நேரமோ-என்னே - நடுவினினழுக விடுவதுனக்கலங்காரமோ, சொல்லச்சொல்லக், கல்லுங்கரையுமுன்னெஞ்சங்கரையாயோகடியபழிவரும்படி செய்தாய் நீயே அல்லல்வினைதொலேத்தாள வருவாயே - அடிமைப் படைத்தவர்க்காளக்கடன்றாயே (ஏனி)

ந, பிஞ்சுமதிறுதல்வஞ்சியெனும்பிராமியேசெய்வப் பிடிக்கு மொருகுறக்கொடிக்கும்வாய்த்த நன்மாமியே தஞ்சமெனு மடியார்களிடத்துறைவாமியே கொன்றைத் - தாமமணிந்திடுமேமசபைச்சிவகாமியே-உனதிரு, செஞ்சரோருகச் - சரணமேகதிதிரும்பியொருவரைச் செயஇடேன்றுதி அஞ்சேலஞ்சே வென்றாளவே விதியசட்டையினிச்செய்வதனைத்தும்பெண்மதி (ஏனி) [உகு]

மாரிமுத்தாப்பிள்ளைபாடியகீர்த்தனம் முற்றிற்று

௨

சீர்காழி

# அருணாசலக்கவிராயர்பாடியது.

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டகம்-அடதாளம்

பல்லவி.

தில்லைத்தலம்போலே சொல்லப்புவிமீதில்
தெய்வஸ்தலங்களுண்டோ நாளும்

அநுபல்லவி

சொல்லுந்தொளாயிரத்தொண்ணூற்றொன்பது தாயகலை
நிரைபாத்திரம்-எங்கும்போம்வருமோர்கலைமாத்திரம் ஆக
வாயிரமாஞ்சிவக்ஷேத்திரந் (தில்லை)

சரணங்கள்.

௧, பத்திமணிக்கோ...த்தைக்கண்டாற்சிவ பத்தியிலேமனந்தாக்
கும் அதை, உய்த்துவரவுரச்சித்தம்பரிசுத்த முள்ளே சிவஞான
ந்தேக்கும் அந்தநெற்றியிற் பூதிப்பொடித்தூள்கள் பட்டாலும்
நீங்காப்பிணி யெல்லாம்நீக்கும் வந்து சற்றேநமிதித்தாலு மெல்
லவர்க்குஞ்சிவ தன்மநினைவையுண்டாக்கும் பூர்வ கன்மவினை
களைப்போக்கும் மறு ஜென்மமெடாமலேகாக்கும் (தில்லை)

௨, நங்கைசிவகாமி சந்நிதிகாணவே நன்மையிலேநிலை நாட்டும் ம
ஹா, லிங்கத்திருமூலநாதரைச் சேவிக்கநெஞ்சுக்கவலையை யோ
ட்டும், ஆநந்தசபைதனைக் கண்களாற்காணவே அற்புதந்தானே
பாராட்டுஞ் சற்றுஞ் சங்கையில்லாச் சிவகங்கையின் மூழ்கியே
ஸ்நானஞ் செய்வார்க்கின் பங்காட்டுஞ் சிவ ஞானந்தப்பாமலே
கூட்டும் முத்தியானந்தத்தில்முழுக்காட்டுந் (தில்லை)

௩, கோடிமறையாலுஞ் சொல்லி முடியுமோ கோடான கோடியு
ல்லாசம் ஐயன் ஆடியபாதம் பணியாதபேருக் கதை விடவே
றுண்டோமோசம நாளுந் தேடியமூவரும்தேவரும்வந்து தின
ந்தினஞ்செய்குவார்வாசம் உண்மை நாடியசாலோகமே முதலா
கியநாலுமதிக்கும் விலாசம் ஒருக்காலும்வரா தெமபாசம் இது
வேபூலோககயிலாசம் (தில்லைத்) (௧)

உ

சிவமயம்.

இஃது வைத்தீசுரன்கோயில்,

# குமாரசாமிக்கவிராயர்பாடியது.

சொற்கட்டு அர்த்தமுள்ள கீர்த்தனம்

---

இ-ம்-சௌராஷ்டிகம்-ஆதிதாளம்.

பல்லவி

ஆடவெடுத்தபாதம் நம்மை யாளவெடுத்தபாதம்,

அநுபல்லவி

தோடவிழ்கஞ்சவாவி சூழுந்தில்லை ராஜர்
சுகமிழைத்துயிரை வருத்தும்பஞ்சமலத்
தொந்தமசலத் தொக்தோம்
தோந்தோம் தொந்தோக் தோமென் (ஆடவெடுத்த)

சரணங்கள்.

க, பறவைநுழைந்திடுங்குடம்பை அரவுரி பொற்பவசாகரத்துழ
லுடம்பை உருதியெனும் மடமைமாற்றி விடாய வழியுள்ளுஞ்செ
ல்லாமலேதேற்றி கரையேற்றி மறலியைவென்ற வெற்றிக் கழ
ல் கணீர் கணீரென்ன மலர்க்கையேந்தும வன்னி தகதக தகெ
னசருவசாட்சியாய் நின்று நடனந்தொழுதவர்க்கிகபர செல்வந்
த்குந்தகுந் தகுந்தகுந் தகுந்தகுந் தகுமென் (ஆடவெடுத்த)

உ, பொய்வகைமதங்களைப் போக்கி வேடமும்நீறும் பொருளென்
னுமெய்ம்மையையுண்டாக்கித் தெய்வத் தொழிலைந்து மிலங்கத்
தேவிமேல்வைத்த திருவருட்பார்வைதுலங்கக் கலிவிலகத் து
ய்யமலாச்சிலம்பு கலின் கலின்கலினென்னச்சுரரும் முனிவரரும
ஜெயஜெய ஜெயெனச் சைவவைதிகசிவ சமயம்மெய் கண்டதெ
ய்வந் தாந்தாந் தாந்தாந் தாந்தாந் தாந்தாந் தாந்தாந்தாமென் ()

ந, பரிசதகோடி போற்றூன்றியொரு பொற்பாதபதுமம் முயல்
சன்மேலூன்றி இருவ ரின்னிசையாழ்பாடப் புலியும் பாம்பு
மேத்திவணங்கிக் கொண்டாடச் சுருதிகூடத்திருமலைக்கந்தனூ
ந் தந்தனுந் தாதாவெனச் சிந்திகுமரன்மாலயன்றூதா வென
வொரு துடியன்பிலர்க்குந்தெரிசித்தளவில்லி டுண் டுண் டுண்
டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுணடுண்டென் (ஆடவெ) (க)

## நிந்தாஸ்துதி.

கீர்த்தனம் - இ-ம்- பரஸ் ஏகதாளம்.

பல்லவி.

திருக்கூத்திற்குத்துணிக் தம்பலந்தில்வந்துமின்னந்
திரைமறைவேன்சொல்லும்ஐயரே

அநுபல்லவி,

மருக்கூவிரும்புனை சடைமீதிலொருத்தியை
வைத்துக்கொண்டசெய்தி மறைத்தால்மறைக்கலாமோ (திரு)

சரணங்கள்

க, ஆதிக்கமனையாட்டி பாதிபுடம் பானத்தை யரிவார்களுல குள்
ளோர்யாரும் வாதுக்காடினகாலசந்துபோனத்தை நீர் மறைப்
பதெப்படி யெண்ணிப்பாரும் போதாக்குறைக்கு மூத்தமகன்
காற்சப்பாணிக்காற் புதுமையிதின்மேலுண்டோ வயிறும் பெறு
வயிறு ஏதுக்கென்றுசொல்லவுஞ் சமாதானந் தேவரீரிருக்கு
மிடம்வெளியென்றிருக்குஞ்சொல்லுமேதநீர் (திருக்)

உ, . இஷ்டமாயன்னம் பாலிருக்கத்தலையோட்டினிலிரந்த பித்தனெ
ன்றசொல்லடங்குமோ சட்டஞ் சட்ட மொருகண்ணில்லாதவ
னென்றுதரணியோர் சொல்லும்வார்த்தை மடங்குமோ பிட்டு
க்கொருத்தி கூலியாளாய்ச் சுமந்திதைப் பிரம்பினலடிபட்டபே
ச்சொளிக்குமோ வொரு சட்டியிற்கொக்க வித்தவேடனை யின்
றும் தலைக்கறிதனையுண்டுஞ்சைவமுதல்வனென்றுங் (திருக்)

ரு, ஹரஹராகோவண முமோடுந்திநடனீரென் பவர்வாயை நான்
மூடலாமோ, உரைபெற்ற திருக்கோவை யுரைத்த செந்தமிழ்க்
கோவை யுட்கொண்டதும்மை விட்டுப் போமோ ஒருவரறிந்
தாலல்லோரகசிய மூவாயிர வரறிந்திருந்து மென்றும ரகசிய
மோ, தெரிந்தவர்க்கு முத்தி யளிக்குஞ்சிலரே திருமலைக்குக
தாசன் றமிழ்க்கனுகூலரே (திருக்) (உ)

உ

சிதம்பரம் அமிர்தகவி

# குப்பையபிள்ளைபாடியது.

கீர்த்தனம் இராகம் நாத நாமக்கிரியை- ஆதிதாளம் — பல்லவி

தெரிசிக்கவேண்டும் கனகசபை தெரிசிக்கவேண்டும்

அநுபல்லவி

தெரிசித்தபொழுதங்கே தாமூர்த்திபெறலாகும்
பரதத்துடனேயனவரதத் தாண்டவருடன் (தெரி)

சரணங்கள்

க. சாத்திரம்ஆறுநால் வேதம்மதிற்றூணுகச்சமய மிருபத்தெட்டாகமுமென்பெரும்பூதம் போற்றியபதி னெண்புராணஞ் சிறுதாணுத்திரம்பொருந்தியகலையறு பத்துநாலும் பக்கத்தில் ஏற்றுங் கைமாரமும்விஷடியும் ஆற்றதிஞரமும் ஆணிவரிச்சும்.பாரத்த வெழுபத்திராயிரமா மிருநூற்றிபத்துநாலு புவனஞ்சுற்றி வரும் சமலந்தோற்றுந்தத்துவந்தொண் ணூற்றாறும் பல்கணிவாசல் தொடரொன்பதுகும்பமடரவிருந்ததின்பம் தொடுக்குஞ்சிற்றேடுமாயிரத் தொடுவடுக்குமேனுடுஞ்சுவாசமுந் தோயவேவிருபத்தோராயிரத்தறு நூறும்நேயுமெனும் நமச்சிவாயப்படிமுன்னின்று (தெரிசிக்க)

உ. கங்கையுந்தியமுந் தரித்தசடைமுடியும் கதித்த நெற்றியிற்பிறையுதித்ததிருவெண்ணீறும், பங்கயவதனமும் புருவச் சிலைமுக்கண்ணும் பதிந்தகாதிற்குண்டலமதித்தவிலைமண்டலந் தங்கு மூண்டவிடமும்மார்பிற்பணியுந் தொங்கு பொன்வடமுமாபரணமுஞ்செங்கையின்மழுமானு முடுக்கைடமருக முஞ்சிவந்த பீதாம்பரமுங்குவிந்தவிடையழகும நங்கையுமைபார்வதியிடத்தினின் மனமகிழ் நாகரீகமுந்தங்கத் தேகமொருபுறமும் நாதகிண்கிணியுந் தண்டைச்சிலம்பு பாதமேலணியும் புண்ணியன்மிகநாடும் முயலகன்மேலாடும்பொருளிருவர் தேடுங்கர்த்தனேயன்புகூடுமனமேகண்டு (தெரிசிக)

ங. இரணியவன்மன்வெண் பிணிதீரவேமன மிரங்கிக்கருணைபொழிவரங்கடருபவனை ஒருமுனிமகனுக்குகேயுயர் பயோததி தன்னையுரிமையுடனழைத்துப் பருகவளித்தவனை யரிமகன்றனையே நெற்றிவிழியாலெரிசெய்தவனையே முத்துத்தாண்டவர் சரசமானகவிக்குத்தருபதங்கொடுத்ததோனைச் சந்ததமடியவர்வந்துவணங்கிநின்று பரவுஞ்சிவனைச் செஞ்சொலமிர்தகவிதுதிசெய் பையரவணிந் தோனைவையகம்பண்ணுந்தோனைப் பகரும்பெய்யருளை மூவாயிரவர்மகிழுநம் பெருளைக் காலஷவிடுபாசந்தனிற் படாமனேசமாக ரட்சிக்குமாசிலாத நடராஜ மூகத்தியைநித்தம் (தெரிசிக்க) [க]

௨

காஞ்சிபுரம்

# சபாபதிமுதலியார்பாடியது.

(*)

கீர்த்தனம் - யமுனாகல்யாணி - இராகம் - ஆதிதாளம்.

(பல்லவி.)

தாண்டவஞ்செய்யும் வகைகேளும் எங்கள்நடேசர்
தாண்டவஞ்செய்யும் வகைகேளும்

(அநுபல்லவி)

வேண்டுவரம்அடியார்க் கீண்ட அருளும்எங்கள்
ஆண்டவன் அரவணிபூண்டவன்சிற்சபையில் தாண்டவம்.

(சரணங்கள்.)

௧. ஓதானந்தத்தாண்டவமொன்றும் நாளும்
உம்பர்கள்தொழுஞ்சபாதாண்டவமொன்றும்
தில்கவுரிதாண்டவமொன் றும்
திரிபுரத்தையெரித்ததாண்டவமொன்றும் காம
மோதுங்காளிதாண்டவமொன்றும்
முனியுமுனிவர்தாண்டவமென்பதொன்றும்
எகமில்சங்காரதாண்டவமொன் றடங்க
ஏழாமென்று எங்கள்தாமாயனுரைக்கும் தாண்டவம்.

௨. இத்தவுலகமுதலெல்லாம் படைக்கும்
எடுத்தவலக்கரத்திற்றமருகமென்றும் *
முத்துசாராசரத்தை யெல்லாம்அளிக்கும்
முளசிமலனாகிகரபயாஸ்தமென்றும் *
தத்தஅயன்முதலோ ரெல்லாம்அழியச்
சங்காரஞ்செய்யுங்இடக்கையமர்தீயென்றும் *
எந்தஉயிர்களையும் மறைக்கும்வீசுங்கை
எடுத்தாள் முத்திதருமென்றும் படிக்கும். தாண்டவம் *

௩. நகரம்தமருக வடிவாம் மகரம்
நல்லஅபயகரத்தின்வடிவாம *
சிகரம்தழலின் வடிவாம்வகரம்
திரோபவஞ்செய்கின்றவீசுகைவடிவாம் *
யகரம்அனுக்கிரகஞ் செய்யமுனங்
எடுத்தஇடக்கையின்வடிவாகுமென்றும் *
தகரவித்தை தனையறிந்துதொழத்
தக்கவடியாருளம் புக்கமரும்நடேசர் தாண்டவம். (க)

முற்றியது.